ஜனவரி 09 - ஜனவரி 15, 2011 January 09 - January 15, 2011 பக்கங்கள் - 28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்



## கூட்டமைப்பு எதிர்கொள்ளும் சவால்கள்

## பிரச்சினைகளுக்கு உள்ளேயா வெளியேயா நிற்பது சரி ?

# சீரழிந்த வடக்கு போக்கு வரத்துப் பாதைகள்

எந்தக் காலத்திலும் இல்லாத வகையில் இப்பொழுது வடக்கின் போக்குவரத்துக்கள் அதிகரித்து விட்டன. யாழ் கண்டி ஏ-9 பிரதான வீதி எப்பொழுதும் வாகனங்கள் நிறைந்ததாகவே இருக்கிறது. அணியணியாய் வாகனங்கள் வருகின்றன. சுற்றுலாப் பிரயாணிகளின் வாகனங்களும் பேருந்துகளும் பார ஊர்திகளும் என்று ஒரே பயண மயமாக ஏ-9 பாதை இருக்கிறது. அண்மைய நாட்களில் இந்தப் பாதை, போக்குவரத்தை அச்சுறுத்தும் வகையில் மிகவும் சிதைவடைந்த நிலையில் இருக்கின்றது.



யுத்தம் காரணமாக கடந்த பல வருடங்களாக பாதிப்புக்கு உள்ளான ஏ-9 பாதை அவ்வப்போது செப்பனிடப்பட்டு பாவிக்கப்பட்டு வந்தது. இப்பொழுது முழுமையாக



பாதிக்கப்பட்ட நிலையில் அந்தப் பாதையால் செல்லும் மக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகின்றார்கள். யுத்தம் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளுடன் அபிவிருத்தி செய்யப்படாத நிலையில் இப்பாதை அவ்வப்பொழுது பூசி மெழுகப்பட்ட நிலையில் இருக்கிறது.

யாழ்ப்பாணத்தலிருந்து வவுனியா வரையான பாதைகளே இப்படி சிதைவடைந்து குண்டும் குழியுமாக இருக்கின்றன. இதனால் வழமையாக எடுக்கும் போக்குவரத்து நேரத்தை விட மேலும் இரண்டு மணித்தியாலங்கள் கூட எடுக்கின்றன என்று வாகனச் சாரதிகள் தெரிவிக்கின்றார்கள். இதனால் தமது சேவை பாதிக்கப்படுகிறது என்கிறார்கள் அவர்கள். இதனால் மக்களின் அன்றாட இயல்பான நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன என்பதுதான் முக்கியமான பிரச்சினை.

போக்குவரத்துக்காக மிக அதிகளவு நேரத்தை செலவிட வேண்டியிருக்கிறது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா போன்ற பகுதிகளில் உள்ள அலுவலகங்களில் வேலை செய்பவர்கள் இதனால் சிரமங்களை எதிர்கொள்கிறார்கள். குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கு சேவை காரணமாக பாடசாலை செல்லும் ஆசிரியர்கள் நாளாந்தம் பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். வன்னியில் தங்கி கல்வி கற்பதற்கான வசதிகள் இல்லாத நிலையில் தாம் நாள் தோறும் வதிவிடங்களுக்கு திரும்புவதாக சொல்கிறார்கள்.

சாவகச்சேகரி, கொடிகாமம், ஆனையிறவு, கிளிநொச்சி நகரப் பகுதி முறிகண்டி போன்ற பல முக்கிய இடங்களில் முற்றாக பாதைகள் சிதைவடைந்துள்ளன. குண்டும் குழியுமாக காணப்படுகின்றன. அத்தோடு பாதைகள் சிதைவடைந்து கிடங்குகளில் மழைநீர் தேங்கி நிற்கிறது. அண்மைய நாட்களில் பெய்த மழையுடன் இந்தப் பாதைகள் மேலும் சிதைவுகளுக்கு உள்ளாகி உள்ளன.

பல தடவைகள் யுத்தம் நடந்த பகுதிகளில் ஏற்பட்ட கிடங்குகள் தற்காலிகமாக மூடப்பட்ட பொழுது அவை வீதிக்கு சமாந்தரமின்மையாகவும் உயர்ந்த திட்டுக்களாகவும் இருக்கின்றன. அவை தற்பொழுது பெருமளவில் சேதத்திற்கு உள்ளாகியுள்ளன. அவற்றில் வாகனங்கள் புதைந்தும் விடுகின்றன.

அண்மைய நாட்களில் இதனால் பல விபத்துக்கள் நிகழ்ந்து விட்டன. அண்மையில் கைதடியில் நடந்த விபத்து ஒன்றில் சுற்றுலாப் பேருந்து



ஒன்று சேதங்களுக்கு உள்ளானது. அதிர்ஷ்ட வசமாக உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை. அதைப்போலவே ஆனையிறவில் நடந்த விபத்து ஒன்றில் வட இலங்கை போக்கு வரத்து சபை பேருந்தின் முகப்புப் பக்கம் முற்றாக சேதமடைந்தது. அன்றும் பயணிகளுக்கு உயிரிழப்புக்கள் ஏதுவும் ஏற்படவில்லை.

சீரழிந்த பாதைகளில் பேருந்துகளில் செல்லும் மக்கள் பெரும் அவதிகளுக்கு உள்ளாகிறார்கள். பள்ளமும் புட்டியுமாக உள்ள வீதியில் பேருந்து துள்ளிக் கொண்டிருப்பதால் பிரயாணிகள் தூக்கித் தூக்கி வீசப்படுகின்றனர். இதனால் குழந்தைகள், முதியவர்கள், பெண்கள் காயங்களுக்கு உள்ளாகின்றனர். அண்மையில் குழந்தை ஒன்று தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்தது. அவர்களின் உடல் நலங்கள் பாதிக்கப்படுகின்றன. இதனால் பேருந்தில் பயணம் செய்த முதியவர் ஒருவர் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் அனைத்துப் பிரயாணிகளையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கிறது.

யுத்தம் முடிந்து பாதை திறக்கப்பட்ட பின்னர் வாகனங்களின் வருகைகள் மிகவும் அதிகரித்து விட்டன. அதிலும் பாரவூர்திகள் மிக அதிகமாக வருகின்றன. அதிகூடிய பாரங்களுடன் வரும் சில பாரவூர்திகள் புதைந்து பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாகின்றன.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வந்து சேருவதற்கிடையில் நான்கு பேருந்துகளில் ஏறி வந்ததாக ஒரு பயணி குறிப்பிட்டார். இந்தப் பாதைகள் இப்படி இருப்பதனால் வாகனங்கள் பழுதடைகின்றன. ரியுப் வெடித்து காற்றுப் போகிறது. வில்லுத்தகடு உடைந்து விடுகிறது என்று பல சேதங்களால் பயணங்கள் தாமதமாகின்றன.

யாழ்ப்பாணத்தின் உள்ளக பயணப்பாதைகளும் இப்படி சீரழிந்த நிலையில் இருக்கின்றன. அண்மையில் தீவகத்துக்கான பிரதான போக்குவரத்துப் பதையான பண்ணைப்பாலம் பாதை துண்டிக்கப்படும் அபாய நிலையில் இருந்தது. அந்தப் பாதையின் திருத்தப் பணிகள் இன்னும் முடிவுறாத நிலையில் உள்ளன. இதனால் ஆபத்து பொருந்திய நிலையில்தான் மக்கள் பயணிக்கிறார்கள். குண்டும் குழிகளுமாக உள்ளது அந்தப் பாதை.

வன்னியின் உள்ளக போக்குவரத்து பாதைகளின் நிலமையும் கடும் மோசமாக இருக்கிறது. பெருமளவான பாதைகள் கிரவல் மண் பாதைகளாக உள்ளன. மழை காரணமாக வீதியில் உள்ள கிடங்குகளில் வெள்ளம் தேங்கி நிற்கிறது. பாலங்கள், நீர் தடுப்புக்கள், நீரோட்ட வழிகள் என்பன பாதிக்கப்பட்ட நிலையில் பல வீதிகளிருக்கின்றன. கிளிநொச்சியின் மேற்குப் பக்கத்தில் உள்ள பாதைகளில் முறிகண்டிக்கும் அக்கராயனுக்கும் முழங்காவிலுக்கும் இடையிலான பாதை மற்றும் கிளிநொச்சிக்கும் ஸ்கந்தபுரத்துக்கும் இடையிலான பாதை என்பன சேதமுற்றிருக்கின்றன.

பரந்தன் முல்லைத்தீவு பாதை, கிளிநொச்சி வட்டக்கச்சிப் பதை



என்பன கடும் சேதங்களுடன் இருக்கின்றன. வட்டக்கச்சி கிளிநொச்சி பாதை முழுக்க குண்டுகளினாலும் குழிகளினாலும் நிரம்பி உள்ளது. பேருந்துகள் அட்டை போல நகர்ந்துதான் செல்கின்றன. இப்படியான உள்ளூர் பகுதிகளுக்கான போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் காலாவதியான பேருந்துகள் மேலும் அவதிப்படுகின்றன.

வடக்கின் வசந்தம் போன்ற திட்டங்கள் மிகவும் பெரும் பிரசாரங்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் மக்களின் அன்றாட தேவையில் மிக முக்கிய பங்கு வகிக்கும் பாதைகள் இன்னும் திருத்தப்படவில்லை. மக்களின் உயிரையும் குடிக்கும் நிலையிலு[illegible] வாகனங்களை சேதமுற வைக்[illegible] நிலையிலுமே பாதைகள் உள்[illegible] இதனால் இப்பொழுது ஏ-9 பா[illegible] ஊடான பயணம் தாமதம் என்[illegible] பிரச்சினையை விட மிகவும் [illegible] கொண்டதாக மாறியிருக்கிற[illegible] என்பதுதான் பயணிகளை [illegible] அச்சுறுத்துகிறது.

**தீபச்செல்வன்**

WESTERN UNION | yes!

money transfer

yes!

# வெஸ்டர்ன் யூனியன் மூலம் வெளிநாட்டிலிருந்து பணத்தினைப் பெற்று பெறுமதி மிக்க பரிசுகளை வென்றிட ஒரு அரிய சந்தர்ப்பம்!



மாதாந்த சீட்டிழுப்பின் மூலம் தங்க நாணயங்களை வென்றிடும் அதிர்ஷ்டசாலிகள் ஐவரில் ஒருவராகவோ அல்லது ஐரோப்பாவிற்கான பயணமொன்றினை வென்றிடும் அதிர்ஷ்டசாலிகளாகவோ விரும்புகிறீர்களா?

2010 ஒக்டோபர் 20ஆம் திகதியிலிருந்து எந்தவொரு வட பிராந்திய வெஸ்டர்ன் யூனியன் பிரதிநிதிகள் மூலமாகவும் பணத்தைப் பெற்றுக்கொண்டால், மாதாந்தம் இடம்பெறும் அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் நீங்களும் பங்குபற்றி தங்க நாணயங்களையும், இருவர் ஐரோப்பா பயணிப்பதற்கான அதிர்ஷ்டத்தினையும் வென்றிடலாம்

| சீட்டிழுப்பு | வெற்றியாளர் தொகை | சீட்டிழுப்பு திகதி | பரிசுகள் |
|---|---|---|---|
| 1 வது சீட்டிழுப்பு | 05 | 24 நவம்பர் 2010 | 5 தங்க நாணயங்கள் |
| 2 வது சீட்டிழுப்பு | 05 | 28 டிசெம்பர் 2010 | 5 தங்க நாணயங்கள் |
| 3 வதும் இறுதியுமான சீட்டிழுப்பு | 07 | 17 ஜனவரி 2011 | 5 தங்க நாணயங்களுடன் இருவருக்கான ஐரோப்பா பயண டிக்கெட் |

தாமதம் செய்யாதீர்கள்! உடனேயே பணம் அனுப்புபவருக்கு அறிவித்து பெறுமதிமிக்க பரிசுகளை 'றிடும் சந்தர்ப்பத்தினைப் பெறுங்கள்.

மேலும் விபரங்களுக்கு எந்தவொரு வெஸ்டர்ன் யூனியன் பிரதிநிதி நிலையங்களையும் அணுகுங்கள்.

## வெஸ்டர்ன் யூனியன்

- விரைவானது
- நம்பிக்கையானது
- இலகுவானது
- சட்டபூர்வமானது
- நாடளாவிய 4100 பிரதிநிதிகளையும் இலங்கையின் வட பகுதியில் 70 கிளைகளையும் உள்ளடக்கியது.

- இந்நிகழ்வு 2010 ஒக்டோபர் 20ஆம் திகதி ஆரம்பித்து 2011 ஜனவரி 15ஆம் திகதியுடன் முடிவடையும்.
- 5 தங்க நாணயங்களின் வெற்றியாளர்கள் ஒவ்வொரு மாதமும்: 24 நவம்பர் 2010, 28 டிசெம்பர் 2010, 17 ஜனவரி 2011. ஒரு சீட்டிழுப்பில் பங்குபற்றும் ஒருவர் ஒரு தங்க நாணயத்தினை மாத்திரமே வெல்லலாம். வெஸ்டர்ன் யூனியன் 'மூலம் பணம் பெற்றுக்கொள்ளும் ஒருவர் எத்தனை சீட்டிழுப்பிலும் பங்குபற்றலாம்.
- எந்த அளவு பணத்தினைப் பெற்றுக்கொண்டாலும் ஒரு பரிமாற்றத்தினை மேற்கொள்ளும் ஒருவர் ஒரு முறை மாத்திரமே பங்கு பற்றுவதற்கு தகுதியுடையவராவார்.
- ஐரோப்பா பயணத்திற்கான வெற்றிபெறும் தகுதி இருவருக்கு உரியது.
- இச்சீட்டிழுப்பு 2011 ஜனவரி 17 ஆம் திகதி இடம்பெறும்.
- இதன் ஏற்பாட்டாளர் முன்னறிவத்தலின்றி பயணிக்கும் நாட்டில் மாறுதலை ஏற்படுத்தலாம்.
- வெற்றியாளாகள் தமது பரிசுகளை 2011 ஜனவரி 22ஆம் திகதி இடம்பெறும் இறுதி இசை விழாவின்போது பெற்றுக்கொள்ளலாம். பரிசுகளை பெறுவதற்கான இறுதித் திகதி 2011 பெப்ருவரி 15ஆம் திகதியாகும். பயணச் சீட்டுகளை வெல்வோர் பயணிக்கும் தினத்தினை சீட்டுகளை பெறமுன்னரே அறிவிக்கவேண்டும்.
- ஏற்பாட்டாளரின் அனுமதியுடன், விமானச் சீட்டினை பணமாக மாற்றிக் கொள்ளலாம்.
- பயணச் சீட்டும், சேவையும் மூன்றாந்தரப்பினர் அல்லது பயண முகவரினாலோ மேற்கொள்ளப்படும். இச்சேவையினரால் அளிக்கப்படும் சேவைக்கோ பயண செலவு மற்றும் மேலதிக வரிக்கட்டணங்கள் வீசா கட்டணங்கள் அல்லது பயணத்தின்போது ஏற்படும் செலவுகளுக்கு வெஸ்டர்ன் யூனியன் பொறுப்பாளிகள் அல்ல.

**தங்க நாணயங்கள் மற்றும் ஐரோப்பா பயண அதிர்ஷ்ட சீட்டிழுப்பு நிபந்தனைகளையும் சட்ட திட்டங்களையும் உள்ளடக்கும்**

licence No. WP/GT/3168

பிரதான பிரதிநிதிகள்

MMBL Money Master | NDB வங்கி | மக்கள் வங்கி | ශ්‍රී ලංකා තැපෑල இலங்கை அஞ்சல் SRI LANKA POST | UNION BANK

# கூட்டமைப்பு எதிர்கொள்ளும் சவால்கள்

இலங்கையில் இப்போது இரண்டு கூட்டமைப்புக்கள் உள்ளன. ஒன்று ஆட்சியில் இருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு. அதாவது, மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம். இதனை ஒரு தேர்தல் கூட்டு என்று வாதிடலாம். ஆனால், இந்தக் கூட்டமைப்பு உள் விருப்பங்களற்று, தேவைகளின் நிமித்தமாக ஒன்றிணைக்கப்பட்ட கூட்டமைப்பு. இது கொள்கைகளின் அடிப்படையில் 'ஒன்றிணைந்த கூட்டமைப்பு' அல்ல. தேவைகளின் அடிப்படையில் ஒன்றிணைக்கப்பட்ட கூட்டமைப்பு.

அதாவது, அரசாங்கம் இன்று அறிவித்திருக்கும் அபிவிருத்தி அரசியல் அல்லது தேசத்தை அபிவிருத்தி செய்தல் என்ற அடிப்படையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உருவாகவில்லை.

அதிகாரத்தைச் சுவைப்பதற்கும், ஆட்சியில் இடத்தைப் பெறுவதற்கும், இவற்றின் மூலம் தமது நலன்களை நிறைவேற்றிக்கொள்ளவுமே பெரும்பாலான அரசியற் கட்சிகள் இந்தக் கூட்டமைப்பில் ஒன்றிணைக்கப்பட்டன. சில கட்சிகள் தாமாக ஒன்றிணைந்துகொண்டதற்கும் இதுவே காரணம்.

ஆகவே, தேவைகள்-நலன்கள்-சுயவிருப்புக்கள் போன்ற காரணங்களால் ஒன்றிணைக்கப்பட்ட இந்தக் கூட்டமைப்பு இப்போது உள்முறுகல்களால் விரிசல் கண்டுவருவதாக செய்திகள் வெளியாகத் தொடங்கியுள்ளன.

இந்தக் கூட்டமைப்பில் ஒன்றிணைக்கப்பட்டவர்களுக்கு பெரும் பேரங்கள் வழங்கப்படுவதாக உறுதியளிக்கப்பட்ட நிலையிலேயே இவர்கள் ஒன்றிணைவதற்குச் சம்மதம் தெரிவித்தனர்.

எனவேதான், இலங்கையின் அமைச்சரவை மிகப் பெரியதாக உள்ளது. மேலும் அது நீண்டு விரிவடையலாம் என்றும் கூறப்படுகிறது.

என்னதான் இருந்தாலும் கொள்கையின் அடிப்படையில் இல்லாமல் பிற விருப்பங்கள்-நோக்கங்களின் அடிப்படையில் ஒன்றிணைக்கப்படுவோரைத் திருப்திப்படுத்துவதற்கு நிறைய கொடைகளை வழங்கவேண்டும்.

இவ்வாறு தமது தேவைகளையும்-விருப்பங்களையும்



நிறைவேற்றிக்கொள்வதற்காக ஒன்றிணையும் தரப்புக்கள் ஒருபோதும் எதிலும் நிறைவடைவதில்லை. இந்தத் தரப்புகளுக்கு எதை, எவ்வளவு அளவில் வழங்கினாலும் அவை ஒருபோதும் திருப்தியடைவதும் இல்லை.

ஆகவே, இந்தத் தரப்புகளுக்கு எவ்வளவை வழங்கினாலும் அவை திருப்தியடையாமல் மீண்டும் மீண்டும் எதிர்பார்த்துக்கொண்டும், கேட்டுக்கொண்டுமே இருக்கும்.

ஆனால், அப்படி எல்லாவற்றையும் ஓர் எல்லைக்கு மேல் வழங்க அரசாங்கத்தினால் முடியாது. இந்தச் சந்தர்ப்பத்தில் அதிகார துஷ்பிரயோகத்தின் மூலமும், ஊழலின் மூலமும் குறிப்பிட்ட தரப்புகள் தமது தேவைகளைப் பெற்றுக்கொள்ள முற்படுகின்றன.

இலங்கையில் ஊழல் மிகுந்து செல்வதற்கு இதுவும் ஒரு பிரதான காரணமாகும். இவ்வாறு ஊழலும், அதிகார துஷ்பிரயோகமும் நடக்கும்போது அதைத் தட்டிக்கேட்கும் நிலையில் அரசாங்கம் இருப்பதில்லை.

ஆட்சிக்கான பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் ஒன்றிணைக்கப்பட்ட இந்தத் தரப்புகளை, ஆட்சிக்கான ஆதரவுத் தளத்தை தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்ற காரணத்துக்காக முடிவற்ற சமரசத்தைச் செய்ய வேண்டிய நிலை அரசாங்கத்துக்கு ஏற்படுகிறது.

ஆட்சிக்கான கூட்டுகள் அல்லது



தேர்தல்காலக் கூட்டுகள் ஏற்படுவது ஒரு பொது வழமை. இப்படி அமையும் கூட்டுகள் எல்லாம் ஊழல், மோசடி, அதிகாரப் போட்டி போன்றவற்றில் ஈடுபடவேண்டும் என்றில்லை. அப்படியாக இணைந்துகொண்ட தரப்பினர் நடந்துகொள்வதும் இல்லை.

ஒரு பொது நோக்கிலும், பொது இலக்கிலும் நாட்டின் நலனை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றன பல நாடுகளில் உள்ள கூட்டுக்கள்.

ஆகையால் அங்கே அபிவிருத்தி, ஜனநாயக உரிமைகள் போன்ற விடயங்களில் குறிப்பிடத்தக்க அளவிலான முன்னேற்றங்கள் ஏற்படுகின்றன.

ஆனால், இலங்கையில் கூட்டு அமைக்கும் தரப்புகளால் நாடு எந்தப் பெரிய நன்மைகளையும் அடைந்ததென்று இல்லை.

குறிப்பாக சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமராக இருந்த 1970 களில் இடதுசாரிகளின் கூட்டு முக்கிய அம்சமாக இருந்தது. ஆனால், தேசிய இனப்பிரச்சினை தொடக்கம் எந்த முக்கிய விவகாரங்களுக்கும் ஒரு தீர்வையோ, நல்ல சூழலையோ அந்தக் கூட்டு ஏற்படுத்தவில்லை.

பதிலாக 1977 தேர்தலில் ஐ.தே.க பெரு வெற்றியடையவும், ஜே.ஆர் சர்வ வல்லமையுடைய ஜனாதிபதியாக மாறவுமே அது உதவியது. அதாவது, நிறைவேற்று அதிகாரமுடைய ஒரு ஜனாதிபதி ஆட்சி முறையை உருவாக்கு வதற்கான சூழலை சிறிமாவோவின் ஆட்சி உருவாக்கியது.

சிறிமாவோவின் ஆட்சித் தவறுகளும்-குறைபாடுகளும் ஐ.தே.கவுக்குப் பேராதரவை



வழங்கின. இந்தப் பேராதரவை வைத்துக்கொண்டு ஜே.ஆர் தனது கைவரிசையைக் காட்டினார்.

பின்னர் பொதுஜன ஐக்கிய முன்னணி என்ற கூட்டை சந்திரிக்கா குமாரதுங்க உருவாக்கினார். ஐ.தே.க ஆட்சியின் கசப்பான அனுபவங்கள் இந்தக் கூட்டுக்கான அமோக ஆதரவை வழங்கியிருந்தன.

எனினும், சந்திரிக்கா குமாரதுங்கவின் கூட்டு அமைப்பினாலும் எத்தகைய முன்னேற்றங்களையும் கண்டடைய முடியவில்லை. பதிலாக உள்நெருக்கடிகளே வலுக்கத் தொடங்கின. சந்திரிக்கா குமாரதுங்கவை நம்பியவர்களும், சந்திரிக்கா குமாரதுங்க நம்பியவர்களும் உள்முரண்பாட்டுச் சிக்கலுக்கு உள்ளாகினர்.

இறுதிவிளைவு மதிப்பிழக்கப்பட்ட ஒரு ஜனாதிபதியாக-தனிமைப்படுத்தப் பட்டவராக சந்திரிக்காவை மாற்றியது. கூட்டாளிகள் வேறிடம் நோக்கி-தமது மேய்ச்சல் தரைகளை நோக்கி நகரத் தொடங்கிவிட்டனர்.

பின்னர் உருவாகிய கூட்டே இப்போதுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பாகும். பெயரளவில் இது ஒரு பொதுச் சின்னத்திலும், பொதுப் பெயரின் கீழும் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் இதில் அங்கம் வகிக்கின்ற தரப்புகள் ஒவ்வொன்றும் தனித்தனியான இயல்பையும், நோக்கையும் கொண்டவை.

எனவே, இவற்றைப் பொது நோக்கில் இணைப்பதற்கு வலுவான கொள்கையும், நோக்கும் இருந்திருக்க வேண்டும். குறிப்பாகப் போரினால் பின்னடைந்திருக்கும் நாட்டின் பொருளாதார விருத்தியை மேம்படுத்துவதற்கான சிறப்புத் திட்டம், சிக்கலடைந்திருக்கும் இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான திட்டம், அதை நடைமுறைப்படுத்தி முடிப்பதற்கான கால எல்லை போன்ற முக்கிய விடயங்களில் இணக்கப்பாடும்-உறுதிப்பாடும்



கொள்ளப்பட்டிருக்குமானால், கூட்டமைப்புக்குள் பிணக்குகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைந்திருக்கும்.

இங்கே நடந்துகொண்டிருப்பவை அதிகாரப் போட்டியும் ஆதாயப் போட்டிகளுமே. அவர்களுக்கான அமைச்சுக்கள் தொடக்கம் அதிகார எல்லை வரை இழுபறிகள் நிலவுகின்றன.

கிடைக்கின்ற தகவல்களின்படி வெளியுலக அழுத்தங்கள்-நெருக்கடிகளையும் விட, வெளிச் சக்திகளின் நெருக்கடிகளையும் விட உட்கட்சியின் அதிக சவாலைச் சந்திக்கவேண்டிய நிலையில் இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இருக்கிறார் என்று தெரிகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உள்வீட்டு விவகாரங்கள் இன்று வெளியே பகிரங்கமாகக் கதைக்கவும்-விமர்சிக்கவும்படுகின்றன. புதிய அமைச்சரவையில் பஸில் ராஜபக்ஷவுக்கா அல்லது டி.எம்.ஜயரட்னவுக்கா பிரதமர் பதவி வழங்கவேண்டும் என்ற கேள்வி எழுமளவுக்கு இந்த நிலையில் பஸிலைத் தவிர்த்திருந்த ஜனாதிபதி டி.எம்.ஜயரட்னவைத் தேர்ந்தது ஒப்பீட்டளவில் புத்திசாலித்தனமாகவே இருந்தது.

எனினும், குடும்பத்தின் அடுத்த எழுச்சிக்குரிய நாயகனாக பஸில் ராஜபக்ஷ காணப்படுவதால் அவரைச் சுற்றி கொஞ்சப்பேர் ஆதரவு வலையத்தை அமைத்துள்ளனர். பஸிலையும் விட நாமல் ராஜபக்ஷவின் குரலுக்கு ஜனாதிபதி காதைக்கொடுக்கிறார் என்பதால், இன்னொரு தரப்பினர் நாமலைச் சுற்றி ஆதரவு வலையத்தை எழுப்புகின்றனர்.

குறிப்பாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இரண்டு வலுவான காந்தக்கட்டிகள் இருக்கின்றன என்றும், ஒருவர் பஸில் ராஜபக்ஷ மற்றவர் நாமல் ராஜபக்ஷ என்றும் பரவலாகவே மக்கள் கதைப்பதாக இந்த இடத்தில் இணைத்துப் பார்க்கலாம்.

கூட்டமைப்பின் பிற கட்சிகள், தலைவர்கள், அரசியல் பிரமுகர்களையும் விட இந்த இரண்டு ஜூனியர் ராஜபக்ஷகளும்தான் அதிகமான ஒளிவட்டத்தோடு இருக்கின்றனர்.

அருள் மனோகரன்

இது ஏனைய தலைவர்களுக்கும், மூத்த உறுப்பினர்களுக்கும் முகச்சுழிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த நெருக்கடியின் விளைவு இன்னொரு மாற்றத்தை ஏற்படுத்தியே தீரும்.

*

# தி.மு.க-காங்கிரஸ் உறவை முறிக்க மற்றொரு வாய்ப்பு

தமிழக காங்கிரஸ் என்றாலே கோஷ்டிகள் இருந்துதானே ஆகவேண்டும் என்று சொல்லுமளவுக்கு கோஷ்டிக் கட்சியாகப் புகழ்பெற்றது தமிழகத்தில் உள்ள காங்கிரஸ் கட்சியாகும். தங்கபாலு அணி, வாசன் அணி, சிதம்பரம் அணி என்று ஏகப்பட்ட அணிகள் தமிழக காங்கிரஸுக்குள் உள்ளன. இவற்றில் வாசன் அணிதான் உண்மையில் தொண்டர்பலம் கொண்ட அணி. பணபலம் அதிகம் உள்ள அணியும் அதுதான். நேர்மையான தலைவர்களைக் கொண்ட அணிகூட அந்த அணியே. பண்ணையார் சமூகத்தினரான ஜி.கே.மூப்பனார் தஞ்சாவூர் மாவட்டத்தில் பரம்பரை சொத்துக்காரர் என்பது தெரிந்த விடயம். பணத்துக்காக அரசியல் நடத்தும் குடும்பம் மூப்பனார் குடும்பமல்ல என்பதும் உலகறிந்த சங்கதிதான். அந்த மூப்பனாரின் வாரிசு தந்தை இறந்தபின் அவரது தமிழ் மாநில காங்கிரஸை தாய்க்கட்சியான காங்கிரஸுடன் சிறு தயக்கமும் இன்றி இணைத்தார். அப்போது தமிழகக் காங்கிரஸுக்கு தலைமைதாங்கிய இளங்கோவன் இதை முன்னின்று நடத்திவைத்தார். பின்னர் தமிழ்நாடு காங்கிரஸின் தலைமைப் பதவியும் வாசனுக்குத் வழங்கப்பட்டது. அவர் ராஜ்யசபா எம்.பியாகி மத்திய மந்திரியும் ஆக்கப்பட்டார். அந்தப் பின்னணியில் கே.வி.தங்கபாலுவுக்கு தமிழக காங்கிரஸின் தலைமைப் பதவி வழங்கப்பட்டது. ஏற்கனவே தங்கபாலு 1996-1998 காலப்பகுதியில் தமிழக காங்கிரஸ் தலைவராக இருந்துள்ளார். வாசன் முதன்முதலில் மத்திய மந்திரியானபோது அவருக்கு முக்கியத்துவம் குறைந்த புள்ளிவிவர திட்டமிடல் அமைச்சே வழங்கப்பட்டது. அப்போது, அவரது ஆதரவாளர்கள் முணுமுணுக்கத் தொடங்கினர். இருந்தும் வாசன் நேரு குடும்ப விசுவாசத்தை



விட்டபாடில்லை. அதன் பலனாக இந்த முறை புதிய அரசு அமைந்தபோது மிகமுக்கியத்துவம் வாய்ந்த பணம் கொழிக்கும் துறையான கப்பல் போக்குவரத்துத் துறை வாசனுக்கு வழங்கப்பட்டது. பிரதமரே மனமுவந்து இதை அளித்ததாக செய்திகள் அடிபட்டன. ஏனென்றால், ஏற்கனவே சேதுசமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற இந்தத் துறையை எங்களிடம் தரவேண்டும் என தி.மு.க கோரி, இத்துறையை ரி.ஆர் பாலுவுக்கு பெற்றுக்கொண்டது. ஆனால், பாலு ஊழலும் செயல்திறனும் அற்ற அமைச்சர் என்பது ஆதாரங்களுடன் பிரதமர் அலுவலகத்துக்குத் தெரிவிக்கப்பட்டது. கோபமடைந்த பிரதமர் இம்முறை எந்த அமைச்சும் ரி.ஆர் பாலுவுக்குத் கொடுக்கப்படமாட்டாது. அதற்குப் பதில் தி.மு.கவிலிருந்து எந்தப் பிசாசையாவது வேண்டுமானாலும் கொண்டுவருவாங்கள் என்று பிரதமர் கடுப்பாகக் கூறிவிட்டாராம். செயல்திறனற்ற கப்பல்துறை அமைச்சை நிர்வகிக்க நேர்மையான பண ஆசையற்ற வாசன் தான் சரியான ஆள் என சோனியா, மன்மோகன் இருவரும் இணைந்து முடிவெடுத்தனர். அதற்கு கைமேல் பலனாக கப்பல்துறை அமைச்சு வாசன் தலைமையில் வளம்கொழிக்கும் அமைச்சாக ஒன்றரை ஆண்டுகளுக்குள் மாற்றப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. சேது சமுத்திரம் முதலான சர்ச்சைக்குரிய விடயங்களைத் தூக்கிப்பிடிக்காது நடைமுறைச் சாத்தியமான தூத்துக்குடி-கொழும்பு கப்பல்சேவை என பல திட்டங்களை வாசனின் அமைச்சு தீட்டியுள்ளது. இவ்வாறு பிரதமரின் பாராட்டைப் பெற்ற வாசனை முன்னிலைப்படுத்த இளங்கோவன் தரப்பு முடிவெடுத்துள்ளது. வாசன் தரப்பும் இதற்கு இணங்கியுள்ளது. காரணம், சமீபகாலமாக சிதம்பரம் தரப்பு மிக பரந்துபட்ட அளவில் தனது ஆதரவாளர்களை முக்கிய பதவிகளில் நிறுத்தியுள்ளதுதான். சிதம்பரம் ஆதரவாளரான விஸ்வநாதன் காஞ்சிபுரத்திலும், அழகிரி கடலூரிலும் முதல் தடவையாக காங்கிரஸ் எம்.பிகளாகத் தெரிவாகியுள்ளனர். முன்பு சிதம்பரம் தனது தொகுதிக்கே வராத மத்திய அமைச்சராக மட்டுமே அறியப்பட்டிருந்தார். ஆனால், அவரது மகன் இளைஞர் காங்கிரஸில் சேர்ந்தபின்னர் மகனுக்கு தனது மாநிலத் தளத்தைப் பலப்படுத்தும் முயற்சியில் சிதம்பரம் இறங்கியுள்ளது தெளிவாகத் தெரியும் உண்மையாகும். அதைவிட முக்கிய அம்சம் சிதம்பரத்துக்கும் கலைஞருக்கும் உள்ள நெருக்கமாகும். 1996 இல் தமிழ் மாநில காங்கிரஸ்-தி.மு.க அணி உண்டானதில் இருந்து கலைஞரும் சிதம்பரமும் தொடர்ந்து நட்பாகவே இருந்துள்ளனர். தமிழ் மாநில காங்கிரஸ் தி.மு.கவின் உறவை முறித்து 2001 இல் ஜெயலலிதாவுடன் கூட்டணிவைத்தபோது மூப்பனாரின் உறவைக்கூட சிதம்பரம் உதறிவிட்டார். 'ஜெ'யுடன் கூட்டணி கூடாது என்பதே சிதம்பரத்தின் ஒற்றைக் கொள்கையாகும். இன்றுகூட சோனியாவுடன் உறவுபூண ஜெயலலிதாவுக்கு பிரதான தடையாக இருப்பவர் சிதம்பரமே. சிதம்பரம் மட்டும் இல்லாவிடில் காங்கிரஸ்-அ.தி.மு.க உறவு எப்போதோ மலர்ந்திருக்கும் என்கிறார்கள் நோக்கர்கள். மறுதலையாக சோனியாவுடன் உறவைப்பேண கலைஞருக்கு முக்கிய பாலமாகத் திகழ்பவரும் சிதம்பரமே. அந்த வகையில் சிதம்பரத்தைப் பகைத்துக்கொண்டது எத்தகைய இமாலய தவறு என்பதை 'ஜெ' இந்நேரம் புரிந்துகொண்டிருப்பார். அது மட்டுமா? தமிழகத்தில் காங்கிரஸ் கட்சிக்குள் 'ஜெ'யின் துதிபாடிகள் நிறையப்பேர் முற்காலத்தில் இருந்தனர். அதிகமேன், கே.வி.தங்கபாலுவே 'ஜெ'யின் அடிவருடியாக இருந்தவர்தான். ஆனாலும், தான் முதல்வரான பின்னர் தங்கபாலுவையே 'ஜெ' எடுத்தெறிந்தார். வெறுத்துப்போன தங்கபாலு முற்றுமுழுதாக கலைஞரிடம் சரணடைந்தார். இன்று தி.மு.கவுடன் உறவைத் தொடரவேண்டும் என விடாப்பிடியாக சோனியாவை வலியுறுத்துபவர் தங்கபாலுவே. தங்கபாலு போலவே முன்னாளில் 'ஜெ'யின் ஆதரவாளராக இருந்த மற்றொரு காங்கிரஸ் தலைவர் விழுப்பாடி ராமமூர்த்தி. அவரும் பிற்காலத்தில் 'ஜெ'யை வெறுத்து விலகிச்சென்றார். இந்த வரிசையைச் சேர்ந்த காங்கிரஸ் தலைவர்கள் நிறையப்பேர் இருந்துள்ளனர். மணிசங்கர் ஐயர்கூட ஒருகாலத்தில் 'ஜெ'யின் தீவிர தொண்டராக விளங்கிய காங்கிரஸ் தலைவரே. அவரும் இன்று 'ஜெ'யின் பேச்சை எடுத்தால் 'பிச்சை வேண்டாம் தாயே நாயைப் பிடி' என்ற நிலையிலேயே உள்ளார். மொத்தத்தில் தமிழக காங்கிரஸுக்குள் தனக்காக பரிந்துபேச எவருமே இல்லை என்ற பரிதாப நிலையிலேயே 'ஜெ' உள்ளார். ஜெயலலிதா-காங்கிரஸ் கூட்டணிக்காக ''இப்படித் தியாகம் செய்தார், அப்படித் தியாகம் செய்தார்'' என அவர் சார்பில் வாதிடும்படியாக எதுவுமே இல்லை; வாதிடுவதற்கு எவருமே இல்லை என்பதுதான் யதார்த்தமாகும். இதனால்தான் அ.தி.மு.க-காங்கிரஸ் கூட்டணி உருவாவது இவ்வளவுதூரம் சாத்தியப்படாத ஒன்றாக உள்ளது என்பதும் கவனிக்கத்தக்கது.

மறுதலையாக ஜெயலலிதா ''இப்படி காங்கிரஸின் முதுகில் குத்தினார்; அப்படி எடுத்தெறிந்தார்'' என எதிர்ப்பக்கமாகப் பேசுவதற்கே நியாயங்கள் அதிகமுள்ளன. அதுமட்டுமன்றி சோனியா, சிதம்பரம் போன்ற முக்கிய தலைவர்களை தனிப்பட்ட ரீதியாக விமர்சனம் செய்தது அத்தலைவர்களால் மறுக்கமுடியாத ஒன்றாகவே உள்ளது. எனினும், இளங்கோவனுடன் சேர்ந்து வாசனும் தமிழகத்தில் தி.மு.கவுடன் கூட்டணி வேண்டாம் என கூறியிருப்பதாக சமீபத்தில் செய்திகள் அடிபடத் தொடங்கியுள்ளன. இளங்கோவனைப்போல வாசன் எடுத்தேன்-கவிழ்த்தேன் என்று செயற்படக்கூடியவரல்லர். எனவே, அவர் தி.மு.கவுக்கு எதிராகப் பேசியிருப்பார் என நம்புவது மிகக் கடினமாகும். தங்கபாலு தி.மு.கவுக்கு விசுவாசமாக நடப்பதற்கு தனிப்பட்ட காரணம் உள்ளதென இளங்கோவன் கூறுவது உண்மையாகவே இருக்கக்கூடும். ஏனெனில், தங்கபாலு நடத்தும் கல்லூரிகள் மீது கண்காணிப்பு நடவடிக்கை எதுவும் எடாமல் இருக்க கலைஞர் இணங்கியுள்ளார் என்ற குற்றச்சாட்டு நெடுநாளாக உள்ளது. ஆனால், வாசன் அப்படி பணம் சம்பாதிக்க கலைஞரையோ, ஜெயலலிதாவையோ நம்பியிருக்கவேண்டிய நிலைமையில் இல்லை.

வாசனுக்கு எங்கெங்கெல்லாம் சொத்து உள்ளது என்று தெரியாதளவுக்கு அவருக்கு பரம்பரைச் சொத்தும், பண்ணையார் சொத்தும் உள்ளன. எனவே, வாசன் எடுக்கும் தீர்மானங்கள் அல்லது ஆதரிக்கும் தீர்மானங்கள் கட்சியின் நலனை ஒட்டியே இருக்கும் என்பது தெளிவு. ஆனாலும், சமீப காலமாக வாசனை ஓரம் கட்டிவிட்டு சிதம்பரம் தரப்பு தனது மாநிலம் முழுவதும் தனது செல்வாக்கைப் பரப்ப மும்முரமாக செயற்பட்டு வருவது முக்கிய விடயமாகக் கருதப்படுகிறது. சிதம்பரம் வயதிலும், மத்திய அமைச்சரவை அனுபவத்திலும் வாசனை விட மிக மூத்தவரே. ஆயினும், மாநிலம் முழுவதும் செல்வாக்குப் பெற்ற ஒருவராக இருந்ததில்லை. தனது தொகுதியில்கூட ஓரிரு தடவைகள் தோல்விகண்டவர்தான் சிதம்பரம். எனவே, அவர் தமிழகக் காங்கிரஸுக்கு ஒட்டுமொத்தமாக சொந்தம் கொண்டாடுவது இயலாத காரியமாகும். வாசன் மற்றும் அவரது தந்தை மூப்பனார், வாழப்பாடி, ரங்கராஜன் குமாரமங்கலம் போன்றோர் மாநிலம் முழுவதும் செல்வாக்குப் பெற்று விளங்கியவர்கள். ஒருவேளை தமிழகத்தில் காங்கிரஸ் தனித்து ஆட்சியமைக்க முடிந்தால் முதல்வராக வரவேண்டியவர் ஜி.கே.வாசன்தான் என்பதில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை.





46 வயதான வாசனுக்கு இதற்கு இன்னமும் காலமுண்டு என்பதும் கவனிக்கத்தக்கது. தமிழகத்தில் எந்தத் தொகுதியில் போட்டியிட்டாலும் வெற்றிபெறக்கூடிய, செல்வாக்குள்ள தமிழகக் காங்கிரஸ்காரர் என்றால் அது ஜி.கே.வாசன்தான். அப்படிப்பட்டவருக்குச் சிதம்பரம் தரப்பு சவால்விடுவது குறித்து வாசன் ஆதரவாளர்கள் கோபமடைவது இயல்பானதே. இந்த நிலைவரத்தைப் பயன்படுத்தி வாசனை உசுப்பேற்ற இளங்கோவன் முடிவுசெய்துள்ளார். எதிர்வரும் வாரங்களில் வாசனை தமிழக முதல்வர் வேட்பாளராகவேண்டும் என இளங்கோவன் கோரினாலும் வியப்பில்லை. சிதம்பரம்-கலைஞர் உறவைத் தாண்டி தி.மு.க-காங்கிரஸ்

**சுரேந்திரஜித்**

கூட்டணியை உடைப்பதாயின், வாசனின் தயவு தேவை என்பதை இளங்கோவன் தெளிவாக உணர்ந்திருக்கிறார். அவரது புதிய வியூகம் வென்றால் தமிழக அரசியலில் எதிர் வரும் மாதங்களில் தலைகீழான மாற்றங்கள் நடைபெற இடமுண்டு என்பதனை மறுப்பதற்கில்லை. ✦

# உயிர் வலிக்கும் கணங்கள்...!!



# இனியும் வேண்டாம் யுத்தமும்...

தண்டுவானைச் சொந்த முகவரியாகக் கொண்டவள். தனது ஆரம்பக் கல்வியை தண்டுவான் பாடசாலையிலும் பின்னர் இடப்பெயர்வின் வலிகளின் மத்தியில் முள்ளியவளை பாடசாலையிலும், அதன் பின்னர் போர் இல்லா காலங்களில் நெடுங்கேணி பாடசாலையிலும் தொடர்ந்தாள். இலட்சியத்துக்காகப் படித்தாள். இறுதியில் அவளது இலட்சியம் நிறைவேறாமலே போய்விட்டது.

இவளது குடும்பத்தில் இரண்டு அண்ணாமாரும், ஓர் தங்கையும் தான். சாதாரணமான குடும்பம். இவள், சகோதரர்களுக்கு கொஞ்சம் ஏதாவது வருத்தம் என்றால்கூட தாங்கிக்கொள்ள மாட்டாள். இளகிய மனசும், பயந்த சுபாவமும் கொண்டவள். வீட்டில் அனைவரும் விரும்பும்படியாக நடந்து கொள்வாள்.

2006ஆம் ஆண்டு மீண்டும் யுத்தம் ஆரம்பமாகியது. இதில் இவளின் குடும்பமும் மெல்ல மெல்ல இடம்பெயரத் தொடங்கியது.



இடம்பெயர்ந்து வந்தபோது, பெற்றவர்களின் விருப்பத்தின் பேரிலும் பொருளாதாரக் கஷ்டத்தினாலும் முள்ளியவளையைச் சேர்ந்த ஆசீர்வாதம் ரமணன் என்பவரை திருமணம் செய்துகொண்டாள். போரில்லாக் காலங்களில் திருமணம் என்றால் நினைக்க வேண்டுமா? ஆடம்பரமான செலவுகளுடன், ஊர் ஒருமித்து நின்று மிகவும் அழகாக நடப்பதுண்டு. இப்போது அப்படியல்ல. இரவில் வீடுகளில் கூடுதலாக விளக்கு வைக்கக்கூடாது. விமானம் தாக்கிவிடும் என்ற அச்சம். திருமண வீட்டுக்கு வேண்டிய பொருட்களை நியாயமான விலைக்கு வாங்க முடியாது. எமது பகுதிக்கு பொருட்கள் வருவது மிகவும் குறைவு. இப்படியான சூழ்நிலையில் அவளது திருமணம் நடந்தேறியது.

பாதுகாப்பு வலயமாக தேவிபுரம் பகுதியை அரசாங்கம் அறிவித்தது. அப்பகுதியை நோக்கி பல்லாயிரக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தார்கள். அங்குள்ள நிலைமையை எப்படி விபரிப்பது என்று தெரியவில்லை.

ஒரு தறப்பாள் கொட்டகைக்கு அருகில் இன்னுமொரு கொட்டில் என, கிராமத்தில் உள்ள எந்தவொரு நிலப்பரப்பும் வெறுமையாய் இல்லை. தண்ணீர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக கொட்டில்களின் அருகிலேயே 3 அடி கிணறு வெட்டுவார்கள். அந்த நீரையே குடிப்பதற்கும், குளிப்பதற்கும், ஏனைய தேவைகளுக்கும் பயன்படுத்துவார்கள். சுகாதாரம் இல்லாத நிலையினால், பலர் கடுமையான வருத்தங்களுக்குட்பட்டு உள்ளாகி நோயுற்றார்கள். நோய் தீர்க்க மருந்துகளும் அந்த காலகட்டத்தில் இல்லை. எறிகணைகளால் பலர் கொல்லப்பட, நோயினாலும் பலர் மடிந்துகொண்டிருந்தார்கள்.

அரசு பாதுகாப்பு வலயம் என்று அறிவித்த பிரதேசங்கள்தான், வன்னி மக்கள் பலருக்கு உயிர்குடித்த இடங்களாகின. எறிகணைகளும், கொத்துக் குண்டுகளும் மக்களை கொத்துக் கொத்தாக கொன்றழித்தன.

இவ்வாறான சம்பவம் ஒன்றில் தான் கோபிகாவின் கணவன் ரமணனும் கொல்லப்பட்டான். 06.02.2009 அன்று தன் வீட்டினருகில் உழவு இயந்திரத்தில் பொருட்களை ஏற்றிக்கொண்டு நின்றபோது, அவ்விடத்திலேயே ஓர் எறிகணை வீழ்ந்து வெடித்தது. அன்று மடிந்த நூற்றுக் கணக்கான மக்களுடன் ரமணனும் தன்னை இணைத்துக்கொண்டான்.

கணவன் இறக்கும்போது கோபிகா ஏழுமாதக் கர்ப்பிணியாக இருந்தாள். அவள், தனது எதிர்கால வாழ்வு இப்படி அமையும் என்று சிறிதளவும் யோசிக்கவில்லை. கணவனின் இறுதிச் சடங்குகளைக் கூட செய்ய முடியாமல், தனது பெற்றோருடன் புதுமாத்தளன் பகுதி பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட அங்கு சென்றாள். அங்கும் அவளது விதிப்படியே சரமாரியான துப்பாக்கி ரவைகளின் தாக்குதல்கள், ஷெல் வீச்சுக்கள். கனரக ஆயுதங்களினால் மக்கள் பகுதிகள் சல்லடை போடப்பட்டன. அங்கும் இங்கும், எங்குமே மக்கள் இடைவெளியின்றி கொல்லப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இதன் ஒரு பகுதியாக கோபிகாவும் தலை மற்றும் கால்களில் எறிகணை தாக்குதலால் காயமடைந்தாள். புதுமாத்தளன் மருத்துவமனை இரத்த வாடையாலே நிறைந்திருந்தது. போதுமான மருந்துகள் இல்லை. மருத்துவர்கள் தட்டுப்பாடு. நாளுக்கு நாள் இறப்பவர்களின் தொகை அதிகரித்துக் கொண்டிருந்ததால் மருத்துவர்களும் அதிலே இணைந்து இல்லாமல் போய்க்கொண்டிருந்தார்கள். தமிழீழ காவல்துறையினரும், சுகாதார சேவகர்களுமே அதிகமாக நோயாளிகளை கவனித்தவண்ணம் இருந்தார்கள். செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் உதவியோடு, கப்பல் வழியாக திருகோணமலை மருத்துவமனைக்கு நோயாளிகள் ஏற்றப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டார்கள்.

காயப்பட்ட வலியோடு இவளுக்கு ஓர் ஆண் குழந்தையும் பிறந்தது. எப்படி அவளின் உடல்நிலை தாங்கிக் கொள்ளும்? ஒருபுறம் கணவனை இழந்த துயரம், மறுபுறம் காயப்பட்ட இயலாமை. இத்தனைக்கும் மேலாக பிறந்த குழந்தையை கவனிக்க போதியளவு வசதியின்மை. பொருளாதாரம் சிறிதளவும் கைவசமில்லை. உதவிக்கு ஆளில்லை. இப்படியே இவளது அவல வாழ்வு செட்டிக்குளம் ஆனந்த குமாரசாமி முகாம்வரை நீடித்தது.

முகாம் வாழ்க்கையைப் பற்றி சொல்லவா வேண்டும்? குடிதண்ணீர் இல்லை. குளிப்பதற்கும் ஏனைய தேவைகளுக்கும் நீர் கிடைக்கவேயில்லை. போதுமான உணவில்லை. மருந்து எடுக்க காலையில் சென்றால் மாலையில்தான் கூடாரம் திரும்ப முடியும். கைக்குழந்தையோடு இத்தனை துயரங்களையும் அனுபவித்தபோது கோபிகாவுக்கு வாழ்க்கையே வெறுத்துப் போனது.

சிறிது காலத்தின் பின்னர், மீள்குடியேற்றம் செய்யப்பட்டு ஊருக்குச் சென்றாள். இப்போதுதான் தன் பிள்ளையோடு ஓரளவு நிம்மதியாக வாழ்கிறாள். கூலிவேலை செய்தாலும், ஓரளவு பிரச்சினையின்றி வாழ முடிவதாக சொல்கிறாள். அத்தோடு ஒரு கோரிக்கையும் அவளது மனதினுள்ளே எழுகிறது. தனக்கு ஏற்பட்ட இந்த கொடிய வலிகளைப் போல, இனிவரும் சந்ததியினருக்கு ஏற்படக் கூடாது. தலைமை வகிக்கும் அரசியல் தலைவர்கள் இதனை நினைவில் நிறுத்தி ஆட்சிசெய்யவேண்டும் என்பதே அந்த கோரிக்கையாகும்.

எஸ்.இளந்திரையன்.

## அவலங்களைப் பகிர்ந்து கொள்வோம்

வன்னியில் நடந்த இறுதிக்கட்ட யுத்தத்தின் போது, ஏராளமான வேதனை தரும் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றினை பலர் எழுதி வருகிறார்கள். நீங்களும் உங்களுக்கு நேர்ந்த அவலங்களையும்... கண்ணெதிரே கண்டு துடித்த வேதனைச் சம்பவங்களையும்... உங்களைப் பாதித்த வலிக்கின்ற அந்தக் கொடிய நாட்களின் பதிவுகளையும் வாசகர்களோடு பகிர்ந்து கொள்ளலாம். அதற்கான களத்தினை தருகிறது சுடர் ஒளி. எனவே, நீங்களும் உங்கள் அவலங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
"உயிர் வலிக்கும் கணங்கள்"
சுடர் ஒளி வாரமலர்,
85, ஜெயந்தமல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.




# மானத்தை விலைபேசும் டி.வி ஷோக்கள்

இப்பொழுதெல்லாம் மனித மானத்தை டி.விக்கள் விற்க தொடங்கி விட்டன. எவையெல்லாம் மற்றவர்களுக்கு தெரியக்கூடாது என்று நினைத்தோமோ அவையெல்லாம் ஏலம் விடப்படுகின்றன.

பகிரங்க ஏலமாக இது நடைபெறு கின்றது. டி.வி திரைக்கு முன்னால் உட்கார்ந்து, இன்னொருவர் மானத்தை இழப்பதைக் கண்டுகளிக்க எமது மனம் மிகவும் தயாராகிவிட்டது.

இன்னொருவரின் படுக்கையறை விடயங்களை அம்பலப்படுத்துவதில் டி.விக்கள் குஷியாக இருக்கின்றன.

அண்மையில் மும்பையில் இருந்து வரும் இமாஜின் டி.வியில் 'ராக்கி கா இன்ஸாப்' நிகழ்ச்சியை பார்த்தேன்.

கிராமப்புறங்களில் இருந்து அப்பாவி கிராமவாசிகளைத்தான் பிடித்து வருகிறார்கள்.

ஏற்கனவே 'சச் கா சாம்னா' என்றொரு நிகழ்ச்சி ஸ்டார் டி.வியில் காட்டப்படுகிறது. அது நகரவாசிகள் பங்கு கொண்டு ஒரு கோடி இந்திய ரூபாவை பரிசாக வெல்லும் நிகழ்ச்சி.

இதில் எல்லாம் அந்தரங்க கேள்விகள்தான் வரும். ''யாருடன் படுத்தது'' என்ற கேள்விகள் எல்லாம் இதில் சகஜம்.

ஆண், பெண்கள் காசுக்கு ஆசைப்பட்டு தங்கள் ரகசியங்களை மில்லியன் கணக்கான தொலைக்காட்சி பார்வையாளர்கள் முன்பாக சொல்ல தயாராகிவிட்டனர் பணத்துக்காக. இப்பொழுது கிராமத்து மக்களும் சொல்ல தயாராகி விட்டதை இமாஜின் டி.வியின் 'ராக்கி கா இன்ஸாப்' தெரிவிக்கிறது.

கிராம மனிதர்கள்தான் 'ராக்கி கா இன்ஸாப்' பின் குறி.

நான் பார்த்த நிகழ்ச்சி சஹாரன் பூர் என்ற கிராமத்தைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் பெண்ணுடையது.

சஹாரன் பூர் கிராமம் வட இந்தியாவின் உத்தர பிரதேசத்தில் இருக்கிறது. அந்த கிராமத்துக்கு நானும் நண்பர்களும் 1995 ஆம் ஆண்டு போயிருக்கிறோம்.

முஸ்லிம்களை அதிகமாகக் கொண்ட கிராமம்; இந்துக்களும் சரிசமமாக வாழ்கிறார்கள். கோவில்களும் பள்ளிவாசல்களும் பக்கத்து பக்கத்தில் இருக்கும். அங்கு மச்சிலி பஸார் என்றொரு இடம். மச்சிலி என்றால் மீன். மீன் சந்தை, அந்த சுற்று வட்டாரத்துக்கே பெரிய சந்தை அது.

சஹாரன் பூருக்கு அமைதியின் நகரம் என்றொரு பெயரும் உண்டு. முஸ்லிம்களும் இந்துக்களும் வாழ்ந்தாலும் ஏனைய இடங்களைப் போல அவர்களை மதக் கலவரம் தாக்கியதில்லை.

ஹிந்தி, உருது, பஞ்சாபி பேசக்கூடியவர்கள் இருக்கும் இடம்.

சஹாரன் பூரில் ஒரு விமானம் கட்டும் தளமும் இருக்கிறது.

முதன் முதலில் கூட்டமாக கழுகுகளை சஹாரன் பூரில்தான் நான் பார்த்தேன்.

சஹாரன் பூரைச் சுற்றிலும் உள்ள கிராமத்து மக்களின் முக்கிய தொழில் விவசாயம். கண்ணுக்கெட்டிய தூரம் வரை கரும்பு பயிரிட்டிருக்கும். இன்னொரு பக்கம் கண்ணுக்கெட்டிய தூரம் வரை கோதுமை பயிரிட்டிருக்கும். இப்படி இவர்களுக்கு விவசாயமும் மாடு வளர்ப்புமே பிரதான தொழில்.

அந்த கிராமத்தில் இருந்து ஒரு பெண்ணைத்தான் 'ராக்கி கா இன்ஸாப்' நிகழ்ச்சிக்காக பிடித்து வந்திருக்கிறார்கள்.

இந்தப் பெண்ணின் மகன் தன்னை விட்டுப் போய்விட்டான்; அவனைத் தேடித் தாருங்கள் என்பதுதான் அவளின் கோரிக்கை.

ராக்கி சாவந் என்ற ஹிந்திப் பட கவர்ச்சி நடிகைதான் இந்த டி.வி ஷோவை நடத்துகிறார்.

நன்றாக பேசக்கூடிய வல்லமை ராக்கிக்கு இருக்கிறது. இப்பொழுது படங்களில் நடிப்பதை விட்டுவிட்டு அதிக பணம் வரும் டி.வி ஷோக்களுக்கு வந்துவிட்டார் ராக்கி.

ஏற்கனவே 'ராக்கி கா சுயம்வர்' என்று பல ஆண்களை டி.விக்கு முன்னால் கொண்டுவந்து நிறுத்திவிட்டு அதில் ஒருவரை பிடித்து கலியாணம் செய்ய செலக்ட் பண்ணப் போகிறேன் என்று சொன்னார் ராக்கி.

பெரும் பணக்காரர்கள், அழகானவர்கள் எல்லாம் அந்த சுயம் வரத்துக்கு வந்தார்கள். அது நீண்ட காலம் டி.விக்கு பணத்தை கொட்டிய ஷோ.

பிறகு முடிவில் ஒருவரை திருமணம் செய்துகொண்டார் டி.வி ஷோவில். அந்த மனிதரை பிறகு ராக்கி கழட்டி விட்டுவிட்டார்.

ராக்கிக்கு தேவை மீடியா பிரபல்யம் என்று டில்லி பத்திரிகைகள் எல்லாம் இப்பொழுதும் எழுதிக் கொண்டிருக்கின்றன.

ராக்கி தனது பேச்சாற்றலால் புதிய நிகழ்ச்சிக்கு வந்துவிட்டார். அந்த நிகழ்ச்சிதான் 'ராக்கி கா இன்ஸாப்'



அதாவது, 'ராக்கியின் தீர்ப்பு.' இதில் ராக்கியின் தீர்ப்பு என்ன தீர்ப்பு? குடும்பத்தை குலைத்துவிட்டு நாடியில் கையைவைத்து பெரிய அறிவாளி போல தனது மேக் அப் முகத்தை குளோசப்பில் கமெராவுக்கு முன்பு வைத்திருப்பார்.

சஹாரான் பூர் பெண்ணுக்கு மகனை கண்டுபிடித்து தருகின்றோம். உன்னோடு சேர்க்கிறோம் என்று சொல்லி புரோக்கிராமுக்கு அழைத்து வந்துவிட்டார்கள்.

கமெராவுக்கு அழகாக தெரிய வேண்டும் என்பதற்காக அந்த கிராமத்து பெண்ணுக்கு அழகான மேக் அப் எல்லாம் போட்டுகொண்டு வந்து உட்கார வைத்தார்கள்.

பார்வையாளர்கள் முன்னிலையில், ராக்கி ஷோவை நடத்துகிறார்.

வந்த பெண் சொல்கிறார் தனது மகனை ஒரு வருடமாக தனது தங்கைமார் கடத்திக் கொண்டுபோய் வைத்திருக்கிறார்கள் என்று. கேள்வி மேல் கேள்வி கேட்டு அந்தப் பெண்ணை திணறடிக்கிறார் ராக்கி.

இதில் அந்தப் பெண்ணின் கணவர் இறந்துவிட்டார். அவருக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் இருக்கிறார்கள். மூத்தவன் அம்மாவோடு கோபித்துக் கொண்டு சின்னம்மாக்காரியின் வீட்டில் இருக்கிறான். அவனுக்கு சின்னம்மாமார் மூன்று பேர் இருக்கிறார்கள்.

சரி. இப்பொழுது சின்னம்மாமார் மூன்று பேரையும் அழைத்து வந்துவிட்டனர். மேடையில் சின்னம்மாமார் மூன்று பேரும் சொல்கிறார்கள், 'மகன் தானாகத்தான் வந்தான்; தாங்கள் வற்புறுத்தவில்லை' என்று. இடையில் பெரும் வாதப் பிரதிவாதங்கள், சண்டை எல்லாம் போகிறது.

பிறகு மகனை கூப்பிடுகிறார்கள். மகன் வந்து சொல்கிறான், ''அம்மாவோடு இருக்க எனக்கு பிடிக்கவில்லை'' என்று. ஏன் என்று கேட்டால் அம்மாவின் நண்பர் ஒருவர் அம்மாவைச் சந்திக்க வீட்டுக்கு வருவார். எனக்கு அடித்தார் என்று காரணமும் சொல்கிறான்.

இப்பொழுது சின்னம்மாக்கள் தங்கள் மூத்த சகோதரி மீது பழிசுமத்துகிறார்கள். வீட்டுக்கு வருபவர் அவரின் கள்ளப் புருஷன் என்று.

இப்பொழுது ஷோ சூடு பிடிக்கிறது. இடையில் இன்னுமொருவர் ஷோவுக்கு அழைத்து வரப்படுகிறார். அவர் முறைப்பாடு செய்த பெண்மணியின் புருஷன் வேலை செய்த லைட்டிங் கொம்பனியின் முதலாளி. அந்தப் பெண்மணியின் கணவர் அங்கு வேலைசெய்த போதுதான் இறந்திருக்கிறார். அதற்கு நஷ்டஈடாக 6 லட்சத்து 25 ஆயிரம் இந்திய ரூபா கொடுத்ததாக சொல்கிறார். பிள்ளைகள் நல்ல ஸ்கூலில் படிக்க தான் இன்னும் உதவி செய்ய தயாராக இருப்பதாகவும் கணவனின் பொஸ் சொன்னார்.

இப்படி போய்க்கொண்டிருக்கும் பொழுது சஹாரன் பூரில் அவளுக்கு உதவி செய்த பாரூக் என்பவரை கொண்டு வருகிறார்கள். பாரூக்கிற்கு ஏற்கனவே கலியாணம் முடிந்து நான்கு பிள்ளைகள் இருக்கிறார்கள்.

பாரூக்கிடம் கேட்கிறார் ராக்கி, ''உங்களுக்கும் ஷபீனா என்ற அந்த பெண்மணிக்கும் என்ன உறவு?'' பாரூக், ஷபீனா இரண்டு பேருமே சொல்கிறார்கள். ''சகோதர உறவுதான் வேறொன்றுமில்லை.'' ''அப்பொழுது ஏன் ஷபீனாவின் மகனுக்கு அடித்தீர்கள்?'' ''சின்ன பிள்ளை படிக்காவிட்டால் - குளப்படி பண்ணினால் அடிப்பது பெரியவர்களுக்கு ஒன்றும் புதிதல்லவே'' என்று கூறி பாரூக் மீது கோபப்படுகிறார். பார்த்துக் கொண்டிருக்கும் ஓடியன்ஸும் உணர்ச்சி வசப்படுகின்றனர்.

அங்கு ஷபீனாவின் மகன் படிக்கும் பாடசாலையின் தலைமை ஆசிரியரும் வந்திருந்தார். அவரை புரோக்கிராம் காரர்கள்தான் அழைத்து வந்திருந்தனர்.

அவரும் உணர்ச்சி வசப்பட்டு சொன்னார் சின்னப் பிள்ளையை அடிக்கக் கூடாது என்று.

ஷபீனாவின் சகோதரிகள், பார்வையாளர்கள், எல்லோரும் ஷபீனாவின் மீதும், பாரூக் மீதும் சந்தேகம் கொள்ளும் படியான கருத்தாடல்களை ராக்கி நடத்துகிறார்.

எல்லோருக்கும் சபீனாவுக்கும் பாரூக்குக்கும் இடையில் செக்ஸ் உறவு இருக்குமோ என்ற சந்தேகம் வலுக்கிறது. அதனால் தான் பெங்களூரில் குடும்பத்துடன் இருந்த சபீனாவை சஹாரன் பூருக்கு பாரூக் வரவழைத்திருக்கிறார்.

அது மட்டுமல்ல ஷபீனாவின் இரண்டு பிள்ளைகளுக்கு சஹாரன் பூரில் பாடசாலை எடுத்து கொடுத்திருக்கிறார். ஷபீனாவின் பிள்ளைகள் மீது உத்தியோகப்பற்றற்ற உரிமை கொண்டாடி இருக்கிறார் என்று பார்வையாளர்களும் நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டிருக்கும் லட்சக் கணக்கான தொலைக்காட்சி நேயர்களும் பார்க்கும்படி ராக்கி விடயத்தை கொண்டு போகிறார்.

பரபரப்பாக போய்க் கொண்டிருக்கும் நிகழ்ச்சியின் இறுதியில் முடிய போகின்ற தருணத்தில் ராக்கி ஷபீனாவிடம் கேட்கிறார் பாரூக்குக்கும் உனக்கும் என்ன உறவு என்று. ஷபீனா சொல்கிறார் ''பாய்.''

''பாய்'' என்றால் சகோதரன் கைவிரலை மடக்கி முதல் முறை என்று ராக்கி கேட்கிறார். ஷபீனா சொல்கிறார் ''பாய்'' இரண்டாம் முறை ''பாய்'' மூன்றாம் முறை ''பாய்.''

''சரி, இப்பொழுது அந்த டி.வியின் திரையைப் பாருங்கள்'' என்று தனது அழகான விரலை மடித்து

இளைய அப்துல்லாஹ்

ஸ்ருடியோவில் இருந்த டி.வி திரையை ராக்கி சாண்பிக்க அந்த டிவியில் பாரூக்கும் ஷபீனாவும் ஷபீனா வீட்டில் வைத்து ஒருவரை ஒருவர் கட்டியணைத்து முத்தம் கொடுக்கும் மற்றும் படுக்கையில் இருக்கும் காட்சிகள். பார்வையாளர்கள், ஷபீனாவின் சகோதரிகள், பாரூக், ஷபீனா, பார்த்துக் கொண்டிருக்கும் லட்சக் கணக்கான பார்வையாளர்கள் முன்னிலையில் டி.வி திரையில் ஓடுகின்றன.

(22ஆம் பக்கம் பார்க்க)

# தலைவர்களே! விழிப்புடன்-துடிப்புடன் செயற்படுங்கள்
# எமது சிலுவையை நாமே சுமக்கவேண்டும்

1948ஆம் ஆண்டு இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தது. 1949ஆம் ஆண்டு மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. அவர்கள் 'நாடற்றவர்கள்' ஆக்கப்பட்டார்கள். இந்த நேரத்தில் தந்தை செல்வா அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸில் இருந்து வெளியேறினார். ''இன்றைக்கு அவர்களுக்கு, நாளைக்கு எங்களுக்கு'' எனக் கூறித் தமிழினத்தின் உரிமைக்காகப் போராடும் இலட்சியத்தோடு தமிழரசுக் கட்சியை உருவாக்கினார். 1975ஆம் ஆண்டு அவர் மறையும்வரை தமிழ்மக்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டினார். தமிழ் இனத்துக்கு சிங்கள பேரினவாத அரசுகளால் அநீதி இழைக்கப்பட்டபோது, உரிமைகள் பறிக்கப்பட்டபோது, அஹிம்சை வழியில் போராட்டங்களை முன்னெடுத்ததார். தமிழ் மக்கள் அனைவரும் ஒரே சக்தியாக ஒன்றுதிரண்டு அவருக்கு தங்களது ஆதரவை வழங்கியது வரலாறு.

சுதந்திர இலங்கையின் ஐ.தே.க அரசின் முதல் பிரதமரான டி.எஸ்.சேனநாயக்கா ஆரம்பத்திலேயே சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கி, தமிழ் மக்களின் நிலங்களைப் பறித்தவேளை தமிழ்த் தலைவர்கள் பலர் ஐ.தே.க அரசில் அமைச்சர்களாகப் பதவி வகித்தார்கள். ஆனால், இந்த அநியாயத்தை எதிர்க்கவோ-தட்டிக்கேட்கவோ முயற்சிக்காது அவர்கள் தமது சுகபோக வாழ்க்கையிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தனர். மலையக மக்களின் வாக்குப் பறிப்பில் ஆரம்பமான செயற்பாடுகள் அடுத்து மண்பறிப்பு வேலையிலும் தொடர்ந்த வண்ணம் இருந்தன. இதில் தமிழர்கள் வாழ்ந்த பிரதேசங்களான கல்லோயா, கந்தளாய், மின்னேரியா என்பன கபளீகரம் செய்யப்பட்டன.

ஐ.தே.க ஆட்சியில் ஸ்தல ஸ்தாபன அமைச்சராக இருந்தவர். எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டார நாயக்கா. வயோதிபரான டி.எஸ்.சேனநாயக்காவுக்குப் பின் பிரதமர் பதவி தமக்குக் கிடைக்கும் என அவர் எதிர்பார்த்திருந்தார். ஆனால், டட்லி சேனநாயக்கா (டி.எஸ்.சேன நாயக்காவின் மகன்) அவரது வாரிசாக தயார்ப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்ததும் அமைச்சரவையில் இருந்து வெளியேறி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கினார். 1952ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார். அதே ஆண்டு தந்தை செல்வா தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார்.

எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டார நாயக்கா இடதுசாரித் தலைவர்களுடன் எம்.ஈ.பி எனும் கூட்டணியை அமைத்து 1956ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்றார். தமிழரசுக் கட்சியும் அமோக வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

1956ஆம் ஆண்டு ஜூன் 5ஆம் திகதி பண்டாரநாயக்கா 'சிங்களம் மட்டும்' மசோதாவை நாடாளுமன்றத்தில் தாக்கல்செய்தார். அன்றைய தினம் தமிழரசுக் கட்சித் தொண்டர்கள் தந்தை செல்வா தலைமையில் கொழும்பு காலிமுகத்திடலில் உண்ணாவிரதம் அனுஷ்டித்த வேளையில் சிங்களக் குண்டர்களால் தாக்கப்பட்டு படுகாயம் அடைந்தார்கள்.

1958ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழரசுக் கட்சியினர் மேற்கொண்ட சிங்கள 'ஸ்ரீ' அழிப்புப் போராட்டம் காரண மாகத் தென்னிலங்கையில் இனக் கலவரம் வெடித்தது. தமிழர்கள் வகைதொகையின்றி கொல்லப்பட்டனர். கடைகள் எரிப்பு, கொள்ளை என்பவற்றால் பல கோடி சொத்திழப்புக்கள் ஏற்பட்டன.

1961ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் ஏப்ரல் வரை தந்தை செல்வா தலைமையில் தமிழரசுக் கட்சித் தொண்டர்களாலும், ஆதரவாளர்களினாலும் யாழ் கச்சேரி வாசலில் மேற்கொள்ளப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் ஒரு மாதத்துக்கு மேலாக நீடித்த போது சிறிமாவோவின் படையினரால் அடக்கி ஒடுக்கப்பட்டது.

1974ஆம் ஆண்டு தமிழாராய்ச்சி மாநாட்டு இறுதி நாளான ஜனவரி 9 இல் யாழ்.மேயர் துரையப்பாவின் சதி காரணமாக யாழ்.பொலிஸ் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 9 குடிமக்கள் கொல்லப்பட்டனர்.

1977 ஆகஸ்ட் மாதம் தமிழரசுக் கட்சியினர் உரிமைக்குப் போராடுவோம் எனக் கூறியதால் மீண்டும் தென்னிலங்கையில் இன அழிப்பு, சொத்தழிப்பு.

**-தமிழ் மகன்-**

1981 மே 30 இல் யாழ் நூல் நிலைய எரிப்பு, ஈழநாடு அச்சகம் காரியாலயம் எரித்தழிப்பு, இளைஞர்கள் படுகொலை. இவ்வளவு கொடுமைகளும் பேரினவாத அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட பின்பே இளைஞர்கள் திருநெல்வேலித் தாக்குதலை மேற்கொண்டனர்.

அதன் காரணமாக 1983 ஜூலை இனக்கலவரம் மூண்டு 3,000 இற்கு மேற்பட்ட தமிழ் உயிர்களைப் பலிகொண்டது. முப்பது வருட காலமாகத் தமிழ் இனத்துக்கு ஏற்படுத்திய அழிவுகளையிட்டு பேரினவாதிகள் எள்ளளவும் கவலைப்பட்டது கிடையாது.

முப்பது வருடகாலப் போருக்கு புலிப்பயங்கரவாதமே காரணம் எனக் குரலெழுப்புபவர்கள், அதற்கு முந்திய முப்பது ஆண்டு காலத்தில் அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு அடக்குமுறைகளைப் பற்றிச் சற்றேனும் சிந்தித்தது கிடையாது. யுத்தம் முடிந்து 18 மாதங்கள் கழிந்துவிட்ட நிலையிலும் புலிகள், பயங்கரவாதம் என்னும் சொற்களைப் பயன்படுத்தியே ஆட்சியாளர் அரசியல் நடத்திவருகின்றனர். மேற்கொண்டு அவசரகாலச் சட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றனர்.

வன்னியில் இறுதிப் போருக்கு முன் நாலரை இலட்சம் மக்கள் இருந்தார்கள். ஆனால், செட்டிகுளம் மெனிக்முகாமுக்கு மீண்டவர்கள் மூன்று இலட்சம் மக்கள் மட்டுமே. ஒன்றரை இலட்சம் மக்களுக்கு என்ன நடந்தது?

சுதந்திரபுரத்தில் இருந்து தேவிபுரம், இரணைப்பாலை, புதுமாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் வரை தொடர்ச்சியாக பாதுகாப்பு வலயங்கள் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. மக்கள் கால்நடையாகத் தலைச் சுமையுடனும் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், லான்ட்மாஸ்டர்கள், டிராக்டர்கள் ஆகியவற்றிலும் தினமும் நகர்ந்து கொண்டேயிருந்தனர். மக்கள் இரண்டொரு நாட்களாவது ஓரிடத்தில் இருந்து காலாற முடியாத அளவுக்கு எறிகணைகள் நாலாபக்கமும் வீழ்ந்துவெடித்துக் கொண்டிருந்தன. இவற்றுக் கிடையில் விமானக் குண்டுகளும் வீசப்பட்டுக்கொண்டிருந்தன. எந்த நேரமும் எல்லாத் திசைகளிலும் மரண ஓலங்கள் மக்களை அச்சுறுத்திக்கொண்டிருந்தன.

ஒருபக்கம் காயப்பட்டவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதில் மக்கள் பலவகையான சிரமங்களை அனுபவித்துக்கொண்டிருந்தனர். மறுபக்கத்தில் உயிரிழந்தவர்களைப் புதைக்க முடியாது கவலையுடன் உடல்களை விட்டுச்செல்கின்றவர்களும் பதுங்குகுழிகளில் போட்டுச் செல்பவர்களுமாக இருந்தனர்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் கண்ணீர்வடிக்கும் மக்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பது நன்கு புலனாகிறது. மக்கள் அவரவர் இடங்களில் பூரணமாகக் குடியமர்த்தப்பட்ட பின்பே உண்மையான எண்ணிக்கை வெளிச்சத்துக்கு வரும். அப்போதுதான் உலக நாடுகளும், வல்லரசுகளும் தாங்கள் எவ்வளவு தூரம் இலங்கைத் தமிழ் மக்களுக்கு

(22ஆம் பக்கம் பார்க்குக)









# காதலை சொல்வது எப்படி?



மனம் நிறைய காதல் இருந்தும் அதை எப்படிச் சொல்வதென்று புரியவில்லையா? ''சொல்லத்தான் நினைக்கிறேன்... சொல்லாமல் தவிக்கிறேன்... காதல் சுகமானது'' - என்று நீங்களாகவே பாடிக்கொண்டிருக்காதீர்கள்.

இதோ இப்படிச் சொல்லிப் பாருங்களேன்...

* காதலைச் சொல்லச் செல்லும் முன்பாக சிறிதாக ஒத்திகை எடுத்துக் கொள்ளுங்கள். அதற்கு முன்பாக உங்கள் காதலியைப் பற்றி நன்கு அறிந்து வைத்திருக்கவேண்டும். நீங்கள் காதலை சொல்லும் வேளையில் அவர் என்ன நிலையில் இருக்கிறார் என்பதையும் தெரிந்துகொள்ளவேண்டும்.

* அவர், இயல்பான குணத்தில் இருக்கும் சாதாரண வேளைதான் உங்கள் அன்பைக் காதலாக மாற்றும் தருணமாகும். எனவே அவர் உங்களுடன் பேச ஆர்வமாக இருக்கும் நேரத்தில் உங்கள் காதலைச் சொல்லத் தொடங்குங்கள்.

* காதலைச் சொல்ல தனிமைதான் சரியான சூழல். எந்தவித குணமுடைய பெண்ணாக இருந்தாலும் தனிமையில் சாந்தமாக இருப்பார்கள்.

* ''நான் உங்களை காதலிக்கிறேன்'' என்று நேரடியாக விடயத்தை ஆரம்பிக்கக்கூடாது. எனக்கு உங்களைப் பிடிக்கும், உங்கள் சிரிப்புப் பிடித்திருக்கிறது, பல சிந்தனைகளில் நமது கருத்து ஒத்துப்போகிறது, உங்களது உதவும் குணம், எல்லோர் மீதும் பாசமாக இருப்பது எல்லாம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. நாம் இருவரும் சேர்ந்து வாழ முடியும் என்று விரும்புகிறேன் என்று கூறிய பின்னர், ''நான் உன்னை நேசிக்கிறேன்'' என்று சொல்லலாம்.

* கையில் பூவுடன் செல்லுங்கள். அவள் நிற்கும்போது, நீங்கள் காலை மண்டியிட்டு நின்று அவளது முகம் பார்த்து கைகளை நீட்டி பூவைக் கொடுத்து 'ஐ லவ் மை ஸ்வீட் பேபி' என்று சொல்லலாம். இப்படிச் சொல்வது பெண்களுக்கு மிகவும் பிடிக்கும். நாணம் மிகுந்த பெண், உள்ளார்ந்த சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் பெண்களிடம் இந்த முறையில் காதலைச் சொல்லக்கூடாது. அவர்கள் திகைப்படைந்து விடுவார்கள்.

* வார்த்தைகளை 'வளவள' வென்று பேசக் கூடாது. சொல்ல வரும் விடயங்களை தெளிவாகச் சொல்ல வேண்டும். பாதியைச் சொல்லி பாதியை முழுங்கக்கூடாது. பெண்கள் சாமர்த்தியசாலிகள். உங்கள் பேச்சை வைத்தே உங்களின் அன்பு எவ்வளவு உண்மையானது என்பதைக் கண்டுபிடித்துவிடுவார்கள். இழுத்து இழுத்து பேசினால் பெண்களுக்குப் பிடிக்காது.

* எல்லாப் பெண்களுக்கும் பூக்களைப் பிடிக்கும். நிறைய பூக்களைக் கொண்ட மலர்ச்செண்டு (பொக்கே) கொடுத்து அன்பை வெளிப்படுத்துங்கள். ரோஜா பூக்கள் காதலை வெளிப்படுத்த ஏற்றவையாகக் கருதப்படுகின்றன. 'உன்னோடு மட்டுமே இனி என் வாழ்வு கழிவதை விரும்புகிறேன்' என்று உளமாறக் கூறுங்கள். அவருக்கும் உங்கள் மீது நேசமிருந்தால் அப்போதே அன்புக்கான சிக்னல் கிடைக்கலாம்.

* பேசும்போது செய்யும் உடல் அசைவுகள் காதலுக்கு வலுச்சேர்ப்பவையாகும். உங்கள் கண் - முகம் மற்றும் கை அசைவுகள் நேசத்தை அப்படியே வெளிப்படுத்தவல்லவை. காதல் சொல்லும்போது இராணுவ வீரன் போலவோ, மேலதிகாரி முன்பு நிற்பது போலவோ விறைப்பாக நிற்காதீர்கள். சாதாரணமாக தளர்வாக நில்லுங்கள். தாயானவள் குழந்தையை வாரி அணைக்க கையை நீட்டுவதுபோல கைகளை நீட்டி, 'அன்பே உன்னை நேசிக்கிறேன்' என்று சொல்லுங்கள். சொல்லும்போது உங்கள் மனம் உருகி கண்கள் செருகினால் கூடத் தவறில்லை. முழுக்க அவருக்கு பாதுகாப்பு அளிப்பது போலவும், உங்கள் வாழ்வு முழுவதும் அவரை சாந்திருப்பதுபோலவும் உங்கள் பேச்சும், உடல் அசைவுகளும் இருக்க வேண்டும். அவரைச் சுற்றி வந்து பேசுவது அதிகப்படியான காதலைக் குறிக்கும். ஆண்கள் இப்படிச் செய்வதை ரசிக்கும் பெண்கள்தான் காதல் வலையில் விழுகிறார்கள். நீங்களும் இப்படிக் காதலைச் சொல்லிப் பாருங்கள். மறுப்பதற்கு வாய்ப்பே இல்லை.

* புகழ்ச்சி எல்லோரையும் கவரக் கூடியதாகும். பெண்களுக்கு அவர்களின் அழகை வர்ணிப்பது மிகவும் பிடிக்கும்.

# மலைப்பாம்புகளுக்கு திருமணம்



கம்போடியாவின் தலைநகரம் நொம்பெங் அருகே ஸ்வாய் ரோலம் என்ற கிராமம் உள்ளது. மலைப் பகுதியான இங்கு 90 கிலோ எடையுள்ள 16 அடி நீள பெண் மலைப்பாம்பு, அதை விட சிறிது எடை குறைவான ஆண் மலைப்பாம்புடன்உறவில் ஈடுபட்டிருந்தது. இதை அப்பகுதி மக்கள் கூட்டமாக நின்று வேடிக்கை பார்த்தனர். இவற்றை மாஜிக் பாம்புகள் என்று நினைத்தனர்.


பின்னர் அவற்றுக்கு திருமணம் செய்து வைக்க முடிவுசெய்தனர். இதை தொடர்ந்து ஒன்று திரண்ட கிராம மக்கள் புத்த மத துறவிகள் 2 பேரை அழைத்து வந்தனர்.

பின்னர் அந்த 2 பாம்புகள் மீதும் மலர் தூவினர். புத்த மத துறவிகள் ஆசி வழங்கி அந்த பாம்புகளுக்கு திருமணம் நடத்தி வைத்தனர். இச்சம்பவம் சுமார் 2 மணி நேரம் நடந்தது. பாம்புகளுக்கு திருமணம் செய்து வைத்ததன் மூலம் தங்கள் கிராமத்துக்கு பசுமையும், சுகாதாரமும் கிடைக்கும் என்று நம்புகின்றனர்.

அவை இரண்டும் தங்கள் கிராம உறுப்பினர்கள் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். ஆண் மலைப்பாம்புக்கு கராங் பச் என்று பெயர் சூட்டியுள்ளனர்.

அதை தனது மகன் என குழந்தை இல்லாத ஒரு பெண் தெரிவித்துள்ளார். கம்போடியாவில் புத்த மதத்தை தழுவியுள்ளவர்கள் அதிக அளவில் உள்ளனர்.

அவர்கள் விலங்குகளின் மீது அதிக பாசம் வைத்துள்ளனர். அந்த அடிப்படையில் தான் மலைப் பாம்புகளுக்கு திருமணம் செய்து வைத்துள்ளனர்.



# உலகின் மிக நீளமான பாலம்!



நான்கு ஆண்டு கால பணிகளுக்குப்பின் உலகின் மிகப்பெரிய பாலம் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. சீனாவிலேயே இந்தப் பாலம் அமைந்துள்ளது.

இரு மாவட்ட நகரங்களை இணைக்கும் வகையில் 26.4 மைல் நீளமான இந்தப் பாலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

லண்டன் தேம்ஸ் நதிக்கு மேலாகச் செல்லும் பாலத்தை விட இது பன்மடங்கு நீளமானதாகும். 2006இல் இதன் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இரண்டு முனைகளிலிருந்து கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடுவில் ஒன்றிணைக்கப்பட்டன. 5.5பில்லியன் பவுண் செலவில் இந்தப் பாலத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டதாக கடந்த திங்கள்கிழமை அறிவிக்கப்பட்டது.

ஷன்டோங் மாநிலத்தின் மூன்று நகரங்கள் இந்தப் பாலத்தின் மூலம் இணைகின்றன. அமெரிக்காவின் தென் லூசியானாவில் உள்ள கரையோரப் பாலம் தான் இதுவரை உலகில் நீளமான பாலமாக இருந்தது.



''என்னங்க! உலகத்திலே மொத்தம் எத்தனை கண்டங்கள் இருக்கு?''
''உன்னையும் சேர்த்தா சேர்க்காமலா?''

# மாமியார் வாக்கு!

சின்னவன் ரவிக்குத் திருமணமானது.

மாமியார் சாந்தி, மறுவீடு வந்த புது மருமகளிடம் சொன்னார்...

''எதுவானாலும், மூத்த மருமகள் வித்யாவைக் கேள். சரியாகச் சொல்வா; செய்வா. அவளாட்டம் இரு...''

புதுமருமகள் சிரித்தாள்.

வித்யா மலர்ந்தாள். சந்தோஷமானாள்.

மாமனார் கேட்டார்.

''என்னாச்சுடி...? உனக்கும் வித்யாவுக்கும் சர்வகாலமும் சண்டைதான். இப்ப என்னடா வென்றால் அவளை ஆஹா, ஓஹோங்கற...?''

மாமியார் சொன்னார்.

''மூத்தவளுக்கும் எனக்கும் ஒத்துவராது என்று தெரிஞ்சா இரண்டு பேரும் ஒண்ணாயிடுவாங்க. என் பாடு திண்டாட்டமாயிடும். ஸோ, மூத்தவளை பாராட்டினா வந்தவளுக்கு வெறுப்பாயிடும். அதான் இப்படி...''

# மனசு

தனக்கு மாப்பிள்ளை தேடும் விஷயத்தைக் கேள்விப்பட்டதும் தனது காதலை வீட்டில் துணிச்சலாய் சொன்னாள் மாளவிகா.

மாளவிகாவின் தந்தை மகாலிங்கம் அதற்கு சம்மதிக்கவில்லை.தான் பார்த்து வைத்திருக்கும் மாப்பிள்ளைக்குத்தான் அவள் கழுத்தை நீட்டவேண்டும் என்று பிடிவாதமாக இருந்தார்.

மறுநாள் டில்லியிலிருந்து அவரது நண்பரும் மனைவி, குழந்தைகளும் வந்திருந்தனர்.

''அவங்களுக்குப் பிடிச்ச சப்பாத்தி, குருமா, சாலட் செஞ்சிடு!'' தனது மனைவியிடம் சொன்னார் மகாலிங்கம்.

விருந்தினர்கள் புறப்பட்டுப் போனதும் மாளவிகா,தனது தந்தையிடம் மெல்லக் கேட்டாள்.

''அப்பா, உங்க நண்பருக்கு என்ன பிடிக்குமென்று தெரிஞ்சு வெச்சுட்டு, அதைச் சமைக்கச் சொல்லி அவங்களை திருப்திப்படுத்தினீங்க. கல்யாண விடயத்தில மட்டும் எனக்குப் பிடிக்காத யாரையோ கட்டி வைக்க நினைக்கிறீங்களே!'' சுருக்கென்று வலித்தது மகாலிங்கத்துக்கு.

''மாப்பிள்ளையை வரச் சொல்லு, பேசி முடிச்சுடலாம்!'' மகாலிங்கம் தனது சம்மதத்தைச் சொன்னபோது மாளவிகாவின் மனசு குளிர ஆரம்பித்தது.



''மழை வந்தாலே எனக்கு உன் ஞாபகம்தாண்டா?''
''அப்படியா. ஏன்?''
''வாங்கிட்டுப்போன குடையை நீ எப்ப திருப்பித் தரப்போறேன்னு!''



''என் மனைவியின் கை பக்குவம் யாருக்கும் வராது''
''ம் பார்த்தேனே ஒரு அடிக்கே உங்க கன்னம் சிவந்துபோச்சே''

# கருணைதேசம்

சிறுகதை

மருதோடை நிலா

அன்று ஜனவரி-12. இரவு பன்னிரெண்டு மணியிலிருந்து உமேஷின் மொபைலுக்கு விடுமுறை கிடைக்கவில்லை. உறவுகள், தோழர்கள் என மாறிமாறி வாழ்த்து மழையில் நனைத்துக் கொண்டிருந்தார்கள். காரணம் உமேஷ் பூமியில் ஜனனித்த நாள்தான் இன்று. ஆனால், எந்த வாழ்த்தையும் அவனது மனம் ஏற்றுக்கொள்ளவில்லை. யாரை, யாருடைய வாழ்த்தை தரிசிக்கத் தவமிருந்தானோ, அதுவே அவனுக்குக் கிடைக்கவில்லை. எப்படித்தான் அவனால் சந்தோஷிக்க முடியும்? நந்தகியின் மொபைலுக்கு அழைத்துக் கொண்டேயிருந்தான். அடைய முடியவில்லை. நந்தகியின் மேல் சினத்தின் உச்சத்திலிருந்தான் உமேஷ்.

நண்பர் குழாம் எல்லோரும் கூடிவிட்டார்கள். நேரமும் நான்கைத் தொட்டுக் கொண்டிருந்தது. ''உமேஷ்... கேக் கட் பண்ணு...'' அவனது நண்பன் அமல் கூறிக் கொண்டிருந்தான்.


''டேய் அமல்... கொஞ்சம் லேட்டாகட்டுமே...'' இழுத்தான் உமேஷ்.

கடிகார முட்கள், விரைந்து நேரத்தை பிரசவித்துக்கொண்டிருந்தன. அவள் ஒருத்திக்காய் மற்றவர்களின் சந்தோஷங்களைப் பறிக்க விரும்பாதவனாக, சம்பிரதாயத்துக்காய் நிகழ்வில் கலந்துகொண்டான். முடிந்த மறுநொடியே ''ச்சே... என் நந்துவா இப்படிப் பண்ணுறா?'' உமேஷால் நம்ப முடியவில்லை. அத்தனை கோபத்தையும் சுமந்தவனாய் பைக்கிற்கு உதைத்தான். அது உயிர் பெற்றது.

அது ஈழத்தில் புனிதப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலம். உரிமை, ஈகம் என்ற அடிப்படை ஆதங்கத்தோடு எம்மவர்கள் போராடிக் கொண்டிருந்தார்கள். வன்னித் தாயை வன்பறிப்பாளர்களிடம் சிக்கவிடாமல், காக்கும் நோக்கில் களமாடிக் கொண்டிருந்தார்கள் போராளிகள். மடிந்து மாண்டவர் போக, எஞ்சியோர் வீர வடுக்களை வரித்துக்கொள்ளத் துடித்தார்கள். மீண்டும் உயிர்பெறத் துடித்தார்கள். போராளிகளுக்கான இரத்ததானம் கேட்டு வன்னியிலுள்ள பள்ளிகள் தோறும் விண்ணப்பம் வந்திருந்தது. அப்போது உமேஷ், மருத்துவப் போராளியாய் தன் தேசத்திற்குப் பணி செய்துகொண்டிருந்தான். கடமையின் நிமித்தம் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்குச் சென்றிருந்தான். வீரப் போரின் முக்கியத்துவம், இன்றைய தேவை பற்றி உரையாடிவிட்டு இரத்ததானத்தின் அவசியம் பற்றியும் விளக்கினான். இருநூறுக்கு மேற்பட்ட உயர்தர மாணவர்கள் குழுமியிருந்தும் எவரும் முன்வரவில்லை. ஓர் இளம் ஆசிரியர் எழுந்தார். ''நந்தகி மிஸ் எழும்புறா... நாங்களும் எழும்புவம்...'' மாணவர்களுள் சலசலப்பு. எல்லோரும் முன்வந்தார்கள். உமேஷுக்கு ஆச்சரியமாக இருந்தது. இங்குதான் நந்தகியை முதன்முதலில் சந்தித்தான்.

அவளின் சேவை மனப்பாங்கு, எளிமை என, எல்லாமே அவனை கவர்ந்துகொள்ள. தேசத்தோடு சேர்த்து அவளையும் நேசித்தான். அவளும் மறுநொடியே ஏற்றுக்கொண்டாள். அவன் களப்பணியையும், இவள் கல்விப் பணியையும் செய்து கொண்டிருந்தார்கள். அப்போதுதான் யுத்தம் இவர்கள் தேசத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டது. வெளிநாடுகளிடம் யாசித்த பொருட்களைக் கொண்டு எம்மக்களும், மண்ணின் காவலர்களும் தோற்கடிக்கப் பட்டு அகதிகளாக்கப்பட்டார்கள்.

இரத்தம், கண்ணீர் என தமிழர்களின் எழுக்கனாவுகள் சிதைந்து போயின. அடுத்தடுத்து எல்லாமே அவசரமாய் நடந்து முடிந்தன. அகதி என்ற அடைமொழியோடு மக்கள் இடைத் தங்கல் முகாம்களில் அடைக்கலம் புகுந்தார்கள். உமேஷ் புனர்வாழ்வு என்ற பெயரில் தடுத்து வைக்கப்பட்டான். நந்தகியும் அவன் வருவான் எனும் நம்பிக்கையோடு காத்திருந்தாள். அவள் பிரார்த்தனைகளும், கண்ணீரும் வீண்போகவில்லை. உமேஷ் விடுதலை செய்யப்படவும், அவர்கள் சொந்தக் கிராமங்களில் மீள்குடியேற்றம் செய்யப்படவும் சரியாக இருந்தது. விடுதலை வேட்கை நெஞ்சுக்குள் கனன்றாலும், மக்கள் பணிசெய்து மனதை தேற்றிக் கொண்டார்கள். இவ்வாறாக நினைவுகளின் சங்கமத்தோடு நந்தகியின் வீட்டையடைந்தான் உமேஷ். அழைப்புமணி மெல்லியதாய் இசைத்தது. கதவைத் திறந்த ஷயூரா ''வாங்க உமேஷ்... சொரி... போர்த்டேக்கு வர முடியல...'' கதிரையை இழுத்துப் போட்டாள். ''இல்லை ஷயூரா... நந்து வந்தாளா? போன்கூட ஓவ்ல இருக்கு'' அவன் குரலில் இழையோடியது என்னவிதமான உணர்வு என்பதை ஷயூராவால் ஊகிக்க முடியவில்லை. ''உமேஷ்... யாரோ ரிலேஷன்ஸ் கொஸ்பிறற்ல அட்மிட் ஆகியிருக்காங்களாம்... அதுதான் போயிருக்கா போல...'' என்ற ஷயூராவிடம், ''எந்த கொஸ்பிறற்ல்?'' அவசரம் தெரிந்தது அவன் குரலில். ''அது... வந்து... மலர் மெடிக்கல் சென்டர். உமேஷ்... உங்களுக்குச் சொல்ல வேணாம்...'' அவள் முடிக்கும் முன்னே, ''எதுக்கு சொல்லவேணாம்? நீயும் உன்னோட ப்ரண்டும் சேர்ந்து என்னை ஏமாத்துறீங்களா...? நான் அவகிட்டயே கேட்டுக்கிறேன்...''



ஷயூரா மௌனித்துப்போய் நின்றாள். உமேஷ் இப்படி கோபப்பட்டதை அவள் ஒருநாளும் கண்டதில்லை. ''நந்தகி ஏன்தான் இப்படிப் பண்றாளோ...?'' தோழியை நொந்துகொண்டாள் ஷயூரா.

உமேஷ் கொதித்துப் போனான். 'நீங்கதான் என் உயிர்.' என்று சொன்ன நந்தகியா இவ? ஒருநாள் பேசாமல் விட்டாலும், அன்று முழுக்க அழுதுகொண்டிருக்கும் நந்தகியா இப்படிச் செய்கிறா? உமேஷால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. 'என்னிடம் மறைப்பதற்கு என்ன இருக்கிறது? எதற்காக மறைக்கிறாள்? ஒருவேளை வேறு யாரையாவது.... ச்சேச்சே... என் நந்து எனக்கு மட்டும்தான் சொந்தம்...' கற்பனை செய்யவே அவனுக்கு கஷ்டமாக இருந்தது. தன் கோபத்தை பைக்கின் வேகத்தில் காட்டி பைக்கை விரட்டினான்.

மருத்துவமனை சுறுசுறுப்பாய் இயங்கிக்கொண்டிருந்தது. மருத்துவர்களும், தாதிமாரும் தத்தமது பணிகளில் மும்முரமாக இருந்தார்கள். இலக்கில்லாமல் விழிகளை மேயவிட்ட உமேஷ், நந்தகியைத் தேடினான். அறைஎண் மூன்றில் அவனது விழிகள் நிலை குத்தின. அந்தக் கட்டில், அதில் படுத்திருப்பவள்... நந்தகியே தான். அவளருகில் ஓர் இளைஞன். யாராக இருக்கும்? இத்தனை நெருக்கமாய் இருந்து என் நந்துவுக்கு... இல்லையில்லை... அவளுக்கு உணவூட்டுகிறானே...? உமேஷால் நின்று நிதானித்து யோசிக்க முடியவில்லை.

அவனது இதயம் உடைந்து நொருங்கியது. நொருங்கியது இதயம் மட்டுமல்ல, அவனது காதலும் தான். நந்தகியை அண்மித்தான் உமேஷ். ஓய்ந்துபோய் படுத்திருந்தாள். வழமையாய் அவள் விழிகளில் தெரியும் பரவசம், மகிழ்ச்சி எல்லாமே தொலைந்துபோய் பயம் தெரிந்தது. உமேஷைக் கண்டதும் அருகில் இருந்த இளைஞன் எழுந்துகொண்டான். அவன் மீது அருவருப்புப் பார்வையையும், நந்தகிமீது அக்கினிப் பார்வையையும் வீசியவன், ''ஏய்... நீயெல்லாம் ஒரு பொம்பிளையா? உனக்கெல்லாம் எதுக்குடி காதல்? உன்னையா நான் உருகிஉருகி நேசிச்சேன்...? நம்ம எதிர்கால வாழ்க்கையைப் பற்றி ஒரு கோட்டையே கட்டிவைச்சிருந்தேன். எல்லாத்தையும் தகர்த்திட்டியேடி. பாவி. பெண் வர்க்கமே இப்படித்தானா? அன்பென்ற அழகான சொல்லை அர்த்தப்படுத்தத் தெரியாம... அழிக்கிற நீங்களெல்லாம் ஏண்டி அன்பு வைக்கிறீங்க? உடுப்பை கழட்டி எறியுற மாதிரி என்னையும் என் காதலையும் கழட்டி எறிஞ்சிட்டியேடி... உன்னை நேசிச்சதுக்காக வெட்கப் படுறேன். இதோ நிற்கிறானே... இவனையாவது உண்மையா நேசி. என் வாழ்த்துக்கள் எப்போதும் உனக்கிருக்கும்...'' உமேஷ் நின்ற நிலையைப் பார்த்தால் கோபமே பயந்து போய்விடும். அத்தனை சீற்றம் அவனுக்குள். அந்த இளைஞன் அப்பாவியாய் விழித்தான். நந்தகி பிரமை பிடித்தவள்போல இருந்தாள். உமேஷ், அவசரமாய் அறையை விட்டு வெளியேறினான். ''உமேஷ்... கூப்பிடுங்க...'' இயலாமையுடன் இழுத்தாள் நந்தகி. அந்த இளைஞன் உமேஷைநோக்கி ஓடினான். ''உமேஷ்.... ப்ளீஸ் நில்லுங்க. நந்தகி கூப்பிடுறாங்க. ஒரு நிமிஷம் பேசிட்டுப் போங்க...'' இளைஞன் தடுமாறினான். ''என் வாழ்க்கையில எத்தனையோ பொன்னான நிமிஷங்களை அவளுக்காக இழந்திட்டேன். இனிமேலும் ஒரு நிமிஷத்தைக்கூட... இழக்க மாட்டேன்..'' அவசரமாய் கூறிவிட்டு போய்க்கொண்டிருந்தான் உமேஷ். இருவருக்கும் நடுவிலிருந்து தவித்துப் போனான் அந்த இளைஞன். நந்தகி கண்ணீரில் கரைந்துகொண்டிருந்தாள். அவளின் கண்ணீரைப் போலவே, நாளும் வேகமாய்க் கரைந்தது. உமேஷின் வீடே சோபையிழந்திருந்தது. அவன் அறைக்குள் முடங்கிப் போயிருந்தான். வெளியில் காலடிச் சத்தம் கேட்டது. யாரோ வருகிறார்கள் என்பதை உணர்ந்தவன், கதவு திறந்தே இருப்பதால் பேசாமல் இருந்துவிட்டான். ஷயூராதான் நின்றிருந்தாள். யாரை மறக்க நினைக்கிறானோ, அவர் சம்மந்தப்பட்டவர்களே வந்து நிற்பது அவனுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது.


ஷயூரா கையிலிருந்த சுடர்ஒளி வாரமலரை உமேஷுக்கு முன் வீசினாள். முகமும் கடுகடுப்பாய் இருந்தது. ''உமேஷ்... ஒரு நிமிஷம் இந்தப் பேப்பரைப் படிங்க. அப்புறம் புரியும். நந்தகி உங்களை ஏமாத்தினாளா...? இல்லை... உங்களை நீங்களே ஏமாத்திக்கிட்டீங்களா என்றது...'' ஷயூராவின் சன்னக்குரல் உமேஷை ஒருகணம் திடுக்கிட வைத்தது. அவசரமாய் பத்திரிகையைப் புரட்டினான். ஒரு பக்கத்தில் தெரிந்த புகைப்படத்தை இமைக்காமல் பார்த்தான்.

சிறுநீரகம் இரண்டும் செயலிழந்து இருப்பதால் உதவிக்கரம் நீட்டுங்கள் என்றிருந்தது. அன்பு ஒளி வீசும் ஐம்பது வயது நிரம்பிய பெண்மணி. இவர்... இவர்... கடந்துபோன பல ஆண்டுகளுக்கு முன்பு, யுத்தத்தின் சாபக்கேட்டால் அநாதையாகக் கிடந்த பிஞ்சுக் குழந்தை, அவன்தான் உமேஷ். அவன் மட்டுமல்ல, ஆயிரக்கணக்கான அனாதைகளுக்கு அன்னையாக வாழ்ந்தவர். செஞ்சோலை இல்லத்தின் முகாமையாளர்.

பத்திரிகையையும், ஷயூராவையும் மாறிமாறிப் பார்த்தான். ''புரியலையா உமேஷ்? நீங்க உங்க தெய்வம் என்று சொல்வீங்களே... அந்த அம்மாவுக்குத்தான் தன்ர கிட்னியை நந்து டொனேட் பண்ணியிருக்கா... உங்க போர்த் டேயில இந்த நல்ல செயலைச் செய்யணும் என்கிற ஆசையில...'' அவள் முடிக்கும் முன்பே, ''எ.. என்..ன? நந்து தன்ர கிட்னியை... அம்மாவுக்கு'' கண்ணீரோடு தடுமாறினான். ''ஷயூரா நான்... நான் நந்துவைப் பார்க்கணும்...'' இருவரும் பைக்கிலே தொற்றிக்கொள்ள பைக் விரைந்தது.

நந்தகி படுத்திருந்தாள். நிறையவே அழுதிருப்பது தெரிந்தது. ''நந்தும்மா... சொறிடா. உன்னைப்போய் தப்பாய்...'' அடக்க முடியாமல் விம்மினான். ''ஹேய் உமேஷ்... அழாதீங்க ப்ளீஸ். நீங்க எனக்கு உயிர். உங்க உயிரை எனக்குத் தந்தது அந்த அம்மாதான். இந்த சமூகசேவகி உயிரை காப்பாற்றுறது... என்னோட கடமையும் கைமாறும் கூடவே...'' அவளின் பேச்சின் ஆழம் உமேஷை மெய்சிலிர்க்க வைத்தது. ''குட். இப்படித்தான் இருக்கணும். உமேஷ்... நீங்க தப்பாய் புரிஞ்சுகொண்ட அந்த இளைஞன்தான் நான். என் பேரு விசித்திரன். உங்களைப் பார்த்ததும் நான் அதிர்ச்சி அடைஞ்சதுக்கு காரணமும் இருக்கு. நான் அரசசார்பற்ற அமைப்பில் வேலை செய்றேன். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு, நீங்க எங்க அமைப்புக்கு வந்து... உங்க கிட்னி ஒன்றை டொனேட் பண்ணுனீங்க தானே? '' என்றதும், ''ஆமா...ம்'' என்று இழுத்த உமேஷை, இமைக்காமல் பார்த்தாள் நந்தகி. ஆச்சரியம், பெருமிதம் என எல்லா உணர்வுகளும் அவள் பார்வையில் கலந்திருந்தன. ''உமேஷ்... நந்தகி ஒவ்வொரு இளைஞனும் யுவதியும்... உங்க மனப்பாங்கோடு இருந்தால் இந்த யுத்த தேசம்... கருணை தேசமாய் மாறிடும்...'' அந்த இளைஞனின் உணர்வுபூர்வமான பேச்சு, அங்கிருந்த எல்லோருடைய உள்ளங்களையும் தொட்டது. இந்த காதல் பறவைகள் சிறகடித்தார்கள். புதியதொரு கருணைதேசம் செல்வதற்காய்....

''தனக்காக வாழாதவன் தான்- பிறருக்காக தன்னை தியாகம் செய்வான்'' *


அபான்ஸின் பொங்கல்
விலை தள்ளுபடி
"பொங்கலோ... பொங்கல்"
பிறக்கின்ற தைப்பொங்கல் எமக்கான ஒரு புதிய தசாப்தத்தை உதயமாக்கும்.
எனவே பழையன கலைந்து புதியன பெருக்கி, தைத்திருநாளை இனிதே வரவேற்போம்.
ஓடியோ சிஸ்டம்
PHILIPS
FWD197
• DVD
• USB
• Dolby Digital
ரூ.19,990
ஹோம் தியட்டர் சிஸ்டம்
LG
HT355
• DVD
• USB
• சரவுண்ட் ஒலி
ரூ.19,990
LG
HT3530
• 600W
• USB
• HDMI
ரூ.39,990
குளிர்சாதனப்பெட்டிகள்
GLM252
ரூ.4,180
GLM282
ரூ.59,990
15
வளிச்சீராக்கிகள்
LG
12000btu
ரூ.72,900
18000btu
ரூ.88,900
24000btu
ரூ.113,900
MITSUBISHI இன்வேட்டர்
12000btu
ரூ.132,000
18000btu
ரூ.158,900
24000btu
ரூ.208,900
FD5108
ஹேண்ட் ப்ளெண்டர்
ரூ.3,053
உணவு தயார்படுத்தி
FD5115
ரூ.5,828
ஸ்மூத்தி மேக்கர்
ரூ.8,100
மின் கேத்தல்
FD2115
ரூ.3,658
மெழுகுவர்த்தி இருக்கைகள்
ரூ.275 இலிருந்து
குளியலறை, சமயலறை தராசுகள்
வெட்டும் போர்ட்டுகள்
லொக் என்ட் லொக் ப்ளாஸ்டிக் கொள்கலன்கள்
டோஸ்டர்கள்
Sanyo - Japan
Morphy - Richards
Frigidaire
Morphy Richards
GEMMY கண்ணாடி உபகரணங்கள்
ரூ.475 இலிருந்து
pyrex
6 in 1
மல்டி குக்கர்
ரூ.9,676
அளவை பாத்திரம்
வோபிள் மேக்கர்
FD 3152
2in1
ரூ.4,400
கண்ணாடி குவளைகள்
MEYER
சைனீஸ் தாச்சி
Electrolux
தரை பொலிஷர்
ரூ.26,195
Toyostar BBQ
ரூ.7,700
சலவை இயந்திரம்
பேசும் சலவை இயந்திரம்
ரூ.69,990
LG இலத்திரனியல் அடுப்புகள்
MS1927C
ரூ.10,990
MS2387AR
• 4 LED திரை
ரூ.14,400
MS1947C
• 19லி
ரூ.12,990
MS3046S
• 30லி
ரூ.19,990
ELBA பொறியடுப்பு
55W20I
ரூ.47,250
5342K
ரூ.67,600
pyrex
CORELLE
ரூ.734 சேட்
ரூ.582 சேட்
CORNINGWARE
VISIONS
FD5101
ரூ.2,131
FD1127
FD8015
ரைஸ் குக்கர்
ரூ.2,543
FD8016
ரூ.2,738
ரூ.1,573
ரூ.4,209
டோஸ்டர்
FD3122
ரூ.4,400
FD3131
ரூ.3,654
60
36
24
கடனட்டையாளர்களுக்கு
NO POLI MORE JOLLY
அபான்ஸ்
நாடெங்கிலும் 100 அபான்ஸ் விற்பனைக்கு பிந்திய சேவை நிலையங்கள்

# பிரச்சினைக்கு வெளியேயா; உள்ளேயா நிற்பது சரி?

ஜோசவ் தயாளன்



பிரச்சினைக்கு வெளியே இருப்பது பாதுகாப்பானதா பிரச்சினைக்கு உள்ளே இருப்பது பாதுகாப்பானதா என்ற கேள்வியில் பிரச்சினைக்கு முகம்கொடுப்பதே புத்திசாலித்தனமாது என்று உளவியலாளர்களும், அபிவிருத்தி நடவடிக்கைகளை வலியுறுத்துவோரும் தெரிவிப்பர்.

இவர்களுடைய இந்தக் கூற்றுக்கு நியாயமான காரணங்களும், அடிப்படைகளும் இருக்கலாம்.

ஆனால், பிரச்சினைகளுக்குள்-போருக்குள்-வன்னிக்குள் இருந்தவர்கள் இறுதியாகச் சந்தித்த விளைவுகளும் பெற்றுக்கொண்ட நிலைமையும் சாதாரணமானவை அல்ல.

வன்னியில் இருந்து துக்கம் நிறைந்த நெஞ்சோடும், காயங்கள், இழப்புகளோடும் அகதிமுகாம்களுக்குச் சென்றதே இறுதிப் பரிசாகியது.

ஆனால், பிரச்சினைக்கு வெளியே-வன்னிக்கு வெளியே (கொழும்பிலோ அல்லது வெளிநாடுகளிலோ) வாழ்ந்தவர்கள் ஒப்பீட்டளவில் பாதுகாப்பாகவும், இழப்புகள்



குறைந்தோராக அல்லது இழப்புகளோ இல்லாதோராகவும் காணப்படுகின்றனர். குறிப்பாக வடக்கில் ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலைமையின் காரணமாக யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறிப் போய் கொழும்பில் தங்கியிருந்தார் ஒருவர். அதிக பணத்தையோ, பொருட்களையோ கொண்டு செல்லவில்லை. கொழும்பில் படித்து, வேலைசெய்து அங்கேயே இருப்பிடம் தேடியோடி வாழ்க்கையை அமைத்துக் கொண்டார். இந்தக் காலப்பகுதியில் கொழும்பில் இருந்த நெருக்கடிகளை ஒரு வடபகுதித் தமிழர் என்ற வகையில் இவரும் எதிர்கொள்ளவேண்டியே இருந்தது.

எனினும், நண்பர் மெல்ல மெல்லத் தன்னை ஸ்திரப்படுத்திக்கொண்டார். யுத்தம் முடிந்த 2009 இற்குப் பின்னரான சூழலில்தான் இவர் யாழ்ப்பாணம் திரும்பியிருந்தார்.

இப்போது நண்பருக்கு கொழும்பில் வீடும் உண்டு. யாழ்ப்பாணத்திலும் உண்டு. யாழ்ப்பாணத்துக்கு அவர் திரும்பி வந்தபோது, தான் சேகரித்த பெருமளவு பொருட்களைக் கொண்டுவந்தார். ஏராளம் புத்தகங்கள், தேர்ந்த சேமிப்புகள் என்பவற்றையும் கொண்டுவந்தார்.

இது தனியே ஒருவர் பற்றிய தகவல் அல்ல. இவ்வாறு பிரச்சினைக்கு வெளியே இருந்தவர்கள் மீண்டும் ஊருக்குத் திரும்பும்போது தங்களுடைய பாதுகாப்பான வாழ்க்கையோடு திரும்புகிறார்கள். அத்துடன் வேண்டிய சேகரிப்புகளோடும், தேட்டங்களோடும் மீள்கிறார்கள்.

இவர்களுள் கொழும்பில் இருந்தவர்கள் மட்டுமன்றி வவுனியா, இந்தியா, புலம்பெயர் நாடுகள் என சகல இடங்களிலும் இருப்பவர்கள் அடங்குவர்.

அதாவது, பிரச்சினைக்கு முகங்கொடுத்தவர்கள் தம்மை சிதைத்துக்கொண்டனர்-வெறுமை யாக்கப்பட்டனர்.

பிரச்சினைக்கு வெளியே நின்றோர் பாதுகாப்பாக இருந்தனர். இழப்புகளையும், சேதங்களையும் தவிர்த்துக்கொண்டனர்.

இங்கேதான் எமக்கு அடிப்படையில் ஒரு கேள்வி பிறக்கிறது. அதாவது, பிரச்சினையைத் தவிர்த்துக்கொண்டு வெளியரங்கில் நிற்பது சரியா? அல்லது பிரச்சினைக்கு முகங்கொடுத்துப் போராடுவது சரியா?

இந்தக் கேள்வியில் இன்னொரு முக்கியமான விடயத்தையும் கவனிக்கலாம்.

பிரச்சினைக்கு வெளியில்-பிரச்சினையின் மையப் பகுதியில்-அதன் தளத்தில் நின்று முகங்கொடுத்தோர் இன்று பொருளாதார நிலையில் மட்டுமல்ல, அரசியல் மற்றும் வாழ்க்கை நிலையிலும் களைப்படைந்தோராகவே உள்ளனர்.

சுருக்கமாகச் சொன்னால், மிகவும் நலிந்த நிலையிலேயே இவர்கள் இருக்கின்றனர். அந்த அளவுக்கு பிரச்சினை இவர்களைச் சிதைத்துவிட்டது. இன்றும் அதன் பாதிப்புக்கள் இவர்களை விட்டுவைக்கவில்லை. புதிதாகப் பிரச்சினைக்கு வெளியே நின்றோர் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார வசதிகள், பிறவாய்ப்புகள் எல்லாவற்றிலும் சகல ஸ்தானங்களிலும் தங்களை ஸ்திரப்படுத்திக்கொண்டவர்களாக இருப்பதுடன் அரசியலில் குரல்தர வல்லோராக செயற்படுநிலையில் இருக்கின்றனர்.

இதை இன்னொருவர் இவ்விதம் விளக்கமளிக்கின்றார்.

விடுதலைப் புலிகளையும் அதன் தலைமையையும் அங்கீகரித்தவர்களும்-ஏற்றுக் கொண்டவர்களும் இன்று செயல்நிலையற்றவர்களாகியுள்ளனர். (இதில் சகல நிலையில் உள்ளவர்களும் அடங்குவர்)

குறிப்பாகப் பலர் இறந்துவிட்டனர். ஏனையோர் அரசியலற்ற வாழ்க்கையில்-பொது வாழ்க்கையின் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆனால், விடுதலைப் புலிகளுக்கு வெளியே செயற்பட்டோரும், புலிகளை நிராகரித்தோரும் இன்று தம்மை ஸ்திரப்படுத்தியுள்ளனர் அல்லது செயற்படும் வாய்ப்பைக் கொண்டுள்ளனர்.



அவ்வாறாயின், இதில் எது சரி? எது பிழை? வரலாறு எதைச் சொல்கிறது? எதைச் சரியென நிரூபிக்கிறது?

இந்த மாதிரியான எண்ணங்களும்-சந்தேகங்களும்-நடைமுறை அனுபவங்களும்-தோல்விகளும்-உண்மைகளும் முகத்திலறைய இன்று பலர் தங்கள் வாழ்வை எதிர்கொண்டவாறு உள்ளனர்.

குறிப்பாகப் பிரச்சினையின் மையத்திலிருந்தோரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தோரும் இந்தக் கேள்வியோடு இன்று உள்ளனர். எதற்கும் உத்தரவாதம் அற்ற ஒரு வெளியில்-பாதுகாப்பு இல்லாத நிலையில் இன்று இருப்பதாக இவர்கள் கருதுகின்றனர்.

உண்மை நிலைமையும் இதுவேதான். அதாவது, வாழ்வாதாரத்துக்கான உத்தரவாதம் (தொழில், பதில் வருமானம், இருப்பிடம் போன்றனகூட இல்லாத நிலை) அரசியல் பாதுகாப்பற்ற நிலை வெளியே புலம்பெயர் நாடுகளில் முன்னெடுக்கப்பட்டுவரும் அதிதீவிர நிலைப்பாட்டு நடவடிக்கைகளுக்கு இவர்களே பலிக்கடாக்கள் ஆக்கப்படுகிறார்கள் என்ற ஒரு யதார்த்தம் இவர்களுக்கு இன்று ஏற்பட்டுள்ளது.

எனவே, பிரச்சினைகளில் இருந்து வெளியே வருதல் -பிரச்சினைகளில் இருந்து விடுபடுதல் என்பதே இன்றைய நிலையில் சரியானதாகவும், அவசியத் தேர்வாகவும் ஆகியுள்ளது.

ஒரு பாதுகாப்பான சூழ்லுக்குச் செல்வதற்கும், சமாளிக்கக்கூடிய வாறான ஒரு நிலையைச் சென்றடைவதற்கும் பிரச்சினைகளுக்கு அப்பலாலான ஒரு வாழ்க்கைத் தேர்வே இன்று அவசியமாகவும் - சரியானதாகவும் இருக்கின்றது.

சர்வதேச ரீதியான மாறுதல்கள் ஏற்படும்வரை இந்த யதார்த்தமே அவசியமாகும். இதை எவரும் தவிர்க்க முடியாது.

ஒன்றின் தேர்வென்பதும், தீர்மானம் என்பதும் அது சார்ந்த சூழலின் தாக்கத்தினாலும்-விளைவினாலும் அமைவது என்பதை இங்கே கவனிப்பது அவசியம்.

*

# என்றும் என் இதயம் கவர்ந்த இளவரசர் ராஜீவ் மட்டுமே!

இன்று இந்தியாவில் மட்டுமன்றி உலகின் எந்த மூலைமுடுக்கிலும் பிரசித்திபெற்ற பெயர் சோனியா. இத்தாலியப் பிரஜையான இந்த அதிரூப சுந்தரி இந்தியாவின் புகழ்பெற்ற நேரு குடும்பத்தில் இணைந்தது ஒரு வரலாற்று அதிசயம். அதனை விட தன் உயிரிலும் மேலாக பாதுகாத்து வந்த ராஜீவின் அகால மரணத்தின் பின் அடியோடு நிலை குலைந்து போன சோனியா, கடந்த எட்டு வருடங்களாக பல்வேறு இடையில் நேருவின் குடும்ப நாமம் கலையாமல் கட்டுக் கோப்பாகவும் கண்ணியமாகவும் வாழ்க்கை நடத்தி வருகிறார். அத்துடன் அரசியலிலும் கூட வீண் விதாண்டா வாதங்கள், ஏளனங்கள், கிசுகிசுப்புகள் ஆகியவற்றில் சிக்காமல் ஓர் உதாரணப் பெண்மணியாக விளங்கி வருகிறார்.

சோனியா என சுருக்கமாக அழைக்கப்படும் சோனியா காந்தியின் கன்னிப் பெயர் எட்விஜ் அன்டோனியா அல்பினா மெய்னோ. தந்தை ஸ்டெபானோ, தாய் பாலோ மெய்னோ.

மத்திய தரத்தைச் சேர்ந்தது அவர்கள் எது குடும்பம். பெரும் சுமையின்றி ஓடிக்கொண்டிருந்த வாழ்க்கை, கட்டட ஒப்பந்தக்காரராகப் பணிபுரிந்து வந்த ஸ்டெபானோவின் திடீர் மறைவின் பின் தத்தளிக்க ஆரம்பித்தது. கல்வியை தொடரக்கூட சோனியாவுக்கு வசதி வாய்ப்பில்லை. 18 ஆவது வயதில் உணவகம் ஒன்றில் பகுதிநேர வெயிட்டராகப் பணிபுரிந்து தனது படிப்புக்கான பணத்தைத் தேடினார். அந்த சமயத்தில்தான் அவரது காதல் இளவரசனை சந்திக்க முடிந்தது.

நான் சோனியாவின் வகுப்புத் தோழன். எனது வாழ்வில் நான் அது வரை சந்தித்திருந்த ஏராளமான அழகிகளில் தனியானதொரு சோபையை அவர் பெற்றிருந்தார். சில சமயங்களில் அவர் பூலோகத்துப் பெண்ணா அல்லது வானுலகில் இருந்து எனக்காக தேவன் அனுப்பிவைத்த விசேட படைப்பா எனக்கூட வியந்ததுண்டு. அச்சமயம் இந்தியாவில் பெரும்புகழ் பெற்றிருந்தது எங்கள் குடும்பம். என் கண்ணசைவுக்காக பெரும் செல்வந்தர்களும் பிரபலங்களும் என்னை மருமகனாக்கிக் கொள்ளக் காத்திருந்தனர்.

ஆனால், எளிமையான தோற்றத்துடன், நளினமான நடையுடைகளுடன், இனிமையான பேச்சுடன் வலம்வந்த சோனியாவுக்கு முன்னால் எந்தப் பெண்ணும் ஈடாகமாட்டாள். அவளது குடும்பப் பின்னணி எங்கள் குடும்பப் பின்னணிக்கு சமீபமாகக் கூட வரமுடியாது. ஆனால், அந்தத் தடைகள் எல்லாம் எனக்கு இரண்டாம்



பட்சமாகவே தோன்றியது.

'ராஜீவ் நீ கண்ட முதல் பெண்ணே உனக்குப் பிடித்தவளாக இருக்க வேண்டுமென்ற கட்டாயம் கிடையாது. அவசரப்படாமல் நிதானமாகத் தேடி உனக்குப் பொருத்தமானவளை நீ தேர்ந்தெடு' - என எனது தாய் இந்திரா அடிக்கடி கூறுவார். ஆனால், சோனியாவைக் கண்டதும் இந்த உலகில் அவளை விட சிறந்த பெண்ணொருத்தி எனக்குக் கிடைக்க வாய்ப்பேயில்லை என அம்மாவிடம் உறுதியாகக் கூறிவிட்டேன்.'' என தனது இளமைக்கால நினைவுகளை அன்று அசைபோட்டார் ராஜீவ் காந்தி.

''நான் பணிபுரிந்த உணவகத்தில் ஒரு நாள் அழகிய வாலிபர் ஒருவர் அமர்ந்திருந்தார். நாள்தோறும் ஏராளமான ஆடவர்களை உணவகத்தில் சந்திப்பதால் நான் இந்த வாலிபரையும் சாதாரணமாக நோக்கினேன். என்னையே உற்று நோக்கிக்கொண்டிருந்த அந்தக் கண்களில் இருந்து வந்த ஆகர்ஷண சக்தி என்னை நிலைகுலைய வைத்துவிட்டது. வெறும் பார்வைதான். எந்தவித பேச்சும் இல்லை. ஆனால், அந்தக் கணநேரப் பார்வை என் இதயத்துக்குள் ஊடுருவிப் பாய்ந்து விட்டது. அதில் ஆயிரமாயிரம் அர்த்தங்கள் இருந்தன. எனது இதயத்துடிப்பே நின்று விட்டது போல இருந்தது. முன்பின் தெரியாத ஓர் ஆடவனின் கணநேரப் பார்வை என்னை காற்றில் பறக்க வைத்தது.

அதன்பின் அடிக்கடி ராஜீவ் உணவகத்துக்கு வருவார். எங்களது தொடர்பு படிப்படியாகத் தொடர்ந்தது. ஒருவர் இன்றி மற்றவர் இல்லையென்ற நிலைக்கு வந்துவிட்டோம். இத்தனை நெருக்கத்தின் பின்பும் அவரது விரல் நகம் கூட என்மேல் படவில்லை.

> எனது கனவில் அன்றும் - இன்றும் - என்றும் அரியாசனம் இட்டு அமர்ந்திருக்கும் இளவரசன் ராஜீவ் மட்டுமே. அவரது இடத்தை எவராலும் நிரப்ப முடியாது. அவர் அவரேதான். கனவுலகில் மட்டுமல்ல நனவுலகிலும் எனது இராஜகுமாரன் அவரே. அவரை அந்தளவுக்கு நான் நேசிப்பது அவரது காதல் லீலைகளுக்கு மட்டுமல்ல. ஒப்பிட முடியாத அவரது ஆத்மார்த்த அன்பையே நான் இன்றும் நினைவில் வைத்துள்ளேன். எங்களது உடல்கள்தான் வேறுவேறாக இருந்தனவே தவிர உள்ளங்கள் ஒன்றாகவே இருந்தன. அவரது உடலை மட்டுமே இறைவனால் என்னிடமிருந்து பிரிக்க முடிந்ததே தவிர உள்ளத்தை எள்ளளவும் தகர்க்க முடியவில்லை.

அந்தக் கண்ணியம்தான் அவர் மீது நான் கொண்ட காதலை மேலும் தீவிரப்படுத்தியது.

எங்களது தொடர்பை தனது அம்மாவுக்குத் தெரியப்படுத்தினார் ராஜீவ். எவ்வித மறுப்புமின்றி என்னை இந்திரா காந்தி ஏற்றுக்கொண்டார். ஆனால், பிரமாண்டமான பாரத நாட்டின் பலம் வாய்ந்த பிரதமரான இந்திரா காந்தியை எனது மாமியாராக எண்ணிப் பார்க்கவே எனக்குள் உதறல் எடுத்தது. இதை ராஜீவ் மூலம் தெரிந்துகொண்ட இந்திரா என்னுடன் தொலைபேசியில் எனது தாய்மொழியான பிரெஞ்சில் உரையாடி எனது அச்சத்தைப் போக்கினார். ராஜீவ் இமயம் என்றால் இந்திரா அம்மையார் அதைவிட உயர்ந்த இமயம்.

ஒருமுறை பிரமுகர்கள் விருந்தொன்றில் கலந்து கொண்டபோது யதேச்சையாக எனது கவுனின் ஒரு பகுதியில் தையல் கழன்றுவிட்டது. இதை அவதானித்த இந்திரா அம்மையார் உடனடியாக ஊசியையும் நூலையும் வரவழைத்து தன் கையாலேயே கிழிசலை தைத்துவிட்டார். பாரதத்தின் ஈடிணையற்ற பிரதமர் இந்த ஏழையின் கவுனைத் தன் கையாலேயே தைத்துவிட்டதை நினைத்து நான் நெகிழ்ந்து போனேன். அவர் எனக்கு மாமி மட்டுமல்ல தாயும்கூட. துரதிஷ்ட வசமாக இரண்டு நல்லிதயங்களையும் இழந்துவிட்டேன் நான். எனது காதல் விவகாரம் தெரிய வந்தபோது முதன் முதல் எதிர்ப்பைத் தெரிவித்தது என் தாய்தான். இத்தாலியக் கலாசாரத்துக்கும் இந்தியக் கலாசாரத்துக்கும் நிறைய வித்தியாசமிருப்பதாக எனக்கு அவர் கூறினார். அவர்களது பழக்கவழக்கங்களையும் பாரம்பரியத்தையும் உன்னால் பின்பற்ற முடியாதென அவர் எச்சரித்தார். எதைப் பின்பற்ற முடியாவிட்டாலும் எனது இராசகுமாரன் என்னைக் கைவிடமாட்டார் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. அந்த உத்தமனைப் பெற்ற இந்திரா அம்மையாரின் எளிய சுபாவமும், ஒரு பிரமாண்டமான ஜனநாயக நாட்டின் சக்தி மிக்க பிரதமர் என்ற தலைக்கனம் கிஞ்சித்தும் இல்லாமல் ஒரு சாதாரண பெண்ணாய் நடந்துகொண்ட விதமும் எனது நம்பிக்கைக்கு வலுவூட்டின. எனினும், எனது மாமியின் முன்வரும் போதெல்லாம் என்னையறியாமலே எனக்குள் சிறிது உதறல் எடுக்கும். அவர் மறைந்து சவப்பெட்டியில் கண்மூடி அமைதியாகப் படுத்திருந்தபோது எனது தாயை இழந்த சோகத்தை விட பெரும் சோகத்தை நான் அனுபவித்தேன். இன்றும் நான் சில நிமிடங்கள் கண்ணை மூடி உறங்க முயன்றால் ஒரு கண்ணில் எனது ராஜீவும், மறுகண்ணில் இந்திரா அம்மையாரும் ஒரு நிமிடம் வந்து போவார்கள் - என்கிறார் சோனியா.



எங்களது அம்மாவின் இதயம் அவரது உருவத்தைப் போலவே மிகவும் மென்மையானது. ஆனால், அந்த இதயத்துக்குள் பேரிடிகளையும் தாங்கும் பிரமாண்டமான சக்தியும் மறைத்திருந்தது. அவருடன் மிக நெருங்கிப் பழகியவர்களுக்கு மட்டுமே தெரியும். வேதனையை முகத்தில் காட்டத் தெரியாது அவருக்கு. ஆனால், அப்பாவின் சடங்குகள் முடிந்து சவப்பெட்டியை உயர்த்தும் வரை சலனமின்றி இருந்த அம்மா ''ஐயோ, மெதுவாகத் தூக்குங்கள் எனது ராஜீவுற்கு வலிக்கப் போகிறது'' என்று கதறியபோது எங்கள் அப்பாவின் உயிர் அந்த நிமிடம் தான் பிரிந்ததைப் போல எங்களுக்கு ஓர் உணர்வு ஏற்பட்டது என்கிறார்கள் ராகுல் காந்தியும் பிரியங்காவும்.

ராஜீவின் மரணத்தின்பின் இத்தாலிக்கு வந்து விடுமாறு சோனியாவின் குடும்பம் வற்புறுத்திய போதும் அவர் அவ்வாறு செல்லவில்லை. ராஜீவின் காதல் மனைவி என்பதை விட இந்திராவைப் போல தீர்க்க தரிசனமும் வல்லமையும் மிக்க ஒரு பெண் என பெரும்பாலான இந்தியர்களால் புகழப்பட்டு பிரசித்தி பெற்ற நேரு குடும்பத்தின் அடுத்த வாரிசாக அமைய அவர் மிகவும் பொருத்தமானவரென ஆரூடம் கூறப்பட்டது. எனினும், இனவாத அரசியலில் ஊறிய சில அரசியல் சக்திகள் சோனியா இந்தியப் பிரஜை அல்ல என்ற காரணத்தை முன்வைத்து அவர் பிரதமராவதைத் தடுத்தன.

அதனையடுத்து மன்மோகன் சிங்கை பிரதமராக்கி விட்டு காங்கிரஸ் கட்சியின் தலைவியாக் பணியாற்றி வருகிறார் சோனியா. சோனியா பற்றி ஞாபகங்கள் வரும்போதெல்லாம் எனக்கு இளவரசி டயானாவின் முகம் தெரியும். அரச குடுபத்தில் இணைந்த பிறகும் ஏழைகள் வாழ்வில் கரிசனை காட்டிய தியாக தீபம் டயானா. நிருபர்களின் வேட்டையில் பலகோடி இதயங்களைப் பரிதவிக்க விட்டுவிட்டு பறந்தோடிப் போன ஓர் அருமையான தேவதை.

அந்த வரிசையில் அடுத்தபடியாக நிற்கிறார் சோனியா. சாதாரண ஒரு குடும்பத்தில் பிறந்த இத்தாலியப் பெண் இந்தியாவில் நேரு குடும்பத்துடன் ஐக்கியப்பட்டபின் அன்று முதல் இன்று வரை தன் நற்பெயரையும் கண்ணியத்தையும் கட்டிக் காப்பாற்றிக் கொண்டு வருவது வியக்கத்தக்க விடயம்.

ஒருவேளை அவர் அடிக்கடி கூறுவது போல அவரது கனவில் அன்றும் இன்றும் என்றும் வரும் இராஜகுமாரன் ராஜீவும் அன்னை இந்திராவும் அவருக்கு இன்னும் ஆதர்ஷ வழிகாட்டிகளாகவே இருப்பார்களா எனவும் நினைக்கத் தோன்றுகிறது. *



விடுதலைப்புலிகள் அமைப்பு அழிக்கப்பட்டு ஒருவருடம் ஏழு மாதங்கள் கழிந்து விட்டன. உலகிலேயே பெரிய பயங்கரவாத அமைப்பு ஒன்றை அழித்து விட்டதாக தனது சாதனையை உலக நாடுகளுக்கு இலங்கை சொல்லிக்கொண்டிருக்கிறது.

ஆனால் புலிகளின் 8கப்பல்கள் இன்னும் சர்வதேச கடற்பரப்பில் ஓடிக்கொண்டிருக்கின்றன என்ற ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார் அரசின் பிரதம கொரடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன. தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் புலிகள் இயக்கம் சுறுசுறுப்பாக இயங்கி வருவதை ஏற்கனவே அரச தரப்புத் தலைவர்கள் பலர் சுட்டிக்காட்டி உள்ளனர். தற்பொழுது புலிகளின் கப்பல்களின் நடமாட்டம். குறித்தும் தகவல் வெளியாகி இருக்கிறது.

30 வருட கால யுத்தத்தை அரசு முடிவுக்கு கொண்டு வந்து சர்வதேச சமூகத்தின் பாராட்டைப் பெற்றது உண்மைதான். ஆனால் இறுதி யுத்தத்தின் போது ஏற்பட்ட பேரழிவுகள் வெளிச்சத்துக்கு வந்த போது சர்வதேச நாடுகள் இலங்கையின் சாதனையை வேதனையுடன் நோக்க ஆரம்பித்தன.


# சுடர் ஒளி

**09, ஜனவரி - 15, ஜனவரி, 2011**

85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு-14 டெலிபோன்: 0115738005

பாக்ஸ்: 0115517944 - 5

E-mail: editorial@sudaroli.com


## புலிகளின் கப்பல்களும் இலங்கையின் எதிர்காலமும்

ரஷ்யா, சீனா, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் சில அரபு நாடுகள் தவிர்ந்த ஏனைய பெரும்பாலான நாடுகள் சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கையை நிறுத்தி விசாரணை செய்ய வேண்டும் என்று கோரி வருகின்றன. ஐ.நா.செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவும் தனது விசாரணைகளின் பெரும் பகுதியை முடித்துக் கொண்டு இலங்கை வருவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறது.

இன்றைய நிலையில் சர்வதேச சமூகத்தின் ஒரு பகுதியினரைப் பகைத்துக் கொண்டு அல்லது உதாசீனம் செய்து கொண்டு அரசாங்கம் செயற்பட்டு வருகிறது. புலிகள் மீது தடை விதிக்கப்பட்ட போதும், புலிகள் தோற்கடிக்கப்பட்ட போதும், கே.பி கைது செய்யப்பட்ட போதும் சர்வதேச அரங்கில் இருந்த சூழ்நிலை இன்று இல்லை என்றே கூற வேண்டும்.

புலிகள் இருக்கும் வரை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்று இலங்கை அரசு சர்வதேச நாடுகளுக்குச் சொல்லி வந்தது. தற்போது புலிகள் அழிக்கப்பட்டு விட்டனர். இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதை அரசாங்கம் ஒரு புறம் தள்ளி வைத்துவிட்டது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிட்டால் புலிகள் மீண்டும் எழுச்சி பெறும் வாய்ப்பு இருப்பதாக ஏற்கனவே அரசியல் வாதிகள் பலர் சுட்டிக்காட்டி உள்ளனர். அரசாங்கம் தூர திருஷ்டியுடன் நடந்து கொண்டால் மட்டுமே எதிர்காலத்தில் இலங்கை பிளவுபடும் ஆபத்தைத் தடுக்க முடியும்.

# வியத்தகு கனவு

குறுங்கதை

அந்த உருவம் தலைதெறிக்க ஓடுகிறது. யார் அது? வீரக்கழல்கள் பூட்டப்பட்ட கால்கள். எதற்காக இந்த ஓட்டம்? மூச்சிரைக்கிறது. அந்த உருவம் திகிலுடன் அங்குமிங்கும் தலையைத் திருப்புகிறது. அதன் பின்னால் யார் யாரோ எல்லாம் படை பட்டாளமாகக் கலைக்கிறார்கள். அந்த உருவத்துக்கும் இவர்களுக்கும் என்ன பகை?

ஒரு பெரிய கரிய உருவம் அது. பூதாகரமான உருவம் மனத்திரையில் காட்சிப்படமாக ஓடிக்கொண்டிருக்கிறது. கடல் அலைகள் ஆர்ப்பரிக்கின்றன. நாலாபுறமும் தீப்பிளம்புகள் எரிகின்றன. தீப்பிளம்புகளையும் தாண்டிப் பாய்ந்து அந்த உருவம் ஓடிக்கொண்டிருக்கிறது.

இப்பொழுது மெல்லமெல்ல அந்த உருவம் கண்களுக்குப் புலப்படுகிறது. அது ஒரு மனித உருவம். ஆனாலும் அதன் முழு வடிவைக்காண முடியவில்லை. இருந்தாலும் திகில்நிறைந்த செயற்பாடுகளை அவதானிக்கமுடிகிறது. உயிரைக் காத்துக்கொள்வதற்கான ஓட்டமா? அல்லது செம்மறியாடுகள் பின்வாங்கி மீள வந்து முட்டிமோதுவதற்கான அணுகுமுறையா? என்னவென்றே புரியவில்லை. அந்த மனித உருவம் திடீரென இடறி விழுகிறது. என்னத்தில் இடறுண்டதென்பது புலப்படவில்லை. இடறுண்டபோது பேரிரைச்சல், கூக்குரல், அலறல். அந்த உருவம் பாதாளத்தை நோக்கி விழுகிறது. அந்தப் பாதாளப் படுக்கையில் முட்புதர்கள், பற்றைகள் முடிவில்லாமல் பரவிக்கிடக்கின்றன. பற்றைகள், முட்புதர்களில் அதனது மேனி சிக்குண்டு முட்கள் கிழிக்க இரத்தம் பீறிட களைப்பு அதை அரவணைக்கிறது. மரப்பொந்துக்குள் சுருண்டுபடுக்கிறது. காயங்களை உற்றுநோக்குகிறது. பச்சிலைகளைப் பிழிந்து மருந்தாக்கி புண்களுக்குப் பூசுகிறது. ஒருவித சோக இசை அந்த இடத்தை ஆக்கிரமிக்கிறது. நெஞ்சம் அழுகிறது.

ஏதோ சிந்தனை வயப்பட்டு மெல்ல எழுகிறது அந்த உருவம். பொந்திலிருந்து எழுந்து வெளியே வருகிறது. கைகளை அங்குமிங்கும் அசைக்கிறது. கால்களை உதறுகிறது. ஓட்டப்பந்தயத்துக்குப் புறப்பட்ட வீரன்போல அந்த உருவம் தோற்றமளிக்கிறது. தொங்கிக்கொண்டிருக்கிற படர் கொடிகளை ஒன்றாக்கிப்



பிணைக்கிறது. அந்தப் பிணைப்பில் ஒரு சவுக்கு உருவாகிறது. நாலாபுறமும் சவுக்கைச் சுழற்றி தனக்குத்தானே ஒருவித திருப்தியை வெளிப்படுத்துகிறது.

திடீரென முழந்தாளிட்டுச் சுழற்றுகிறது; துள்ளுகிறது; குதிக்கிறது; ஓடுகிறது; பாய்கிறது. பாதாளக் கிடங்கில் படிக்கட்டுகள் தெரிகின்றன. அதில் கால்பதிக்கிறது. வெளிச்சம் தெரிகிறது.

தன்னைத் துரத்திக் கலைத்தவர்கள் உல்லாசமாகச் சீட்டாடிப் பொழுதுபோக்கி, குடித்து, கும்மாளம்போடுவதைக் காண்கிறது. கண்கள் சிவக்கின்றன. நரம்புகள் முறுக்கேறுகின்றன. நினைவுகளில் ஓடிய அவலம் தெரிய ஆவேசம் கொண்ட ஒருவித உறுமல். வாய் ஏதேதோ முணுமுணுக்க ஓடுகிறது அந்த உருவம். சீட்டாடியவர்கள் நிலை தடுமாறி ஓடுகிறார்கள். ஓடஓட சவுக்கால் அடியோ அடி என அடிக்கிறது அந்த உருவம்.

கால்கள் தரை தொட்டனவா? பறக்கின்றனவா? வேகம்! வேகம்!! அந்த உருவம் கலையோ கலை என கலைக்கிறது. அந்த உருவத்தின் பின்னாலே நிலத்தில் பசுமை படர்கிறது. பூக்கள் பூக்கின்றன. மகிழ்ச்சிகரமான இசை ஒன்று பரவுகிறது.

வீல் என குழந்தை அலறிக் கத்துகிறது. திடுக்கிட்டு எழுந்து பார்த்தேன். அதிகாலை ஐந்து மணி என கடிகாரம் காட்டியது. ★

**எஸ்.கே.சஞ்சிகா**

---

### ஆஸ்திரேலிய கிரிக்கட்

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதே ஹேவாட் முரளிதரன் எறிபந்து எறிபவர் என பிரதமராக இருந்தபோது எள்ளிநகையாடியிருந்தார். இப்படிப்பட்டவருக்கு தேர்தலில் இலங்கைப்பிரதிநிதி எதிராகவே வாக்களிப்பார் என்பது தெரிந்ததே.

ஆக முட்டாள்தனமாக வாயைத்திறந்து மற்றவர்களின் கோபத்தை வாங்கிக் கட்டுவது ஆஸி வீரர்களுக்கும் அதன் நிர்வாகிகளுக்கும் கைவந்த கலையாகும். ஜோன் ஹேவாட் எங்கே, கறுப்பு உருவமான சரத்பவார் எங்கே? மஹாராஷ்டிராவின் வறிய கிராமப்புறமான பராமத்தி என்ற ஊரில் பிறந்து, தனது கடின உழைப்பால் உயர்ந்த கறுப்பு இந்தியரான சரத்பவார் வெள்ளைத்தோல் கொண்ட ஆஸி பிரதமரைத் தோற்கடித்து விடுமளவிற்கு இந்த ஆஸி கிரிக்கட் வீரர்களின் வாய்த்துடுக்கும் தந்திரங்களும் சகிக்கத் தகாதவை ஆகும்.

உலக கிரிக்கட்டில் தெற்காசிய நாடுகளின் கை வரவர ஓங்கிவருவது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்று. கிரிக்கட்டின் வளர்ச்சியில் மற்றொரு ஆரோக்கியமான படிநிலை என்றே இதைக்கூறலாம். முன்பு இந்நிலையில் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளே ஜாம்பவான்களாகத் திகழ்ந்தன.

ஆனால், பின்பு வந்த இலங்கை அவ்விரு நாடுகளையும் முந்துமளவுக்கு முன்னேறியுள்ளது. 1987 இற்குப் பிறகு 24 வருடங்களாக சகல உலகக் கிண்ண இறுதிப் போட்டிகளிலும் மூன்றிலொன்றை ஆசிய அணி இடம்பிடித்தே வந்திருப்பது சிறப்பானதாகும். இந்த மூன்று அணிகள் போதாதென்று இன்று 4ஆவதாக ஓர் அணி ஆசியாவில் முளைத்தெழுந்திருக்கிறது. ஷக்கிப்-அல்-ஹஸன் தலைமையிலான பங்களாதேஷ் அணியே அது. அத்துடன் ஆசியாவில் கிரிக்கெட் பிரபலமாக இருப்பதைக் கண்டு ஆசிய விளையாட்டுகளில் 2010 இல் முதல் முறையாக கிரிக்கெட் சேர்க்கப்பட்டது இந்த புகழுக்கெல் லாம் சிகரம் வைத்தது போல அமைந்தது. ஆசியாவின் புகழ்பூத்த கிரிக்கெட் வீரர்களில் பலர் தத்தமது நாட்டு அரசியலிலும் பிரகாசிப்பதால் இவ்வாசிய நாடுகளில் மேலும் கிரிக்கெட் வளர பெரிய வாய்ப்பு உண்டு. மொஹமட் அசாருதீன், நங்ஜோத் சித்து, கீர்த்தி ஆசாத், இம்ரான்கான், கிரண்குமார் ரெட்டி, அர்ஜுண ரனதுங்க, சனத் ஜெயசூரியா என இந்த கிரிக்கெட் அரசியல்வாதிகளின் பட்டியல் நீண்டுசெல்கிறது. எனவே, ஆசியாவின் அசுர பலம் சர்வதேச கிரிக்கெட்டை ஆட்டுவித்து வருகிறது என்றே சொல்லிவிடலாம். இதுகண்டு அவுஸ்திரேலிய வெள்ளை இன வெறியர்கள் வெறுப்படைந்தாலும் அவர்களால் செய்யக்கூடியது எதுவுமேயில்லை. முற்காலத்தில் வெள்ளைத்தோல் அவுஸ்திரேலியர்களை ஆசிய நாடுகள் கிரிக்கெட் பயிற்சியாளராக நியமித்த காலம் போய் இனிமேல் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து போன்ற வெள்ளை அணிகளுக்கு ஆசிய நாடுகளின் முன்னாள் வீரர்களான இம்ரான்கான், வசீம் அக்ரம், கங்குலி, ஜயசூரியா, அரவிந்த டி சில்வா போன்ற கறுப்பர்கள் பயிற்சியாளராக நியமிக்கப்படும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

ஆஸி வீரர்கள் விளையாட்டு வீரர்களுக்குரிய பண்பை இழந்து தடுமாறினாலும், அவர்களின் அற்புதத் திறமை உலகக் கிரிக்கெட்டை வளர்த்தது என்பது உண்மைதான். பேரடர், பூண், பொன்டிங், வோன், ஹெய்டன், கில்கிறிஸ்ட், வோஹ், மக்ராத் போன்ற திறமையானவர்களை உலகம் கண்டது ஆஸ்திரேலிய கிரிக்கட்டினாலேயே. ஆனால், திறமையுடன் நேர்மையும் இவர்களிடம் இருப்பதையே ரசிகர் உலகம் விரும்புகிறது. மக்ராத், கில்கிறிஸ்ட்ஸ், ஹேடன், வோன் என 4 மாபெரும் தூண்கள் கிட்டத்தட்ட ஒரே சமயத்தில் ஓய்வுபெற்றது ஆஸியின் வீழ்ச்சிக்குக் காரணமாகலாம். 24 ஆண்டுகளின் பின் ஆஷஸ் கிண்ணத்தை இங்கிலாந்து வெல்ல இதுவும் முக்கிய காரணம். எனினும், பீட்டர்ஸென் என்ற வீரர் இங்கிலாந்தின் துரும்பு என்பதில் சந்தேகம் இல்லை. 24 வருடங்களுக்கு முன்பு கிறிஸ் புரொட் என்ற ஆரம்ப துடுப்பாட்ட வீரர் மூலம் இங்கிலாந்து ஆஷஸ் கிண்ணம் பெற்றது. இன்று அவரது மகன் ஸ்ருவட் புரோட், ஆஷஸ் கிண்ணம் வெல்ல இப்போதைய இங்கிலாந்து அணிக்கு பங்களிப்புச் செய்துள்ளார்.

அடுத்த உலகக் கிண்ணத்தை ஆஸியால் தக்கவைத்துக்கொள்ள முடியாது என்ற அச்சம் இப்போதே ஆஸி ரசிகர்களிடம் வரவிருக்கிறது. துடுப்பாட்டத்தில் மைக்கல் ஹசி மட்டுமே குறிப்பிடத்தக்க ஒருவராக உள்ளார். பொன்டிங்கை தலைமைப் பதவியில் இருந்து நீக்கும்படியான பாரிய அழுத்தம் தெரிவுக்குழுவுக்கு ஏற்பட்டுள்ளது. 1980 களில் ஆஸி அணியின் சரிவை ஒத்ததாக இன்றைய நிலைமை உள்ளது. அன்று அலன் பேரடர் வந்துசேர்ந்தார். இந்திய துணைக்கண்டத்தில் உலகக் கிண்ணம் வென்ற ஒரே ஆஸி அணித் தலைவர் பேரடர் மட்டுமே. திறமை மட்டும் போதாது. நேர்மையும் பண்பும் விளையாட்டுக்கு அவசியம் என்பதற்கு ஆஸி அணியின் இன்றைய சரிவு அல்ல; ஓர் எடுத்துக்காட்டு. ★


## தேவை

விநியோகஸ்தர்களும் விற்பனையாளர்களும்




**உஷா**

★ மின் விசிறிகளும்,
★ வாயு அடுப்புகளும்,
★ தையல் இயந்திரங்களும்.

பின்வரும் மாவட்டங்களில் விநியோகிப்பதற்கு

திருகோணமலை
மன்னார்
கிளிநொச்சி
வவுனியா
முல்லைத்தீவு
மட்டக்களப்பு

Write to us with a Copy of Business Registration.

Director Sales & Marketing

**KIR HOLDING (PVT) LTD.**

No: 186 C, Anagarika Dharmapala mawatha, Karagampitiya, Dehiwela.

Contact No : 0115-230903/0773021020







**அச்சுனி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

விடா முயற்சியுடன் எடுத்த காரியங்களைச் சாதிக்கும் மேஷ ராசி அன்பர்களே!

இந்த வாரம் எதையும் செய்து முடிக்கும் ஆற்றல் உங்களுக்கு அதிகரிக்கும். சிக்கனமாக இருக்க நினைத்தாலும், ஏதேனும் ஒரு வகையில் செலவுகளைச் சந்திக்க நேரலாம். முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடுவதைத் தள்ளிப்போடுவது நல்லது. குடும்பத்தில் ஒரு சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பழைய கடன் தொல்லை கொடுக்கும். சுப காரிய நிகழ்ச்சிகள் தள்ளிப் போகும். கலைஞர்கள், புதிய வாய்ப்புகளை முயன்று பெறக் கூடும். எதிர்பார்க்கும் ஆதாயம் இல்லாமல் போக நேரலாம். பழைய வாய்ப்புகளிலேயே எதிர்பார்க்கும் பணம் கிடைக்கலாம். பங்குச்சந்தையில் எதிர்பார்க்கும் இலாபம் கிடைக்கும்.

அதிர்ஷ்ட எண்கள் : 4,6,9. அதிர்ஷ்ட நிறம் : சிவப்பு. அதிர்ஷ்டக் கிழமை : வெள்ளி.





**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

மற்றவர்களுக்கு உதவும் குணம் கொண்ட ரிஷப ராசி அன்பர்களே!

கால நேரம் பார்க்காமல் கடமையாற்றுவீர்கள். சகோதர, சகோதரிகள் வழியில் இருந்த பிரச்சினைகள் தீர்வுக்கு வரலாம். உங்களுக்கு திங்கள், செவ்வாய் மற்றும் புதன் கிழமைகள் ஆரம்பித்த காரியங்களில் தடை தாமதங்கள் தோன்றக்கூடும். தக்க மனிதர்களின் ஆலோசனை தேவைப்படும். குடும்பத்தில் ஒற்றுமை இருக்கும். சிறு சிறு பிரச்சினைகளை திறமையாக சமாளித்து விடுவீர்கள். இல்லத்தில் மங்கல நிகழ்ச்சி நடைபெறலாம். பெண்கள் சேமிப்பை நல்ல வழியில் செலவழிப்பீர்கள். கலைத்துறையினர் புதிய வாய்ப்புகள் பெற்று மகிழ்ச்சி அடைவர். புகழ் செல்வாக்கு அதிகரிக்கலாம். பங்குச்சந்தை வியாபாரம் நன்கு நடைபெறும்.

அதிர்ஷ்ட எண்கள் : 2,5,7. அதிர்ஷ்ட நிறம் : வெள்ளை. அதிர்ஷ்டக் கிழமை : திங்கள்.




**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

புத்திக் கூர்மையும், சிந்தனை ஆற்றலும் பெற்ற மிதுன ராசி அன்பர்களே!

எதிர்பாராத வகையில் நல்ல சம்பவங்கள் நடைபெறும். சொந்தபந்தங்களை அனுசரித்துச் சென்று சில காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். மனதை குழப்பிக் கொண்டிருந்த காரியங்களில் ஒன்று நல்ல தீர்வுக்கு வரும். புதிய முடிவுகளில் நிதானம் தேவை. குடும்பத்தில் அவ்வப்போது ஏற்படும் சிறுசிறு பிரச்சினைகளை சமாளிப்பீர்கள். கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரலாம். பெண்களின் சேமிப்பு பெருகும். கலைஞர்களின் திறமையைப் பாராட்டி ரசிகர்கள் விருது, பாராட்டுகள் அளிக்கலாம். பங்குச்சந்தை வியாபாரம் லாபம் தருவதாக இருக்கும்.

அதிர்ஷ்ட எண்கள் : 2,4,7. அதிர்ஷ்ட நிறம் : பச்சை. அதிர்ஷ்டக் கிழமை : புதன்.




**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்**

உறுதியான எண்ணங்களை கொண்டு உழைத்து நற்பெயர் பெறும் கடக ராசி அன்பர்களே!

பொன்னான வாய்ப்புகளைப் பெற்று புகழ் அடைவீர்கள். தெய்வீகச் சிந்தனை மேம்பட்டு தெம்பூட்டும். எதிர்பாராத திடீர் பணவரவுகள் கிடைக்கக்கூடும். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக நடைபெறும். குடும்பம் சிறு சிறு பிரச்சினைகளுக்கு மத்தியில் நன்றாக நடைபெறும். சுபகாரியம் நடைபெற முயற்சிகளை மேற்கொள்வீர்கள். வடக்கிலிருந்து வரும் தகவல் மகிழ்ச்சி தரும். நீதிமன்ற வழக்கில் திருப்பம் உண்டு. பெண்கள் தாய்வழி உறவுகளின் வருகையால் மகிழ்ச்சி அடைவர். கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்களில் கவனம் செலுத்துவார்கள். பங்குச்சந்தை வியாபாரிகள் புதிய முயற்சியால் வியாபாரத்தை விரிவுபடுத்துவார்கள்.

அதிர்ஷ்ட எண்கள் : 1,3,5. அதிர்ஷ்ட நிறம் : சிவப்பு. அதிர்ஷ்டக் கிழமை : ஞாயிறு.




**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

எதிர்காலத்தைச் சரியாக திட்டமிடும் சிம்ம ராசி அன்பர்களே!

வெளிவட்டாரத் தொடர்புகள் வளர்ச்சியடையும். தெய்வீகமான காரியங்களில் மனதைச் செலுத்தி தான, தருமங்கள் செய்வீர்கள். வடதிசையில் இருந்து சந்தோஷமான செய்தி வீடுதேடி வரும். குடும்பத்தில் பொருள் வரவு மகிழ்ச்சி அளிக்கும். உறவினர் ஒருவரின் குடும்ப நிகழ்ச்சிக்கு பொருளுதவி செய்வீர்கள். பெண் அல்லது மகனின் திருமணப் பேச்சுகள் வெற்றி பெறும். பெண்களின் பெருமுயற்சியால் குடும்ப ஒற்றுமை மேலோங்கும். கலைஞர்களுக்கு இந்த வாரம் மகிழ்ச்சி பெருகும். குடும்பத்துக்குத் தேவையான பொருட்களை வாங்கிச் சேர்ப்பீர்கள். சிலருக்கு வீடு, நிலம் வாங்கும் யோகமும் ஏற்படலாம். பங்குச்சந்தை வியாபாரிகள் நல்ல இலாபம் பெறுவார்கள். புதிய நண்பர்களின் ஆலோசனை பலன் தரும்.

அதிர்ஷ்ட எண்கள் : 3,5,9. அதிர்ஷ்ட நிறம் : பச்சை. அதிர்ஷ்டக் கிழமை : புதன்.




**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

நீதி, நேர்மையை தவறாது கடைப்பிடிக்கும் கன்னி ராசி அன்பர்களே!

நண்பர்கள் உடனான சந்திப்பு இலாபத்தை தரும். முக்கிய நபர் ஒருவரின் அறிமுகம் புதிய திருப்பத்தை ஏற்படுத்தும். கடன் பாக்கிகள் சில தாமாகவே வந்து மகிழ்ச்சியை ஏற்படுத்தும். மேற்கு திசையில் இருந்து நல்ல செய்தி வந்து சேரும். குடும்பத்தில் பணப்புழக்கம் அதிகரிக்கும். வீடு, நிலம் வாங்கும் யோசனை வெற்றிபெறும். சுப காரியங்கள் செய்ய முயற்சிகள் மேற்கொள்வீர்கள். கலைஞர்கள் அசையாத் சொத்துக்கள் வாங்கும் முயற்சியில் ஈடுபடுவர். பெண்கள் பழைய பொருள்களை மாற்றிவிட்டு நவீனமான பொருள்களை வாங்குவீர்கள். பங்குச்சந்தை வியாபாரிகள் கணிசமான இலாபம் பெறுவார்கள். புதிய நிறுவனங்களின் அன்றாட நிலைவரத்தை கவனிப்பது நல்லது.

அதிர்ஷ்ட எண்கள் : 2,6,9. அதிர்ஷ்ட நிறம் : சிவப்பு. அதிர்ஷ்டக் கிழமை : வெள்ளி.




**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

எதிலும் முன்னணியில் நிற்கும் துலாம் ராசி அன்பர்களே!

வசதிபடைத்த சிலரின் நட்பைப் பெற்று முன்னேறுவீர்கள். தொழிலுக்காக எடுக்கும் முயற்சிகளில் முன்னேற்றம் உண்டாகும். வெளியூரிலிருந்து சந்தோஷமான செய்தி வந்து சேரும். குடும்பத்தில் அவ்வப்போது சிறுசிறு பிரச்சினை தலைகாட்டினாலும், சாமர்த்தியமாகச் சமாளித்து விடுவீர்கள். இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறும். பெண் திருமண முயற்சிகள் வெற்றியடையும். கலைஞர்களில் சிலருக்குப் புதிய வாய்ப்புகள் கிடைக்கலாம். பணிகளில் பங்குகொள்ள குளிர் பிரதேசத்துக்கு செல்லக்கூடும். பங்குச்சந்தை வியாபாரத்தில் நிறுவனங்களின் விலை ஏற்றத்தால் நல்ல மாற்றங்கள் உண்டாகும்.

அதிர்ஷ்ட எண்கள் : 1,2,9. அதிர்ஷ்ட நிறம் : சிவப்பு. அதிர்ஷ்டக் கிழமை : செவ்வாய்.




**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

ஆன்மிகச் சிந்தனையும் பேச்சாற்றலும் கொண்ட விருச்சிக ராசி அன்பர்களே!

எடுத்த காரியங்களில் நன்மையும், தொல்லையும் கலந்ததாகவே இருக்கும். வீண் விவாதங்களைத் தவிர்த்து சுமூகமாகப் பழகி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். தொழில் எதிரிகள் விஷயத்திலும் சாமர்த்தியத்தைப் பயன்படுத்துவீர்கள். வழக்கு விவகாரங்களில் அனுகூலமான திருப்பத்தை சந்திக்கலாம். குடும்பத்தில் சிறுசிறு மனவேறுபாடுகள் அங்கத்தினரிடத்தில் காணக்கூடும். பழைய கடன்கள் தொல்லையளிக்கலாம். சுபகாரியங்கள் தள்ளிப்போகலாம். பெண்கள் சில விஷயங்களில் விலகி நிற்பது பிரச்சினைகளை தீர்க்கும். கலைஞர்கள், பேச்சினால் தொல்லைகளுக்கு ஆளாகலாம். பணவரவு சுமாராகவே இருக்கும். பங்குச்சந்தை வியாபாரம் இலாபம் தராது.

அதிர்ஷ்ட எண்கள் : 2,3,9. அதிர்ஷ்ட நிறம் : மஞ்சள். அதிர்ஷ்டக் கிழமை : வியாழன்.




**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

எப்போதும் சாமர்த்தியமாக செயல்படும் தனுசு ராசி அன்பர்களே!

வேலைகளைத் திறம்பட முடித்து மற்றவர்களின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். குழப்பத்தில் தவிக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கு தக்க ஆலோசனைகளை வழங்குவீர்கள். இழுபறியில் இருந்த பிரச்சினை ஒன்று திடீரென்று முடிவுக்கு வரும். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகளைச் சந்தித்து அதன்பின் நல்ல முடிவெடுப்பீர்கள். பெண் அல்லது மகன் திருமண முயற்சிகளில் கவனம் செலுத்துவீர்கள். பெண்களின் முயற்சியால் சுபகாரியங்கள் கைகூடி வரும். கலைத்துறையைச் சேர்ந்தவர்கள் புதிய வாய்ப்புகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவார்கள். பங்குச்சந்தை வியாபாரத்தில் சுமாரான இலாபமே இருக்கும்.

அதிர்ஷ்ட எண்கள் : 1,5,8. அதிர்ஷ்ட நிறம் : வெளிர்நீலம். அதிர்ஷ்டக் கிழமை : சனி.




**உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

சிறப்பான வேலைக்காக அதிகமாக உழைக்கும் மகர ராசி அன்பர்களே!

காரியங்களில் ஏற்பட்ட சிக்கல்கள் விலகி முன்னேற்றம் ஏற்படும். எதிர்பாராத பணவரவு இருக்கலாம். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை செய்ய வேண்டி இருக்கும். தொலைபேசியில் வரும் தகவல் மகிழ்ச்சியைத் தரக்கூடும். குடும்பத்தில் அவ்வப்போது சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு சமாளிக்கக்கூடிய சூழ்நிலை உண்டாகும். சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெறும். பெண்கள் பொருளாதார ரீதியான முன்னேற்றத்தை சந்திப்பீர்கள். பழைய கடன்கள் அடையும். கலைஞர்கள் தங்கள் பணிகளில் சுறுசுறுப்பாக இருப்பார்கள். புதிய ஒப்பந்தங்கள் ஏற்பட்டு வாய்ப்பையும், வசதியையும் அதிகரிக்கும். பழைய துணிகளிலும் நல்ல வருமானம் உண்டு. பங்குச்சந்தை வியாபாரிகள் கணிசமான இலாபம் பெறலாம்.

அதிர்ஷ்ட எண்கள் : 3,5,8. அதிர்ஷ்ட நிறம் : பச்சை. அதிர்ஷ்டக் கிழமை : புதன்.





**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

மலர்ந்த முகத்தோடு அனைவரிடமும் பேசும் கும்ப ராசி அன்பர்களே!

எதிர்பாராத திருப்பங்களை சந்திப்பீர்கள். முயற்சிகளில் நன்மையும், தொல்லையும் கலந்தே காணப்படும். செலவுகளில் சிக்கனத்தைக் கடைபிடித்தாலும்கூட அதிக செலவுகள் ஏற்படுவதை தவிர்க்க இயலாது. விருந்தினர் வருகை உண்டு. குடும்பத்தில் பழைய கடன்கள் தொல்லை அளித்தாலும், தாிப்பு ஏற்படாது. சுபகாரிய முயற்சி சிறிய தடைக்குப் பின் நடைபெறலாம். பெண்களின் சாமர்த்தியத்தால் பெரிய பிரச்சினைகள் சுமுகமாக முடிந்து விடும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளை பெறுவார்கள். சிலருக்கு வெளியிடப்பயணம் ஏற்பட்டாலும் அதை தள்ளி வைப்பார்கள். பங்குச்சந்தையில் சுமாரான இலாபமே வரும்.

அதிர்ஷ்ட எண்கள் : 3,5,9. அதிர்ஷ்ட நிறம் : மஞ்சள். அதிர்ஷ்டக் கிழமை : வியாழன்.




**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

எதையும் கவனமாக ஆராய்ந்து முடிவெடுக்கும் மீன ராசி அன்பர்களே!

எண்ணக் கனவுகளை நனவாக்க முற்படுவீர்கள். நண்பர்கள் மனம் கோணாமல் நடந்து காரியங்களை வெற்றி கொள்வீர்கள். முக்கிய முடிவுகளை தள்ளிப் போடுவதும் அவசியம். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் உருவாகி தொல்லை கொடுத்தாலும் அமைதியாக நடைபெறும். சுபகாரியங்கள் நடைபெற நூதன முயற்சிகளை மேற்கொள்வீர்கள். பெண்கள் பொருளாதார ரீதியான முன்னேற்றத்தை காணமுடியும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்கவும் வாய்ப்பு உண்டு. கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்கள் பெறக்கூடும். பங்குச்சந்தை வியாபாரிகள் நல்ல இலாபம் பெறுவார்கள்.

அதிர்ஷ்ட எண்கள் : 1,5,9. அதிர்ஷ்ட நிறம் : சிவப்பு. அதிர்ஷ்டக் கிழமை : ஞாயிறு.

# பொங்கல்

'பொங்கல் பண்டிகை' என்பது அறுவடைத் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. ஆண்டு முழுவதும் நமக்கு உதவி புரியும் இயற்கைக்கும், விவசாயத்துக்குப் பயன்படும் கால்நடைகளுக்கும் நன்றி தெரிவிக்கும் நாளாக பொங்கலைக் கொண்டாடி மகிழ்கிறோம்.

பொங்கல் என்பதற்கு 'பொங்கி வழிதல்', 'பொங்குதல்' என்பது பொருள். அதாவது புதிய பானையில், புத்தரிசியிட்டு, அரிசியில் இருந்து பால் பொங்கி வழிந்து வருவதால், தை பிறந்துள்ள புத்தாண்டு முழுவதும் நம் வாழ்வும், வளமும் அந்தப் பால் போன்று பொங்கி சிறக்கும். மகிழ்ச்சியும், திளைப்பும் பல்கிப் பெருகுவதோடு, கழனியெல்லாம் பெருகி, அறுவடை மென்மேலும் அதிகரிக்கும் என்பதே இந்தப் பண்டிகையின் மேலோங்கிய தத்துவமும், தொன்றுதொட்டு வரும் நம்பிக்கையுமாகும்.

பொங்கல் தினத்தன்று வயல்களில் விளைந்து, அறுவடைக்குத் தயாராக இருக்கும் நெற்கதிர்களில் சிறிதளவைக் கொண்டு வந்து வீட்டில் படைத்து வணங்குவது வழக்கமாக உள்ளது.

பொங்கலன்று காலை வாசலை



சாணம் தெளித்து, மெழுகி, கோலமிட்டு, மண்ணால் அல்லது சாணத்தால் பிள்ளையார் செய்து வைத்து, முக்கூட்டு அடுப்பு அமைத்து, புத்தரிசியும், பாலும் வெல்லமும் புதுப்பானையிலிட்டு பொங்கலிடும் கிராமத்துப் பொங்கல் மெல்ல மெல்ல குறைந்து வருகிறது. ஆயினும், பொங்கலென்றால் சர்க்கரைப் பொங்கலும், காய்கறிகளும் கரும்பும், மஞ்சளும் நம் நினைவில் நிறைந்து நிற்கின்றன.

**பொங்கலின் பாரம்பரியம்**

'உழவுக்கும், தொழிலுக்கும் மரியாதை செய்வோம்' என்பதற்கேற்ப ஆண்டு முழுவதும் விவசாயத்துக்குப் பயன்படும் எருதுகள் உள்ளிட்ட கால்நடை களுக்குப் பொங்கல் வைத்து படைத்து அவற்றுக்கும் அளித்து, நாமும் உண்டு மகிழ்கிறோம். இதற்காகவே மாட்டுப் பொங்கல் என தனியாக ஒரு நாளில் கொண்டாடி மகிழ்கிறோம்.

**மாட்டுப் பொங்கல்**

மாடுகளின் கொம்புகளுக்கு வர்ணம் தீட்டி, சிங்காரித்து அவற்றின் கழுத்தில், உரிமையாளரின் வசதிக்கேற்ப கரும்பு முதல் தங்கக்காசு வரை கட்டி சாலைகளில் ஓட விடுவதும் மாட்டுப் பொங்கலின் சிறப்பாக அமைகிறது. துள்ளித்திரிந்து ஓடிவரும் மாடுகளைப் பிடிக்கும் கட்டிளங்காளைகளாக விடலைகளும், விடலைகளை வேடிக்கை பார்க்கும் இளம் பெண்களும் மகிழ்ச்சி பூரிப்பில் திளைப்பதும் தைப் பொங்கல் முடிந்த மறுநாளில் தான்.

தமிழர் திருநாளாம் பொங்கலை இன்றளவும் கொண்டாடுவதில் இருந்தே பண்டைய காலத்தில், வாழ்ந்த தமிழக மக்களின் தொன்மைச் சிறப்புகளை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. தற்கால இளைய சமுதாயத்தினருக்கும், பல்கிப் பெருகிவிட்ட நகர வாழ்மக்களுக்கும் தமிழர்களின் பாரம்பரிய கலாசாரத்தைப் பறைசாற்றுவதாகவும் தைப் பொங்கல் விளங்குகிறது.

'பழையன கழிதலும், புதியன புகுதலும்' என்பதற்கேற்ப, குயவர் களுக்கு வாழ்வாதாரம் அளிக்கக் கூடிய வகையில், வீடுகளில் உள்ள பழைய மட்பாண்டங்களை (பானைகள், குடிநீருக்காகப் பயன் படுத்தும் குவளைகள்) பொங்கலுக்கு முன்தினம் போட்டு உடைத்துவிட்டு, தைத்திங்கள் முதல் நாளில் இருந்து புதிய பானைகளில் சமைக்கும் வழக்கமும் தொன்றுதொட்டு இருந்து வந்துள்ளது.

இதனால், மட்பாண்டங்களைச் செய்து விற்று வாழ்க்கை நடத்துவோருக்கு வருவாய் கிடைப்பதுடன், வீடுகளிலும் புதிய பானைகளுடன் கூடிய நிலை உருவாகி, மனதுக்குப் புத்துணர்ச்சியைத் தரும். பொதுவாகவே மண்பானைகளில் சமைக்கப்படும் உணவு வகைகளுக்குத் தனியான சுவையுண்டு.

தவிர, அதுவரை நிலவிய, பழைய விரும்பத்தகாத சம்பவங்கள் - சங்கடங்கள் எல்லாம் தொலைந்து, புதிய ஆண்டில் - தைத்திங்கள் முதற்கொண்டு அனைத்தும் நல்லப்படியாக நடந்தேறும்.

புதியவையாக - நல்லவையாக நிகழட்டும். முந்தைய ஆண்டில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் வரும் புத்தாண்டில் நிகழாமல், பொங்கிவரும் பால் போன்று, சர்க்கரைப் பொங்கலின் இனிப்பான சுவையைப் போன்று இருக்கட்டும் என்பதே பாரம்பரிய தத்துவமாகக் கருதப்படுகிறது.

**கலையைப் பரப்புதல்**

தற்போதைய தகவல் தொழில் நுட்ப காலத்தைப் போலல்லாமல், தொலைத்தொடர்பு வசதிகள் இல்லாத



அந்த நாட்களில் பரம்பரை பரம்பரையாக ஒரு சில குடும்பங் களுக்கே தெரிந்த தங்களின் பாரம்பரியக் கலைகளை இளைய தலைமுறையினருக்குப் பயிற்றுவித்து, வழிவழியாக அந்தக் கலைகள் சென்று சேரும் விழா வாகவும் பொங்கல் விழா இருந்து வந்துள்ளது.

பொங்கல் திருநாளில் வீட்டில் உள்ள முதியவர்கள் அதாவது தாத்தா-பாட்டி தொடங்கி கைக்குழந்தைகள் வரை ஒரே இடத்தில் கூடி பரஸ்பரம் அன்பையும் -பாசத்தையும் பரிமாறிக் கொண்டு, பொங்கலைக் கொண்டாடுவதை இன்றளவும் காண முடிகிறது.

ஆனால், இன்று கூட்டுக் குடும்பங்களின் எண்ணிக்கை குறைந்து, மைக்ரோ குடும்பங்கள் (கணவன் - மனைவி, ஒரு குழந்தை) பெருகிவிட்ட நிலையில், இன்றைய சந்ததியினருக்கு பொங்கல் பண்டிகையை ஏதாவது தென் மாவட்டங்களில் உள்ள கிராமங்களுக்கு அழைத்துச்சென்று காண்பித்தால் மட்டுமே அந்தப் பண்டிகையின் அருஞ்சிறப்பு தெரிய வரும்.

அதிலும், அறுவடை உள்ளிட்ட விவசாயத் தொழில்களுக்கு அறுவடை எந்திரங்கள், நெற்கதிரில் இருந்து நெல்லைப் பிரித்தெடுக்கும் எந்திரங்கள் என அனைத்தும் எந்திரமயமாகிவிட்டன. மாடுகள் உழவுக்குப் பயன்படுத்தப்பட்ட நிலை மாறி இன்று டிராக்டர்கள் பயன்படுத்தப்படுவது அதிகரித்துள்ளது.

அதிவேகமாக வளரும் காலத்துக்கு ஏற்ப விவசாய நிலங்களும், காடு-கழனிகளும் மருகிக் கொண்டிருக்கின்றன. கடந்தவை கடந்தவையாக இருக்கட்டும். இல்லையே, தை பிறந்ததால் வழி பறக்கும் என்பதுதானே பழமொழி. எல்லாமே தையில் தான் துவங்கும். தை

## தை மாதம்

தை மாதம் என்பது சக்தி வாய்ந்தது. இதனை மகர மாதம் என்றும் அழைப்பார்கள். மகரத்திற்குள் சூரியன் நுழைவதே மகர மாதம். ஜோதிடத்தில் பார்க்கும் போது, பூமியை இரண்டாகப் பிரிப்பது போல் ஆகாயத்தை இரண்டாக பிரிப்பார்கள். அதை சூரியன் பகுதி, சந்திரன் பகுதி என்றும் கூறுவதுண்டு.

அதில் மகரத்தில் இருந்து கடகம் வரை சந்திரனுடைய பகுதிக்குள் வரும், அவைகள் சந்திராதிக்கத்திற்குரியன. இந்த மாதத்தில் இருந்து சூரியன் பகுதி துவங்குகிறது. இந்த மாதத்தில் சூரியப் பகுதி வலிமையடைகிறது.

அதாவது உத்திரயாணப் புண்ணிய காலம் துவங்குகிறது. அதாவது காலத்தை இரண்டு அயனமாகப் பிரிக்க வேண்டும். தக்ஷாயணம் (தெற்கு), உத்திராயணம் (வடக்கு) என்பவை.

அதனால்தான் இந்த காலம் எல்லா வகையிலும் சிறப்புடையது. உத்திராடம் சிறந்த நட்சத்திரம். உத்திராடத்தில் பள்ளையும், ஊர் எல்லையில் கொல்லையும் (வயலும்) என்பது பழமொழி.

அதாவது உத்திராடத்தில் பிள்ளை பிறந்தால் உடனடியாக அவர்களுக்கு அருகிலேயே நிலம், வீடு அல்லது விளை நிலம் வாங்கும் யோகம் உண்டாகும். எனவே உத்திராடத்தின் ராசியான மகரத்தில் சூரியன் நுழைவது வெகுச் சிறப்பான ஒன்றாகும். அந்த நேரத்தில்தான் பல விண்மீன்கள் சூரியனையும், சந்திரனையும் சூழ்ந்திருக்கும். மலையாளத்தில், சேர நாட்டில் எடுத்துக் கொண்டால் இதனை மகர ஜோதி என்று அழைக்கின்றனர். ஆனால் விளக்கை ஏற்றி ஜோதி என்று காண்பது ஒரு அடையாளமே. இயற்கையாக இருப்பதை அறிவிப்பதற்காகவே அவ்வாறு செய்கின்றனர்.

பறக்கட்டும் ஜாதகத்தை எடுக்கலாம் என்பார்கள். தை மாதத்தில் திருமண நிச்சயம் செய்வார்கள். வேளாண் துறையிலும் தை தான் முதல் மாதம். நெல், சோளம் எல்லாமே மார்கழியில் அறுவடை முடிந்து தை முதல் நாள் புதிய நெல், புது பானை வைத்துக் கொண்டாடுவதே தை பொங்கல்.

பங்குனி மாதத்தில் எந்த அறுவடையும் செய்வதில்லை. மாற்றுப் பயிர்கள் வேண்டுமானால் செய்யப்படலாம். ஆனால் தையில்தான் எல்லா அறுவடைகளும் முடிந்து அடுத்த காலத்தை துவங்குகிறோம். அடிப்படையாக வைத்துப் பார்த்தால் தமிழர்களின் புத்தாண்டு தை மாதத்தில்தான் துவங்குகிறது.


தட்பவெப்ப நிலையில் பார்த்தாலும் தை மாதம் சிறந்த மாதகும். குளிரும் இருக்கும், வெயிலும் இருக்கும், எதுவும் கடுமையாக இருக்காது. அதுவே வெகு சிறப்பானது.உழைப்பைப் போற்றும் உன்னதத் திருநாள் பொங்கல்.

வேறு எந்த பண்டிகைக்கும் இல்லாத பல சிறப்புகள் பொங்கலுக்கு உண்டு. என்னதான் சங்கராந்திஎன புராணிகர்கள் நீட்டி முழக்கினாலும் -எழுதினாலும் இன்னும் எம்கிராமத்து மக்களின் நாவில் அது பொங்கல் பண்டிகை என்றே புழங்குகிறது. ஏனெனில், புராணப் பொய்மைகளை சூட்டிக் கொள்ளாத பண்டிகை இது. உழைப்புக்கு நன்றி கூறும் இனிய நன்னாளாகவே பொங்கல் திகழ்வதுதான் இதன் தனிச்சிறப்பு.



# தலைப்பொங்கல்

பொங்கல் தினத்தன்று அளிக்கப்படும் அன்பளிப்பு என்பதோடு, புதிதாகத் திருமணம் முடிந்து, கணவனுடன் முதல் ஆண்டு பொங்கல் பண்டிகையைக் கொண்டாடும் பெண்களுக்கு தாய் வீட்டில் இருந்து பொங்கல் படி அளிக்கப்படுகிறது.



இந்த பொங்கல் படி என்பது பொங்கல் திருநாளைக் கொண்டாடுவதற்குத் தேவையான அனைத்து பொருட்களையும், தங்களின் பெண்கள் வாழும் வீட்டிற்கு அனுப்ப வைப்பதாகும்.

இதில் மகள், மருமகனுக்கு புத்தாடைகள், பொங்கல் வைப்பதற்குத் தேவையான அரிசி, வெல்லம், முந்திரி, நெய், வாழை இலை, படைப்பதற்குத் தேவையான அனைத்து வகை காய்கறிகள், கரும்பு, மஞ்சள், வாழைப் பழக்குலை அனைத்தையும் மாட்டு வண்டியிலோ அல்லது ஆட்டோ, வேன்களிலோ ஏற்றிச் சென்று பொங்கல் தினத்திற்கு ஓரிரு நாட்கள் முன்னரே பெற்றோர் அளிப்பார்கள். பொங்கல் வைப்பதற்குத் தேவைப்படும் இரு பானைகளும் இதில் அடங்கும். மொத்தத்தில் கணவன் வீட்டார் மொத்தமும், மருமகள் வீட்டில் இருந்து வரும் பொருட்களில் இருந்தே அந்த ஆண்டு பொங்கல் திருநாளைக் கொண்டாடி விடுவர். இது ஒருவகையான பொங்கல் படி. தாய் வீட்டில் இருந்து பொங்கல் படியைப் பெற்று தலைப் பொங்கலைக் கொண்டாடும் புது மணத் தம்பதியர், பொங்கல் தினத்தன்றோ அல்லது அதற்கு மறுநாளோ பறந்த வீட்டிற்குச் சென்று தலைப் பொங்கலை களிப்புடன் கொண்டாடுவார்கள். ✱



# பெண்களை பாதிக்கும் மார்பக புற்றுநோய்

பெண் குழந்தைகளுக்கு 10-11 வயதிலிருந்து மார்பகங்கள் வளர ஆரம்பிக்கின்றன. பூப்படையும் காலத்தில் சினைப்பைகள் (ஓவரிகள்) ஈஸ்ட்ரோஜன் எனும் ஹோர்மோனைச் சுரக்கின்றன. இதனால் மார்பகக் கணையங்களும், இணைப்பு இழையங்களும், கொழுப்பும் சேர்ந்து மார்பகத்துக்கு ஓர் அழகிய வடிவம் கொடுக்கின்றன.

மார்பகத்துக்கு எது சரியான அளவு என்பது தொடர்பாக ஏராளமான கட்டுக்கதைகள் இருக்கின்றன. மார்பகங்கள் உண்மையில் பல அளவுகளில், பல வடிவங்களில் இருக்கின்றன. ஒருவர் போல மற்றொருவர் இருப்பதில்லை அல்லவா? அதுபோல இரண்டு பெண்களின் மார்பகங்கள் ஒரே மாதிரி இருப்பதில்லை.

கர்ப்ப காலத்தில் மார்பகங்கள் பெரிதாகும். சில நேரம் இரு மடங்கு பெரிதாகலாம். பால் சுரப்புக் கலங்கள் பெருகுவதாலும், நாளுக்கு நாள் விரிவடைவதாலும் இது நிகழும். மார்புக் காம்பு அடர் நிறத்தை அடையும். ஒரு பெண் கர்ப்பமாக இருக்கும்போது சுரக்கும் ஹோர்மோன்களினால் இந்த மாற்றங்கள் நிகழ்கின்றன.

வயதாக ஆக, எமது உடலின் எல்லா இழையங்களும் தங்களுடைய விறைப்புத் தன்மையை இழக்க ஆரம்பிக்கும். மார்பகங்களுக்கும் இப்படி ஒரு தொய்வு வருவது இயல்பானதே.


ஒருவருடைய ஆயுட்காலத்தில் மார்பகங்கள் பல வகைகளில் பாதிப்புக்கு உள்ளாகும். பைப்ரோ அடினோமா எனப்படும் சாதாரண கட்டிகள் தோன்றுவது இளவயதில் சகஜம். பால் கொடுக்கும் காலகட்டத்தில் பால்கட்டி கிருமித் தொற்று ஏற்படலாம். இதனால் மார்பகத்தில் சீழ் கட்டும் வாய்ப்பு இருக்கிறது. இப்படி ஏற்பட்டால் ஊசி மூலமாகவோ அல்லது அறுவைச் சிகிச்சை செய்தோ குணப்படுத்தி விடலாம்.

## இயற்கையின் சில தவறுகள்:

இயற்கையிலேயே ஒரு சிலருக்குக் கூடுதலான மார்புக் காம்புகள், மார்பக இழையங்கள் அக்குள் முதல் அடிவயிறு வரையான பகுதிகளில் அதிகளவாக இருக்கக்கூடும். இயல்பான மார்பகங்களுக்கு நேரும் எல்லாப் பிரச்சினைகளும் இந்த சதைத் திரட்சிக்கு ஏற்படலாம். இத்தகைய அமைப்பு சம்பந்தப்பட்டவர்களுக்குப் பெரும் பதற்றத்தையும், வேதனையையும் கொடுக்கும். ஆனால், கூடுதல் மார்பகங்கள் இருந்தால் மார்பகப் புற்றுநோய் வரும் என்று சொல்ல முடியாது. உடலளவிலும், மனதளவிலும் சஞ்சலத்தை உருவாக்கக்கூடிய இந்தக் கூடுதல் மார்பகத்தை அறுவைச் சிகிச்சை மூலம் நீக்கி விடலாம். இதனைத் துணை மார்பகம் என்றும் சொல்வார்கள்.

இந்தத் துணை மார்பகத்தில் இழையங்களும், கொழுப்பும் இருக்கும். கர்ப்ப காலம் மற்றும் பால் கொடுக்கும் காலத்தில் இந்தத் துணை மார்பகம் வலியையும், அசௌகரியத்தையும் ஏற்படுத்தும்.

சில பெண்களுக்கு மார்புக் காம்புகள் உள்வாங்கி இருக்கும். இப்படி உள்வாங்கி இருப்பது புற்றுநோய்க்கான அறிகுறி. ஆனால், உள்வாங்கி இருக்கிற எல்லாவற்றையும் புற்றுநோய் என்று சொல்லமுடியாது. இத்தகைய மார்பகத்தால் குழந்தைக்குப் பால் கொடுப்பதில் சிரமம் இருக்கும். இந்தச் சிரமத்தை நிப்பலெட் போன்ற கருவிகளைப் பயன்படுத்தி போக்கிக் கொள்ளலாம்.



இளம் பெண்களிடையே மிகவும் கிளர்ச்சியையும், குழப்பத்தையும் ஏற்படுத்தும் விடயம் அவர்களுடைய மார்பகத்தின் அளவுதான். ஒரு வகையில் ஆண்களின் முட்டாள்தனமான கற்பனையின் காரணமாக பெண்களிடையே ஏற்பட்ட குழப்பம் இது என்றுகூடச் சொல்லலாம்.

மார்பகத்தின் அளவுக்கும், செக்ஸுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. சிறிய மார்பகம் இருந்தால் குழந்தைக்குப் போதிய பாலூட்ட முடியாது என்பதும் தவறான கருத்தாகும். இன்றைய காலகட்டத்தில் மார்பகத்தைப் பெரிதாக்குவதற்காகப் பல இளம் பெண்கள் மாத்திரைகளையும், களிம்புகளையும் தேடி அலைகிறார்கள்.

ஆனால், இவற்றால் எந்தப் பலனும் கிடையாது என்பதுதான் உண்மை. அறுவைச் சிகிச்சை மூலமாக செயற்கை (சிலிக்கான்) மார்பகத்தை உபயோகப்படுத்தி மார்பகத்தைப் பெரிதாக்க முடியும். இதன் பக்க விளைவுகளை மருத்துவரிடம் சரிவரக் கலந்தாலோசித்த பின்னர் செய்து கொள்ளலாம்.

பெரிய மார்பகங்கள் இருக்கிற பெண்கள் பல அசௌகரியங்களைச் சந்திக்க வேண்டிவரும். இது தவிர இதனால் முதுகுவலியும் ஏற்படுகிற அளவுக்கு தோள் பகுதியில் சுமை கூடலாம். பெரிய மார்பகங்கள் பிரச்சினையாகவே இருக்கிற நிலையில் அறுவைச் சிகிச்சை செய்து மார்பகங்களின் அளவைக் குறைக்கலாம். இதற்குப் பக்க விளைவுகள் உண்டு. மருத்துவரிடம் கலந்து ஆலோசிக்கவும்.

என்ன அளவு? என்ன நிறம்? என்ன வடிவம்? என ஒவ்வொரு பெண்ணும் தன்னுடைய மார்பகம் குறித்து முழுமையாகத் தெரிந்து வைத்திருப்பது அவசியம். அத்தோடு முன்கூட்டியே கண்டறியும் பரிசோதனைகளையும் மேற்கொண்டால் எந்தவொரு நோயையும் ஆரம்பக் கட்டத்திலேயே எளிதில் கண்டுபிடித்து குணப்படுத்திவிட முடியும். ஒவ்வொரு மாதமும் மாதவிலக்குக்குப் பின்னர் உங்கள் மார்பகத்தைக் கண்ணாடி முன் நின்று நீங்களே பரிசோதித்துப் பார்த்துக் கொள்வது நல்லது. சிலருக்கு மாதவிலக்கு நாட்களுக்கு முன்பாக மார்பகம் இறுகிய நிலையை அடையக் கூடும். இதனால் அவர்கள் ஒருவித அசௌகரியத்தையும், கனத்தையும் உணர்வர். இந்த நேரத்தில் சுய பரிசோதனை மேற்கொண்டால் தேவையற்ற பயத்தையும், பதற்றத்தையும் மட்டுமே அவை உருவாக்கும். எனவே, மாதவிலக்கு முடிந்த பின்னர் சோதித்துப் பார்ப்பதே சிறந்தது.

கண்ணாடி முன்னால் நின்று, கைகளை உயர்த்தி மார்பகம் எப்படி அசைகிறது என்று பாருங்கள். கைகளைப் பக்கவாட்டில் நகர்த்தி தலையை உயர்த்தி இந்த சோதனையை செய்து பாருங்கள். உங்களுக்கு இயல்பான நிலை எது என்பதைத் தெரிந்து கொள்ள இது மிகவும் அவசியம். அதன் பின்னர் இந்த அசைவுகளின்போது ஏதாவது அசௌகரியமாகத் தோன்றினால், பிரச்சினை இருக்கிறது என்று அர்த்தம். மார்பகத்தின் வடிவத்தில் என்ன மாற்றம் தென்படுகிறது? எங்கேயாவது வீக்கம் தெரிகிறதா? தோலில் ஏதாவது மாற்றம் தெரிகிறதா? மார்புக் காம்பு உள்நோக்கி இழுத்துக் கொண்டது போலத் தெரிகிறதா? என்பவற்றையும் தெரிந்துகொள்ளப் பழகிக்கொள்ளுங்கள்.



உங்கள் மார்பகத்தை நீங்கள் எப்படி உணருகிறீர்கள் என்பது மிகவும் முக்கியமானது. சிலருக்கு மாதவிலக்குக்கு முந்தைய நாட்களில் மார்பகங்கள் சற்று வலிப்பது போலத் தோன்றும். அதற்குப் பின் வலி குறைந்து இல்லாமலே போய் விடும். மாதவிலக்கு சுழற்சியில் அவை எப்படியான மாற்றத்தை அடைகின்றன என்பதையும் நன்கு புரிந்து கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் மார்பகத்தைச் சுய பரிசோதனை செய்யும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய சில விடயங்கள் இருக்கின்றன.

1. மார்பகத்தின் வெளிச்சுற்று அல்லது வடிவத்தில் ஏதாவது புதிதாகத் தென்படுகிறதா? கைகளை அசைக்கும்போது மடிப்புகள் அல்லது குழிவு போல் ஏதாவது தென்படுகிறதா?

2. இரண்டு மார்பகங்களில் ஏதாவது ஒன்றில் வலியோ, அசௌகரியமோ தென்படுகிறதா? அந்த நிலை தொடர்ந்து சில வாரங்களுக்கு நீடிக்கிறதா?

3. ஒரு மார்பகத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இல்லாத ஓர் அம்சம் இன்னொரு மார்பகத்தில் தென்படுகிறதா?

4. மார்பகக் காம்பில் இருந்து ஏதாவது திரவக்கசிவு ஏற்படுகிறதா?

5. மார்புக் காம்பில் இருந்து இரத்தக் கசிவு அல்லது அதைச் சுற்றிய பகுதியில் ஏதாவது சிவந்து-தடித்து காணப்படுகிறதா?

6. மார்பு நுனியின் அமைப்பில் ஏதாவது மாற்றம் தென்படுகிறதா? உள்பக்கமாக குழிந்தது போலவோ, வேறு திசையில் இழுத்துக்கொண்டு இருப்பது போலவோ தென்படுகிறதா?

இயல்புக்கு மாறாக புதிதாக எந்த ஒரு மாற்றம் தென்பட்டாலும் அதனை உடனே மருத்துவரிடம் சொல்லி ஆலோசனை பெறுவது நல்லது.

மாதவிலக்கு தொடர்பான அறிவுரைகளைப் போலவே மார்பகம் தொடர்பான இத்தகைய அறிவுரைகளையும் பெண் குழந்தைகளுக்கு எடுத்துக்கூறுவது மிகவும் அவசியம். பெண்கள் தாங்களே மாதாமாதம் பரிசோதனை செய்துகொள்வது அவசியம். இதனால், வாழ்வின் பல்வேறு காலகட்டத்தில் மார்பில் ஏற்படும் மாற்றங்களை நன்கு புரிந்துகொண்டு பயமில்லாமல் வாழமுடியும்.

புற்றுநோய் என்பது வெறும் ஒரு வார்த்தைதான். வாழ்க்கையின் முற்றுப்புள்ளி அல்ல.

புற்றுநோய் என்றால் என்ன?

உடலின் செயற்பாடுகளைத் தன் முழுக் கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக்கொள்ளும் கலங்களின் கட்டுப்படுத்த முடியாத வளர்ச்சியே புற்றுநோய் ஆகும். மனித உடலில் கோடிக்கணக்கான கலங்களும்-இழையங்களும் இருக்கின்றன. அவை தொடர்ந்து வளர்ந்து-பிரிந்து கொண்டு இருக்கின்றன. ஆனால், அந்தச் செயற்பாடுகளெல்லாம் மிகத் துல்லியமாக வரையறுக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

வளர்சிதை மாற்றுச் சிகிச்சையில் எந்த ஒரு குறைபாடு உடைய கலமும் உடலில் நிலைத்திருக்க அனுமதிக்கப்படுவது கிடையாது. சில நேரங்களில் இந்த துல்லிய செயற்பாட்டுக்குத் தொடர்ந்து ஏதாவது நெருக்கடிகள் ஏற்படும்போது சில தவறுகள் நடக்க வாய்ப்பு இருக்கிறது. இதனால் தாய்க் கலத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட கலங்கள் உற்பத்தி செய்யப்படும். இந்த நிலைமை மேலும் மேலும் தீவிரமடைகின்றபோது அவை கட்டிகளாக ஆகி விடுகின்றன. சில கலங்கள் ஒட்டுமொத்த இரத்த ஓட்டத்தில் இருந்து தங்களைத் துண்டித்துக் கொண்டுவிடக்கூடும். என்பு, கல்லீரல், நுரையீரல் போன்ற அதி முக்கியமான உடல் உறுப்புகளை அடைந்து அவற்றின் செயற்பாடுகளைத் தடுக்க ஆரம்பித்துவிடும். இந்த நிலைமை சில நேரங்களில் உயிரையே பறித்துவிடக்கூடும்.

ஆகவே, மார்பகத்தை நாம் பாதுகாப்பது மிகவும் அவசியமானது.

# தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் ஆகியவற்றின் வளர்ச்சியில் ஈழத்து ஆளுமைகள்

தமிழ் உரைநடை இலக்கியத்தின் முன்னோடி என்று போற்றப்படுகின்ற நாவலர்பற்றி, பல்துறை ஆளுமைமிக்க பேராசிரியர் க.கைலாசபதி 'நாவலர்' என்ற நூலைத் தந்துள்ளார். நாவலரைப் பற்றி பல நூல்கள் எழுதியிருக்கின்ற போதிலும், பேராசிரியர் கைலாசபதியின் நூல் தனித்துவமானது. பேராசிரியர் பல்வேறு காலகட்டங்களில் நாவலர்பற்றி எழுதிய பின்வரும் கட்டுரைகளின் தொகுப்பே இந்நூலாகும். நாவலர் வழிவரும் இலக்கியமரபு, ஆறுமுகநாவலர், ஆறுமுக நாவலரும் சபாபதி நாவலரும், நாவலர் அரிச்சுவட்டில் தேசியம், நாவலர் வகுத்த தனிப்பாதை, நாவலர் இலக்கிய நோக்கும் பணியும், நாவலரும் இந்துமத மறுமலர்ச்சியும், நூற்றாண்டுவிழா நிறைவுமலர், நாவலரும் பாரதியும் ஆகியவை சம்பந்தமாக ஒப்பீட்டளவில் நாவலர் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளார். பேராசிரியர் இரா.வை.கனகரத்தினம் 'ஆறுமுகநாவலர்' என்னும் நூலைத்தந்து அவரின் கல்விப்பணி, சமூகப்பணி, சமயப்பணி ஆகியவற்றை விளக்கியுள்ளார்.

'ஈழத்தின் தமிழ் இலக்கியச்சுடர்கள்' என்ற நூலில் பேராசிரியர் கா.சிவத்தம்பி பதினொரு ஆளுமைகளை முன்நிறுத்தியுள்ளார். இத்தொகுதியிலே இலங்கையின் ஆட்சிக்காலத்திலேயும், அதன் பின்னரும் ஈழத்து இலக்கிய உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும் முக்கிய இடத்தைப் பெறுகின்ற ஆறுமுகநாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை, ச.வைத்தீஸ்வரலிங்கப்பிள்ளை, சுவாமி விபுலாநந்தர், பண்டிதமணி க.கணபதிப்பிள்ளை, சி.கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வி.செல்வநாயகம், வண.தனிநாயகம் அடிகளார், பேராசிரியர் முஹம்மது உவைஸ், பேராசிரியர் சு.வித்தியானந்தன், பேராசிரியர் க.கைலாசபதி ஆகியோரைப்பற்றிய தமது மதிப்பீடுகளை முன்வைத்த பேராசிரியர் கா.சிவத்தம்பி, இந்நூலின் பின்னிணைப்பாக ஈழத்தின் தமிழிலக்கிய வரலாறு (பிரித்தானியர் காலம்வரை) பற்றியும் தமது ஆய்வை முன்வைத்துள்ளார்.

பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை 'ஈழத்து அறிஞர் ஆளுமைகள்' என்னும் நூலில் நான்கு பெரியார்களைப் பற்றி விசேடமாக பதித்துள்ளார். பாவலர் துரையப்பாப்பிள்ளையின் யாழ்ப்பாணம் - அன்றும் இன்றும் மீள்பார்வை, இலக்கணக் கொள்கைக் கட்டுரைகளிலே கணேசையரின் அணுகுமுறைகள், பண்டிதமணி போற்றிய யாழ்ப்பாண சைவத்தமிழ்ப் பாரம்பரியம், பேராசிரியர் வித்தியானந்தன் காட்டும் ஈழத்துத் தமிழர் சால்புக்கோலம் என்பன ஆய்வுக்கட்டுரைகளாக நூலில் இடம்பிடித்துள்ளன.

ஈழத்தின் பிரபலமான கவிஞராக முத்திரை பதித்த கவிஞர் இ.முருகையன், 'மொழிபெயர்ப்பு நுட்பம்' எனும் நூலைத் தந்துள்ளார். விளக்கங்களும், வரைவிலக்கணங்களும், வழிமுறைகளும், மாதிரியுருக்களும், அமைப்புக்களின் ஒப்பீடு, சொல்லும் பொருளும், மரபுத்தொடர்கள் எனப்படும் ஆகுமொழிகள், மொழியில் நிகழும் மாற்றங்கள், கலைச்சொல் ஆக்கம், கவிதை மொழிபெயர்ப்பு, பன்மொழிப் பயில்வு ஆகிய தலைப்புக்களில் ஆய்வு செய்துள்ளார்.

இன்றைய சூழலிலே பன்மொழித் தேர்ச்சியினை நாம் மனமுவந்து வரவேற்றல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளை அறிந்த ஒருவர், எந்த விடயத்தையும் ஒன்றுக்கு மேற்பட்ட கோணங்களில் பார்த்து விளங்கிக் கொள்ளும் வல்லமையைப் பெறுகிறார். மொழியியல் சார்ந்த கற்கை நெறிகளில் பயிலும் மாணவர்களுக்கும், இதழ்கள், வானொலி, தொலைக் காட்சி என்பனவற்றுடன் அரச-தனியார் துறை மொழிபெயர்ப்பாளருக்கும் ஏற்றவாறு இந்நூலினை கவிஞர் முருகையன் தந்துள்ளார்.

ஈழத்தின் முற்போக்கு எழுத்தாளர் செ.கணேசலிங்கன் எண்பது நூல்களுக்குமேல் எழுதி சாதனை படைத்துள்ளார். அவரது 'பல்சுவைக் கட்டுரைகள்' எனும் நூல் பல அம்சங்களைத் தந்து நிற்கின்றது. ''கலை, இலக்கியம் புலன் உணர்வுக்கு அப்பால் அறிவூட்ட வேண்டும். அதேவேளை, எழும் புதிய அறிவு ஏற்படுத்தும் புத்துணர்வே அழகியலுணர்வு என்பார் ஓர் அறிஞர். அவ்வப்போது ஆங்காங்கே கற்ற வேளையிலே, தோன்றிய புத்தறிவை மற்றவர்களுக்கும் கூற விரும்பினேன். என் உழைப்பின் சாரம், நான் பெற்ற அனுபவம் என்பவற்றுடன் எனது அறிவை மற்றவர்களுடன் அ பகிர்ந்துகொள்ள விரும்பினேன்'' என்கிறார்.

மலையக மக்களுக்காக உழைத்த பெரியார் 'தேசபக்தன் கோ.நடேசய்யர்' எனும் மகுடத்தில் மலையக எழுத்தாளர் சாரல்நாடான் நூல்வடித்துள்ளார். கோ.நடேசய்யர் மிகப்பெரிய செயல்வீரர். இந்நாட்டின் தொழிற்சங்க வரலாற்றிலும், அரசியல் நடவடிக்கைகளிலும், பத்திரிகை வெளியீட்டுத் துறையிலும், மலையக தமிழ் இலக்கிய முயற்சிகளிலும் தமது பாரிய பங்களிப்பினால் முத்திரை பதித்துக்கொண்டவர்.

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைப் பேராசிரியர் சி.மௌனகுரு, 'சுவாமி விபுலானந்தர்' எனும் நூலைத் தந்துள்ளார். அந்நூலில் விபுலானந்தரின் வாழ்க்கைப் பின்னணி, அவரின் ஆளுமைப் பின்னணி, விபுலானந்தரின் சமூகநோக்கு, கலை இலக்கியப் பங்களிப்பு, இசை பற்றிய நோக்கும் பணியும், நாடகக் கலைபற்றிய நோக்கும் பணிகளும், இலக்கியநோக்கும் பணியும் ஆகிய பலதுறை சார்ந்த பங்களிப்புக்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. ஆய்வு நோக்கில் பார்க்கப்பட்டுள்ளது.

'சுவாமி ஞானப்பிரகாசர்' தமிழ்மொழி வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பங்களிப்புக்களை பேராசிரியர் கா.இந்திரபாலா பின்வரும் கட்டுரைகள் வாயிலாக எடுத்தியம்பியுள்ளார். 'வரலாற்றாய்வும் சுவாமி ஞானப் பிரகாசரும்', மரபுவழிக் கல்வியும் சுவாமி ஞானப்பிரகாசரும்', மொழியாய்வும் சுவாமி ஞானப்பிரகாசரும்', 'சமயப் பணியும் சுவாமி ஞானப்பிரகாசரும்' என்பனவாகும்.

'கலாயோகி ஆனந்த குமாரசாமி' என்னும் நூலை ச.அம்பிகைபாகன் எழுதியுள்ளார். அவருடைய கல்வியியல் சாதனை, இலங்கையில் கனிப்பொருள் ஆராய்ச்சி, கலையார்வம், இலங்கை சமூக சீர்திருத்தச்சபை, யாழ்ப்பாணத்தில் ஆனந்தகுமாரசாமி, இந்தியாவும் இலங்கையும், இந்திய விடுதலை இயக்கமும் சுதேசியமும், இந்திய கலையின் நோக்கங்களும் செயல்முறைகளும், நூல்கள் வெளியிடுதல், கலைக்காட்சிகள் நடத்தல், அமெரிக்காவில் கலைப்பணியும் தத்துவ ஆராய்ச்சியும் ஆகியவை சம்மந்தமாக ஆராயப்பட்டுள்ளன.

வித்துவசிரோண்மணி கணேசய்யர், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவரைப் பற்றிக் கூறும்போது உரையாசிரியர், இலக்கணப் பேரறிஞர், கட்டுரையாளர், பாடபோத ஆய்வாளர், விவாத அறிஞர், கவிபாடும் புலமை மிக்கோன், போதனாசிரியர் என்றவாறு அவை பற்றிய கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ், தனிநாயகம் அடிகளார் பற்றியும், கலாநிதி எம்.எஸ்.எம்.அனஸ், ஏ.எம்.ஏ.அஸீஸ் பற்றியும், கலாநிதி ஜேம்ஸ் ரி.இரத்தினம், கோ.பொன்.அருணாசலம் பற்றியும் நூல்கள் தந்துள்ளார். அவற்றிலெல்லாம் அவர்களின் ஆளுமைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.




# பாரதிக்குப்பின் புதுக்கவிதைகளின் தோற்றமும் வளர்ச்சியும்

தமிழ் இலக்கியத்துறைக்கு புதுவரவாக வசன கவிதைகளை பாரதியார் அறிமுகப் படுத்தினார். ஆங்கிலேயரின் ஆட்சிக்கு எதிராக சுதந்திர தாகத்தை,மக்களுக்கு ஊட்டவேண்டும் என்ற நோக்கில் எல்லோரும் புரிந்துகொள்ளத்தக்க வகையில் வசனநடையில் கவிதைகளை எழுதினார். பாரதியைப் பின்பற்றிவந்த பாரதிதாசனும் தாம் வாழ்ந்த காலத்தில் நிலவிய அரசியல், சமூக நிலைமைகள் ஏற்படுத்திய பாதிப்புக்களை முன்னிலைப்படுத்தி புதிய பாடுபொருளில் எளிய நடைக் கவிதைகளைப் படைத்தார். புதிய தோர் உலகம் செய்யப்பட வேண்டும் என்ற திராவிட இயக்கத்தாரின் பின்புலத்தில் தான் பாரதிதாசன் என்னும் கவிஞன் எழுச்சிபெற்று நிற்கின்றான்.

1934 ஆம் ஆண்டு மணிக்கொடி இதழில் ந.பிச்சமூர்த்தி எழுதிய காதல் என்ற புதுக்கவிதை பிரசுரமாகியது. அதனைத்தொடர்ந்து சிவாஜி, சூறாவளி, காலமோகினி, கிராம ஊழியன் போன்ற இதழ்களில் புதுக்கவிதைகள் வெளியாயின. அன்றைய காலகட்டத்தில் மரபின் வழிவந்த யாப்பின் செல்வாக்கு வலுவாக இருந்தமையால், அத்தகையவர்கள் புதுக்கவிதை எழுதுகின்றவர்களை ஏளனம் செய்தனர். 1938 இல் பாரதிதாசனின் முதற்கவிதைத் தொகுதி வெளியாகியது. மேலைநாட்டுக் கவிஞர்களான டி.எஸ்.எலியட், எஸ்ட்ரா பவுண்ட் போன்றோரின் கவிதைகளின் தாக்கமும், பாரதியாரின் வசன கவிதைகளும், தமிழ்க் கவிதை ஆக்கத்தில் மெல்லப் பாதிப்பை ஏற்படுத்தி வடிவரீதியில் மாற்றம் ஏற்படுத்திக்கொண்டிருந்தன.

1946 இல் இலங்கையில் தோன்றிய 'மறுமலர்ச்சி' இதழில், மஹாகவி, வரதர் போன்றோர் கவிதை எழுதியுள்ளனர். இதற்குமுன் அவர்களது கவிதைகள் ஈழகேசரியில் பிரசுரமாகியுள்ளன. சமூக பொருளாதார அடிமைத் தளங்களால் பிணைக்கப் பட்டிருக்கின்றமை குறித்தும், தீண்டாமை, போலி ஆசாரம் மறுமதிப்பீட்டுக்கும் உட்படுத்தவேண்டிய அவசியம் குறித்தும் கவிதைகள் பேசத்தொடங்குகின்றன. இவ்வாறு உள்ளடக்கச் செறிவில் ஏற்பட்ட மாற்றங்களோடு பேச்சோசை கொண்ட வசனத்தின் உச்ச நிலைமையே செய்யுள் என்பதைப் புரிந்துகொண்டு, வடிவம் தொடர்பான புதிய அழுத்தம் முக்கியத்துவம் பெறுகின்றது. இந்தப் பின்னணியில் முகிழ்ந்த கவிஞரான மஹாகவி, நவீன தமிழ்க்கவிதைகளின் முன்னோடியாக முனைப்புப் பெறுகிறார். இவரைத் தொடர்ந்து அ.நா. கந்தசாமி, முருகையன், சில்லையூர் செல்வராசன் ஆகியோர் கவிதைத்துறைக்கு கூடிய பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

தமிழகத்திலிருந்து 1955இல் வெளியான 'எழுத்து' இதழ், புதுக்கவிதைக்கு முக்கியத்துவம் கொடுத்து தொடர்ந்து வெளிவந்தது. நவீனத்தின் தீவிரமான பொறிகளும், படைப்புணர்வும் செயற்படும் ஒரு காலகட்டத்தை புதிய உயிரோட்டத்துடன் காண்கிறோம். முக்கியமாக, தமிழில் புதுக்கவிதை சார்ந்து உருவான புத்திலக்கிய எழுச்சி, கவிதை குறித்தும், விமர்சன அணுகுமுறை குறித்தும், புனைவு இலக்கியம் குறித்தும் மரபுகடந்த புத்துணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்ததையும் சி.சு.செல்லப்பா தம்முடைய எழுத்துப் பத்திரிகையின் மூலம் அவ் உணர்வுகளுக்கு ஒரு வடிகாலாக அமைந்துள்ளதையும் காணலாம்.

பாரதிக்குப்பின் தமிழ்க்கவிதைக்குப் புது அர்த்தம் கொடுத்த பெருமையை இதற்குப் பின்னரே இலங்கை பெறுகின்றது. சமகால அன்றாட வாழ்வினை ஆதார சுருதியாகக் கொண்டு, சமுதாய வாழ்வின் சகல முனைகளையும், முனைப்புகளையும் கலாபூர்வமான பதிவாக்குகின்ற கவிதைகள், இலங்கைக் கவிதை வரலாற்றில் புதிய அத்தியாயத்தைத் தோற்றுவித்துள்ளன.

இத்தகைய நிலைமைக்கு இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் முன்னெடுத்த மரபுப்போராட்டம் தோற்றுவாயாக அமைந்ததையும், இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். ஈழத்தில் பல கவிஞர்கள்தோன்ற இத்தகைய முன்னெடுப்புக்கள் உந்துசக்தியாக அமைந்திருந்தன. மரபுக்கவிதையை முன்னெடுத்த வித்துவான் வேந்தனாரின் மனநிலையை இக்கவிதை புதிய நோக்குடன் சொல்லி நிற்கிறது.

''பாடுகின்ற எல்லோரும்
கவிஞர்அல்லர்
பாட்டென்றால் பண்டிதர்க்கே
உரிமையல்ல
ஓடுகின்ற பெருவெள்ளப்
பெருக்கேபோல
உணர்ச்சியிலே ஊற்றெழுந்த
ஒளியாய் ஓங்கி
வாடுகின்ற மக்களினம் மகிழ்ச்சி
கொள்ள மறுமலர்ச்சிப்
பெருவாழ்வை வழங்கு மாற்றல்
கூடுகின்ற கொள்கையினால்
எழுச்சி கொண்டு
குமுறுகின்ற கோளரியே
கவிஞனாவான்...''

தமிழின் மறுமலர்ச்சிப் புதுவாழ்வுக்குக் குரல்கொடுத்த கவிஞன், அறுபதுகளில் பண்டிதர்கூட்டத்தோடு மரபுப் போராட்டத்தினை இலங்கை முற்போக்கு எழுத்தாளர்கள் நடத்தியதை அவதானித்துநின்று மேலேகூறிய கவிதையைத் தந்துள்ளார். மரபுபோற்றியோருடன் விட்டு விடுதலையாகி நின்று தமிழ்க்கவிதை உலகில் புதுமைப்புரட்சி ஏற்படுத்த அவர் தயங்கியதே இல்லை.

மரபுப் போராட்டத்தை முன்னெடுத்தவர்களில் ஒருவரான பேராசிரியர் கா.சிவத்தம்பி, கவிதைகள் பற்றி பின்வருமாறு கூறுகின்றார். ''கவிதை வாக்கியங்கள் மாபெரும் கோயில்மணி அடிக்கப்படும் ஓசை போன்றது. மணியின் ஓசையிலும் பார்க்க அந்த ஓசையின் அதிர்வு ஏற்படுத்தும் தாக்கமே முக்கியமாகும். மணி அடித்து முடிந்த பின்னர், பலநிமிடங்களுக்கு அந்த அதிர்வொலி நிற்கும். நல்ல கவிதைகளும் அப்படித்தான்'' என்கிறார்.

புதியனவாக பல்லாயிரக்கணக்கான கவிதைகள் தமிழில் உள்ளன. இவற்றிடை சிறந்ததைத் தேடவும், சுவைக்கவும், உணர்பவனைப் பண்படுத்தவும் சிறந்த கவிதைகள் உதவும். அத்துடன் நல்லறிவு பெறுவதற்குக் கவிதையை உரைத்துத் தரங்காணும் முறைமையும் பெற்றிருத்தல் வேண்டும். உவமை, உருவகம், கற்பனை, ஓசைநயம், சொல்வளம், பொருளாற்றல் முதலான அனைத்துத் துறை சார்ந்தும் கவிதைகள் புனையப்படும்போது, அவை நன்கு சுவைக்கவும், ஆய்ந்தறிந்து நலனாயவும் முடியும்'' என்று 'கவிதை நயம்' என்ற நூலின் பேராசிரியர் க.கைலாசபதியும் கவிஞர் இ.முருகையனும் கூறியுள்ளனர்.

# ஆஸ்திரேலிய கிரிக்கட் கதை காலி? கொட்டம் அடங்கியது!

கிரிக்கட் உலகில் 1996க்குப் பிறகு கிட்டத்தட்ட 15 வருடங்களாக கொடி கட்டிப் பறந்து கொண்டிருந்த ஆஸ்திரேலிய அணி இன்று சிதைந்து சின்னா பின்னமாகும் நிலைக்குவந்திருக்கிறது. மற்ற அணி வீரர்களை உருட்டியும் மிரட்டியும் பெற்ற பட்டம், பதவிகள் காற்றில் பறந்துகொண்டிருக்கின்றன. அவ்வப்போது ஆஸ்திரேலியா நாட்டில் இருந்து கிரிக்கட் ஜம்பவான்கள் தோன்றினார்கள் என்பது உண்மைதான். ஆனால், கடந்த 15 வருடமாக அசைக்கமுடியாத அணி ஆஸ்திரேலிய அணி என்ற பெயர்பெற்றது உண்மையில் திறமையினால் மட்டுமல்ல என்பது இப்போது தெளிவாகியிருக்கின்றது. ஆஸ்திரேலியாவுடன் ஒப்பிடும்போது மேற்கிந்திய தீவுகள் அணி 1970கள், 1980கள் என இரு தசாப்தகாலமாக கிரிக்கட் உலகின் முடிசூடாமன்னர்களாக திகழ்ந்தது உண்மை, நேர்மை, சத்தியத்தின் அடிப்படையிலேயே என்பது இங்கு குறிப்பிடப்படவேண்டும். 1970 களில் மட்டுமன்றி 1950, 1960 களிலேயே ப்பிராங் வொரல், கிளைட் வெரல்கொட், சேர் கரிசோபஸ் போன்ற மகாரதர்கள் மேற்கிந்திய தீவுகளில் இருந்து தோன்றிப் பிரகாசித்தனர். அக்காலத்தில் நடுவர்கள் மேற்கிந்திய தீவு அணிக்கு சார்பாக செயற்பட்டதால் அந்த அணி வென்றது என்று யாரும் சொல்வதில்லை. சகலருக்கும் தெரிந்த விடயமானது மேற்கிந்திய அணி தனது திறமையால் வெற்றிவாகைசூடுகிறது என்பது தான். ஆனால், மறுபுறம் 90களின் பிற்பாதியிலும் 2000 - 2010 ஆண்டு காலப்பகுதியிலும் ஆஸ்திரேலிய அணி கிரிக்கட்டின் உலக சம்பியன்களாக திகழ்ந்து ஒரு



தூய்மையின் திறமையினால் அல்ல, அதனால் அவ்வணி இன்று தடுமாறும் தடுமாற்றம் ஓர் ஆச்சரியமே அல்ல. ஆஸ்திரேலிய அணிக்கு சவால்விடக் கூடிய பந்துவீச்சாளர்கள், துடுப்பாட்ட வீரர்கள், எந்த அணியில் இருந்தாலும் அவர்களைத் தனிமைப்படுத்தி தாக்குதல் நடத்துவது ஆஸ்திரேலியாவின் வெற்றிக்கு பிரதான காரணமாகும். முரளிதரனின் சுழல்பந்தை அனுமானிக்க முடியாமல் ஆஸ்திரேலிய அணி தடுமாறத் தொடங்கியதும் அவர் மீது தனிப்பட்ட ரீதியாக தாக்குதல் நடத்தப்பட்டது. தொடர்ச்சியாக 10இற்குமேற்பட்ட டெஸ்ட்களில் வென்றுவந்த ஸ்டீவ் வோஹ்வின் ஆஸ்திரேலிய அணியை கல்கத்தாவில் வைத்து 2001 இல் ஹர்பஜன் சிங்கின் பந்துவீச்சு தகர்த்து எறிந்தது. இதனால் ஹர்பஜன் சிங்கை குறிவைத்து 2007 இல் ஆஸ்திரேலியர்கள் அபாண்டமாக பழிசுமத்தினர். இவ்வாறு முரளிதரன், ஹர்பஜன் இருவரையும் பொறுமை இழக்கச்செய்து அவர்களின் பந்து வீச்சில் திறமையை இழக்கும்படி செய்ய ஆஸ்திரேலியர்கள் முயன்றனர். ஆனாலும் இவ்விரு ஆசிய வீரர்களும் இன்னும் பலமடங்கு பிரகாசித்தது குறிப்பிடத்தக்கது. ஹர்பஜன் மீதான காழ்ப்புணர்வை ஆஸ்திரேலியர்கள் வெறித்தனமான நடத்தையை காண்பித்தனர். இன்று இந்திய மாணவர்கள் மீதும் கூட காண்பிக்குமளவுக்கு பெரும்பான்மையின ஆஸ்திரேலியர்கள் வெறித்தனமான நடத்தையை காண்பித்தனர். இன்று இந்திய மாணவர்கள் ஆஸ்திரேலியாவுக்கு கல்விகற்க விண்ணப்பிப்பது மிகமிக அருகிவிட்டது. இதனால் கோடிக்கணக்கான அன்னியச் செலாவணி

வருமானம் ஆஸ்திரேலிய அரசினால் இழக்கப்பட்டது. இவ்வளவு நடந்தும் வெறித்தனம் கொள்வதில் குறையாதது வியப்பே. இதற்கு சான்றாக சமீபத்தில் இந்தியாவில் நடந்த இந்திய - ஆஸ்திரேலிய டெஸ்ட் போட்டிகளில் இந்தியா வென்றதை சகிக்கமுடியாத ஆஸ்திரேலிய தடகள வீரர்கள் பொதுநலவாய விளையாட்டுக்காக டில்லியில் தங்கியி




ருந்த சமயம் மதுபோதையில் டெண்டுல்கரை தகாத வார்த்தையில் ஏசியுள்ளமையை குறிப்பிடலாம். ஆஸ்திரேலியர்களின் வெறித்தனத்துக்கு எல்லையே இல்லை என்பதற்கு இச்சம்பவங்கள் சான்றாகும். இற்றைக்கு 100 வருடங்களுக்கு முன்பாயின் இவ்வாறு வெறியாடுவது யாருக்கும் வெளியில் தெரியவரமாட்டாது. ஆனால், தகவல் தொழினுட்ப விரைவின் உச்சத்தில் இன்று இச்சம்பவங்கள் விரைவாக பரவி தமது பெயரை அழித்துவிடும் என்பது ஆஸ்திரேலியர்களுக்கு இன்னமும் புரியவில்லை.

மிருகத்தனமான இவர்களின் நடத்தைக்கு உதாரணங்களைக் கூறிக்கொண்டே போகலாம். தென்னாபிரிக்க அணியில் அற்புதமாக துடுப்பெடுத்தாடி வரும் ஹஷீம் அம்லா ஒரு முஸ்லிம் என்பதற்காக அவர் ''பயங்கரவாதி'' என டீன் ஜோன்ஸ் சொல்லப்போய் சர்ச்சையில் மாட்டியது நினைவிருக்கலாம். டீன் ஜோன்ஸ் ஆஸ்திரேலிய அணியில் இருந்த ஒரு மகா அற்புதமான துடுப்பாட்டவீரர். ஆஸ்திரேலியா 1987இல் முதன்முதலில் உலகக்கிண்ணம் வெல்வதற்கு அலன்போடர், டேவிட் பூண், கிரேக் மக்டமட் ஆகியோருடன் ஜோன்ஸின் பங்களிப்பு அளப்பரியதாகும். இருந்தும் என்ன பலன்? ஒரு கிரிக்கட் வர்ணனையாளராக அவரது வாழ்வு ஹஷீம் அம்லாவை பயங்கரவாதி என்று



சொன்னதுடன் முடிந்துவிட்டது. டீன் ஜோன்ஸ் என்ன இனி எக்காலத்திலுமே ஆஸ்திரேலியர்களை கிரிக்கட் வர்ணனைத் தொழிலுக்கு தெரிவு செய்ய எவரும் பின்னடிக்கவே செய்வார்கள். ஆஸ்திரேலியர்களால் கிரிக்கட் வர்ணனையாளராகத்தான் தொழில் செய்ய முடியாதென்றால் கிரிக்கட் பயிற்சியாளராக முடியுமே! ஆனால்; இதற்கு வேட்டுவைத்தார் கிரெக்சப்பல். பெரும் ஆரவாரத்துடன் இந்தியா இவரை பயிற்சியாளராக்கியது.

ஆனால், இந்திய அணித்தலைவர் கங்குலி மற்றும் டிராவிட், சச்சின், லக்ஷ்மன், ஹர்பஜன் போன்றோர் ஆசிய அணியின் முதல் இடத்துக்கு சவால் விடுவர் என்பதை புரிந்து கொண்ட கிரெக்சப்பல் கங்குலி மீது அபண்டபழி சுமத்தி அவரது கிரிக்கட் வாழ்க்கையையே அஸ்தமிக்கச் செய்தார். உண்மையில் கிரெக்சப்பலை தெரிவு செய்யாது உள்நாட்டவர் ஒருவரையே பயிற்சியாளராக இந்தியா நியமித்திருந்தால் ஆஸி அணியின் முதல் இடம் அப்போதே இந்திய அல்லது இலங்கையால் தட்டிப்பறிக்கப்பட்டிருக்கும். இன்று கூட ஆஸ்திரேலியா கிரிக்கட்டில் அதலபாதாளத்தில் விழ முக்கிய காரணம் கங்குலியும் இந்திய அணியுமே என்பதை எவரும் மறக்க முடியாது. ஆஸ்திரேலியாவை வீழ்த்த முடியும் என்ற உண்மையை மற்ற நாடுகளுக்கு உணர்த்தியது இந்தியாவே. ஆனானப்பட்ட தென்னாபிரிக்கா, இலங்கை, பாகிஸ்தான் முதலிய பலம்வாய்ந்த அணிகள் இருந்தும் இந்திய அணிதான் ஆஸியை வீழ்த்தி வழி சமைத்துக் கொடுத்தது என்பது மறக்கமுடியாததாகும். இன்று ஏனைய அணிகள் ஆஸி அணியை துவம்சம் செய்யப்புறப்பட்டுவிட்டன. ஆஸி அணியை கண்டதும் கழுகைக் கண்ட கோழிக்குஞ்சு போல் பதுங்கிய இங்கிலாந்து கூட இன்று சிலிர்த்தெழுந்து சக்கை போடுபோட்டு வருகிறது. சென்றவாரம் மெல்பேனில் நடந்த 4ஆவது டெஸ்ட்டில் இங்கிலாந்து வென்று 2 - 1 என்ற கணக்கில் தொடரில்



தோற்கடிக்கப்படவே முடியாத நிலைக்கு சென்றுவிட்டது. கடந்த ஆஷஸ் தொடரிலும் இங்கிலாந்தே வென்றதால் இனி நடக்கும் (சிட்னி) 5ஆவது டெஸ்டில் ஆஸ்ரேலியா வென்றால்கூட ஆஷஸ் இங்கிலாந்து வசமே இருக்கும். 20 ஆண்டுகளுக்குப்பின் இங்கிலாந்து அணி ஆஷஸ் கிண்ணத்துடன் லண்டன் திரும்பவுள்ளது உண்மையில் புதிய வரலாறே ஆகும். இதற்கு அடியெடுத்துக் கொடுத்த கங்குலி, டெண்டுல்கர், டிராவிட், லக்ஷ்மன், ஹர்பஜன், கும்ளே, சேவாக் ஆகியோரா உண்மையில் கிரிக்கட்டின் வரலாற்றை மாற்றி எழுதிய வீரபுருஷர்களே எனலாம். இவர்களுடன் வாஸ், முரளி, அர்ஜுன, சனத், அரவிந்த, குலசிங்ஹ, மஹேல, சங்கக்கார, ஆகிய நம்மண்ணின் மைந்தர்களும் ஆஸி அணியை வீழ்த்துவதில் பிரதான பங்காளிகளாக இருந்தவர்களோ!

ஆட்டைக் கடித்து மாட்டைக்கடித்து கடைசியில் மனுஷனை கடித்த கதையாக ஆஸ்திரேலியாவின் இயன் சப்பல் சச்சினைக்கூட விட்டாரில்லை. ஒரிரு

[illegible]

போட்டிகளில் சச்சின் சோபிக்க தவறினதும் 'இனிமேல் சச்சினால் முடியாது, வயதாகிவிட்டது, ஓய்வு பெறவேண்டும் என்று' இவர் சொன்னதை யாரும் மறக்கமுடியாது. சச்சின் ஆஸ்திரேலிய வீரர்கள் போல் அதிகம் பேசுவதில்லை, 'மட்டை'தான் பேசும். சில மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் கிரிக்கட்டின் முதல் இரட்டை



சதத்தை சச்சின் அடித்து முடித்ததும் இயன் சப்பலுக்கு தொலைபேசி அழைப்பை எடுத்து ''ஹலோ இயன் சப்பல் இப்போ எப்படி? நான் ஓய்வு பெறட்டுமா வேண்டாமா?'' என்று கேட்டிருக்க வேண்டும். அந்தப் பண்பாளன் அதைச் செய்யவில்லை. அத்துடன் கதைமுடிந்ததா? 501ஆவது டெஸ்ட் சதத்தை அடித்து தன்னை அடுத்திருக்கும் ரிக்கி பொன்டிங்கை விட 11 சதங்கள் முன்னிலைக்குச் சென்றார். ஒருவேளை பொன்டிங் அதிகூடிய சதம் அடித்து சாதனை செய்யவேண்டும் என்பதற்காகத்தான் சச்சினை ஓய்வு பெறும்படி இயன் சப்பல் கூறியிருக்கக்கூடும்.

தில்லுமுல்லுகள் செய்தே உலகக் கிரிக்கட்டில் முன்னிலை பெறவேண்டுமென்ற திட்டம் ஆஸி வீரர்களில் பெரும்பான்மையினர் மனதில் உள்ளது. ஆடம் கில்கிறிஸ்ட், ஸ்டீவ் வோஹ் போன்ற விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரிரு வீரர்கள் தவிர சகல ஆஸ்திரேலிய கிரிக்கட் வீரர்களும் நல்ல மனம் கொண்டவர்கள் அல்லர். உலகளவில் ஆஸ்ரேலியாவின் கிரிக்கட் நடுவர்கள் கூட நல்ல பெயர்வாங்கவில்லை. இங்கிலாந்தினதும் இந்தியாவினதும் நடுவர்கள் தான் நடுநிலைக்குபேர் பெற்றவர்களாவர்.



ஆஸ்திரேலிய கிரிக்கட் வீரர்களின் இவ்வாறான குள்ளநரித்தனம் காரணமாகவே அவர்களது நாட்டைச் சேர்ந்த பிரமுகர்கள் சர்வதேச கிரிக்கட் பேரவையின் தலைமைப்பதவிக்கு கூட வர இயலவில்லை. கடைசியாக நடந்த சர்வதேச கிரிக்கட் பேரவையின் தலைவர் தேர்தலில் முன்னாள் ஆஸ்திரேலிய பிரதமர் ஜோன் ஹேவர்ட் இந்தியாவின் சாத்பவாரிடம் தோல்விகண்டார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

# மலர் ஒன்று உதிர்ந்த கதை!!!

யுத்தம் நடைபெற்ற நாட்களில் வன்னியில் எவ்வளவோ சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தாங்கள் எதிர்கொண்ட அவலங்களை, தங்களுக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவங்களை பலர் 'உயிர் வலிக்கும் கணங்கள்' என்ற பகுதியில் எழுதி வருகிறார்கள். அதே போன்று வன்னியில் இடம்பெற்ற சம்பவங்களைப் பலர் கதை வடிவிலும் எழுதி வருகிறார்கள். இந்தத் தொடரில் து.திலக் எழுதிய 'மலர் ஒன்று உதிர்ந்த கதை' என்ற உண்மைக்கதை வெளிவருகிறது.

து.திலக்

யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமராச்சி கிழக்கில், வளங்கொழிக்கும் அழகிய ஊர் மணற்காடு. அங்குதான் அமலதாஸ் குடும்பமும் மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தது. அக்காலப் பகுதியில் போர் யாழ்.குடாநாட்டையும் ஆக்கிரமிக்கத் தொடங்க, இடப்பெயர்வு ஆரம்பமானது.

வந்தோரை வாழவைக்கும் வன்னிப் பெருநிலப்பரப்பின் இரணைப்பாலை மண் இவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தது. ஆண்டுகள் பல கடந்தோட, அக்குடும்பத்தின் வாழ்க்கைச் சக்கரம் பல தடைகளின் மத்தியில் பயணித்துக்கொண்டிருந்தது. தாய், தந்தை, ஆறு பிள்ளைகள் எனப் பெரிய குடும்பம். அமலதாஸின் அன்றாட வருமானம் இவர்களின் பொருளாதாரத்தை ஈடுசெய்யப் போதுமானதாக இருக்கவில்லை. அவரது மனைவி, பிள்ளைகளின் அயராத முயற்சி குடும்பத்தை நகர்த்துவதற்கு ஓரளவு பலம் சேர்த்தது. தந்தையின் பொறுப்பை, அமலதாஸின் மூத்தமகன் டியூலன் சின்ன வயதிலேயே சுமக்கத் தொடங்கினான். அவன் தந்தைக்கு உதவிய விதம் அனைவரையும் வியக்க வைத்தது.

கூலி வேலை முடித்துவரும் தந்தையும், அவரின் துணைக்கு டியூலனும் சேர்ந்து மாலை நேரங்களில், அருகிலுள்ள தென்னந்தோப்பு உரிமையாளர்களிடம் குறைந்த விலைக்கு தென்னம் ஓலையை வாங்கிவந்து, அதனை குடும்பமாய் இருந்து இழைத்து கிடுகாக்கி விற்றுவரும் பணத்தில்தான் ஓரளவு குடும்ப நிலைமையை சமாளிக்க முடிந்தது.

இந்தக் காலகட்டத்தில்தான், போர் தனது கொடூரத்தை வன்னி மண்ணில் அரங்கேற்றத் தொடங்கியது. மக்கள் தொடர் தொடராக இடம்பெயரத் தொடங்கினார்கள். வன்னியின் மக்கள் குடியிருப்புக்கள் எறிகணைகளால் குதறப்பட்டு, மக்களும் கையில் அகப்பட்டவைகளோடு தம் வாழ்விடங்களைவிட்டு நகர்ந்தார்கள். வன்னிமண் சிறிதுசிறிதாக தன் அங்கங்களை இழந்து வந்தது. அப்போது இரணைப்பாலைக் கிராமம், மக்களால் நிரம்பியது. ஒரு சின்னத் துண்டு நிலப்பரப்புக்கூட வெறுமையாக இல்லை. காடுகள், பற்றைகள் கூட அழிக்கப்பட்டு அவை மக்களின் வாழ்விடங்களாகின.

2009.02.26 அன்று, இரணைப்பாலை அகோர எறிகணைவீச்சால் அதிர்கின்றது. இவர்களது தற்காலிக வாழ்விடமும், அந்த வாழ்வளித்த கிராமமும் டியூலனுக்கு விடைகொடுத்து அனுப்புகின்றன. மக்கள் கூட்டம், இரணைப்பாலையைவிட்டு மீண்டும் இடம்பெயர்ந்து முள்ளிவாய்க்காலில் வந்து குடியேறுகின்றனர். இன்றுவரை பேசப்படும் மக்களின் அதிகளவான உயிர்குடித்த மண் அது. காப்பகழிகளே பல உறவுகளுக்கு, புதைகுழிகளாகின.


சொல்லில் அடங்காத சோகங்களை சுமந்து வந்தவர்கள், கையிலேதும் இல்லாத நிலையில் அடுத்தவரின் உதவியை நாடவேண்டிய நிலை. பட்டினிச்சாவு தன் வலையை வீசிவிட்டு நாட்டியம் ஆடிய காலம். மனிதன் உயிர்வாழ உணவின்றித் தவித்தபோது, அதனைச் சாதகமாக பயன்படுத்திக்கொண்ட இரசாயனக் குண்டுகள் தமது கோரப்பசிக்கு மனித உயிர்களை பலியெடுத்தன. தரையில் உயிரற்ற சடலமாய் வீழ்ந்தவர்கள், வீதிகளெங்கும் பரவிக் கிடந்தனர். இவை ஆங்கிலப் படங்கள்போன்று சோடிக்கப்பட்ட கதைகள் அல்ல. வன்னியில் உண்மையாகவே இடம்பெற்ற இன அழிப்பின் தடங்கள். அனைத்தும் எம்மவரின் வலி நிரம்பிய சொந்தக் கதைகள்.

ஒரு தறப்பாள் கொட்டிலில்தான், அமலதாஸின் குடும்பமும் தனது ஜீவனோபாயத்தை நடத்திக்கொண்டிருந்தது. தனது குடும்பத்துக்காக தன் பசியை மறந்து டியூலன், அரிசிக்காக அங்கும் இங்கும் ஓடியோடி அலைவான்.

2009.04.21 அன்று காலைப்பொழுது. வழமையைவிட சூரியன், தனது பணியை வேகமாக செய்துகொண்டிருந்தான். விடிவதற்குத் தாமதமானாலும், வெடிகள் வருவதற்கு ஒருபோதும் தாமதித்ததில்லை. அந்நேரம், சுற்றுச் சூழல் எங்கும் அதிர்கிறது. ''ஐயோ கொத்துக்குண்டு...'' ''இதால கனோன் வருகுதடி...'' ''ஆட்கள் நிறையப் பேர்... செத்துப் போட்டினமாம்'' என்று ஓலமிட்டபடி, வீதியால் செல்பவர்கள் மனிதத்தை தொலைத்தவர்களாய் மரண பீதியோடு ஓடிக்கொண்டிருந்தார்கள். இரண்டு மணித்தியாலங்கள் இடைவிடாது டியூலனின் வீட்டை அண்டிய பகுதிகளை குண்டுகள் அதிர வைத்ததுக்கொண்டிருந்தன. பின்னர், கிடைத்த ஓய்வைப் பயன்படுத்தி வேறிடம் போக உத்தேசித்தனர். ஆனால், வீட்டிலிருந்த அனைவருக்கும் பசி வயிற்றைக் கிள்ளியது. டியூலன் சாப்பிடாததால் இருந்த இடத்தைவிட்டு நகர முடியாத நிலை. பசி வந்தால் பத்தும் பறக்கும் என்பார்கள். அவன் தன் தாயிடம் வந்து ''அம்மா... பசிக்கிது..'' என்று கேட்டான்.

''தம்பி... ஷெல், ரவுண்ஸ் வருகுது. நீ பங்கருக்குள் போ. அம்மா சாப்பாடு தாறன்...'' என்று கவலையோடு கூறிய தாயை பசிக்கொடுமையால் மீண்டும் அதட்டியவன், பங்கருக்குள் போகாமல் வெளியில் நின்று சிணுங்கிக் கொண்டிருந்தான். யாரும் எதிர்பார்த்திராத கணப்பொழுது, தன் கோரப் பசியைத் தீர்க்க விரைந்து வந்த துப்பாக்கிச் சன்னமொன்று டியூலனின் வயிற்றுப் பகுதியில் பட்டு ஊடுருவியது. அவனது உயிரை தனது பசிக்கு இரையாக்கிவிட்டு ஏப்பம் விட்டுக்கொண்டது சன்னம். ''தன் வயிற்றுப் பசிக்காக ஒருபடி உணவு கேட்டவனை, இறைவா... நீ இந்த உலகைவிட்டே பறித்து விட்டாயே... இது தகுமோ? '' அவனது உறவுகள் கதறினார்கள். ''பசிக்குதம்மா.. சாப்பாடு தாங்கோ...'' என்று அவன் கேட்டு அழுத அந்தக்குரல், இன்றும் அவனது உறவுகளின் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

டியூலன் ''அக்கா...'' என்றபடி தகப்பனின் மடியில் வீழ்ந்தான். அவனுக்கு அவனது உறவுகளே காயத்திற்கு மருந்து போட்டார்கள். இரத்தம் அதிகமாய் வெளியேறியது. அவன், யாருடனும் எதுவும் பேசவில்லை. ''அக்கா'' என்று கூறிய வார்த்தைதான் அவனது இறுதி வார்த்தையானது. ஐந்து நிமிடம்கூட அவனது உடலில் உயிர் தங்கவில்லை. அவன் மௌனப் பயணம் போனான். நிரந்தரமாகவே அவன் உறவுகளைவிட்டு பிரிந்து போய்விட்டான். அன்றுதான் அவனது இரண்டாவது அக்காவின் பிறந்த நாள். அவளது பிறந்த நாளில்தான் இறந்து போனான். இது விதியா...? சதியா...? விடைகாணாத கேள்வி தொடர்கிறது.



இவர்களுக்கு மட்டும் இந்த நிலை கிடையாது. வன்னி மக்கள் அனைவருக்கும்தான் இப்படியான துயரம் நடந்தன. உடனடியாக பாய், துணிகளில் அவனது உடலைச் சுற்றி தமது காப்பகழியில் புதைத்துவிட்டு, அந்த இடத்திலிருந்து வேறிடம் நோக்கி நகர்ந்தார்கள். அன்னையின் மடியில் பிறந்த டியூலன், தந்தையின் மடியில் உயிர் பிரிந்து போனான். விசேட நாட்கள் வரும்போதெல்லாம், அவனது நினைவுகள் இதயத்தை நனைக்கின்றன. உணவு உண்ண முடியவில்லை. அவனது பசித்த முகம் கண்முன்னே வருகின்றது.

தம்பியை தனியாக விட்டுவிட்டு நாங்கள் வவுனியா வந்துவிட்டோம். அவன், முள்ளிவாய்க்காலில் தனியே இருக்கிறான் என்று கூறும் இவர்களது கண்ணீரில், இன்னும் தம்பியின் நினைவுகள் மட்டும் அகலவில்லை. தீராத சோகம், இவர்களுக்கு சொந்தமான ஒன்றாகிவிட்டது.

*

# இலக்கியப் பகிர்வு




இலங்கை படைப்பிலக்கியத் துறையில் சிறுவர்களுக்கான படைப்புக்களைப் படைப்பவர்களும், அதனை விருப்போடு வெளியிடுபவர்களும் மிகக் குறைவான எண்ணிக்கையிலானவர்களே ஆவர்.

கவிதை, சிறுகதை, நாவல், ஆய்வு நூல்கள் போன்றன அதிகளவாக வெளிவந்துகொண்டிருந்தாலும், சிறுவர் இலக்கியங்கள் அத்தி பூப்பதுபோல நீண்டகால இடைவெளிகளின் பின்னர்தான் வெளியாகி நமது கைகளில் சேருகின்றன. இருப்பினும், குறைவான படைப்புக்கள் வெளிவந்தாலும் அவை, பல நிறைவான இலக்கியங்களாக வெற்றிபெறுவதும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

அந்தவகையில், இலங்கை இலக்கியத்துறைக்காக முப்பத்தைந்துக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்து வெளியிட்டு, தன்னை இலக்கியத்துறைக்கே அர்ப்பணித்துள்ள மூத்த எழுத்தாளர் ஸீ.எம்.ஏ.அமீன் அவர்களுடைய கைவண்ணத்தில் அண்மையில் வெளிவந்திருக்கிறது 'சதுரங்க ஆட்டக்காரன்' என்ற விறுவிறுப்பான இளையோர் நாவல்.

இது பார்த்த உடனேயே படிக்கத்தூண்டுகின்ற வகையிலும், சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அத்தனை தலைமுறையினரையும் கவர்ந்திழுக்கின்ற படைப்பாகவும் வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

கைகளுக்கு அடக்கமாகவும், தெளிவான எழுத்துக்களுடனும் ஐம்பத்தெட்டுப் பக்கங்களுடன் சிறுவர்களுக்குப் பிடித்தமான வகையில் அச்சேற்றப்பட்டுள்ளமை நூலுக்குச் மேலும் சிறப்பாகவுள்ளது.

விறுவிறுப்பாகவும், மிகவும் சுவாரஸ்யமான கதை நகர்வுடனும் அடுத்தது என்ன நிகழுமோ என்ற அங்கலாய்ப்பை வாசகர்களுக்கு ஏற்படுத்துகின்ற விதத்திலும், இந்த இளையோர்நாவல் நகர்ந்து செல்கிறது.

சாதாரண ஏழைக்குடியானவன் பகீரதன் என்பவனை கதையின் கதாநாயகனாகக் கொண்டு நகர்த்தப்பட்டுள்ள இந்நாவல், பலவிதமான உணர்வுகளோடு சென்று இறுதியில் நல முடிவோடு நிறைவடைகிறது.

தொடர்ந்து இந்த நாவலானது, நுனிக்கதிரையில் நம்மை இருக்கச் செய்து பல எதிர்பாராத திருப்பங்களுடன் எளிய மொழிநடையோடு யாவரும் இலகுவாக புரிந்து கொள்ளக்கூடியவாறு தொடர்கிறது. இதில் திருத்தப்படுவதற்கு ஏதுவுமே இருப்பதாக தோன்றவில்லை. இளையவர்களுக்கேற்ற வகையில் இந்த படைப்பிலக்கியம் வெளியாகியுள்ளமை பாராட்டத்தக்கது.


இந்த நாவலாசிரியர் அறியப்படாதவரல்லர். இவர், இலங்கையின் தேசிய பத்திரிகைகளில் பணியாற்றிய பன்முகப் படைப்பாளி. எனவே, இலங்கையின் இலக்கிய வரலாற்றிலே இதுபோன்ற இன்னும் சிறப்பான படைப்பிலக்கியங்கள் வெளிவரவேண்டும் என வாழ்த்துகிறது இலக்கியப் பகிர்வு.

-இரா-

## சொற்சிலம்பம் போட்டி இல. 451

சொற்சிலம்பம் 451 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய இறுதித் திணம் 2011 ஆம் ஆண்டு ஜனவரி 22 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜனவரி 30 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 449 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன. தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 451



### இடமிருந்து வலம்

1. தன்வசத்தில் எடுத்துக்கொள் (மரபுச் சொல் போன்றது). 6. அரசன். 7. பகலைத் தொடர்ந்து வருவது. 9. மானைப் போன்ற ஒரு காட்டு மிருகம். 10. புத்த மதத்தினரின் ஆலயம்.
11. தலைமுடியை வெட்டாமல் .......... வேண்டும்.
12. பதியம் போடுவதால் தனியாக முளைத்துவரும் செடி. 14. இன்றைக்கு ஜனவரி மாதம் எத்தனையாம் .....? 15. 'நீள' என்பதற்கு எதிர்ச்சொல்.
17. உலகம்.

### மேலிருந்து கீழ்


1. செயல்களைச் செய்வதில் ஒருவருக்குள்ள திறமை அல்லது சாமர்த்தியம். 2. பிழை - தவறு. 3. தம்பதி. 4. பருக்கை வடிவ கல். 5. மெல்லிய சிவப்பு நிறத் தோல் மூடிய சற்றே உருண்டையான தானியம். 8. கீழ்த்தரமான அல்லது தீய குணமுடையவன். 9. பொதுவாக நீரில் செல்லும் மரத்தாலான போக்குவரத்துச் சாதனம்.
12. இரு கால்களும் அலகும் பறப்பதற்கு ஏற்ற சிறகும் கொண்ட உயிரினம். 13. நல்லது கெட்டது என்று அறிந்து செயல்படுகிற தன்மை - அறிவு (குழம்பியுள்ளது).

### கீழிருந்து மேல்

16. தானியப் பயிர்களில் மணிகள் உள்ள மேல் பகுதி. 18. கறுப்பு நிறமானது.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி' 85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

### சொற்சிலம்பம் போட்டி இல.449



### பரிசு பெறுவோர்

01. வி.செல்வநாயகம், சிவன் கோவில் வீதி, புத்தூர்.
02. திருமதி ராஜினி புண்ணியமூர்த்தி, இல - 36 புகையிரத நிலைய வீதி, மட்டக்களப்பு.
03. எஸ்.ரஞ்சினி, 24.தாமரைக்கேணி வீதி, மட்டக்களப்பு.

### பாராட்டுப் பெறுவோர்

1. திருமதி சந்திரா ரவீந்திரன், ஹட்டன்.
2. எஸ்.ஷிபானா, சம்மாந்துறை.
3. திருமதி.மணிமேகலை வரதராஜன், கல்லடி.
4. என்.துஷ்யந்தினி, கல்முனை.
5. இந்துமதி வடிவேல், செங்கலடி.
6. ஏ.பி.எம்.இர்ஷாத், பாலமுனை - 04.
7. பி.எப்.இ.புனிதா, காவத்தை.
8. ஜீ.சத்தியபாரதி, வத்துகாமம்.
9. பு.ஜேசுரத்தினம், தெகிவளை.
10. சி.பாலசுந்தரம், சண்டிலிப்பாய்.
11. எஸ்.ரஞ்சினி, மட்டக்களப்பு.
12. வி.தனபாலசிங்கம், சாவகச்சேரி.




வை.எஸ்.காந்தி,
வத்தளை.

**கேள்வி:** சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் நல்லிணக்க ஆணைக் குழுவைச் சாடுகின்றனவே?

**பதில்:** அவர்கள் சாடுவதில் நியாயம் இருப்பதாகவே தோன்றுகிறது. அவர்களின் கூற்றுப்படி, யுத்தம் பற்றி பக்கச் சார்பன்றி விசாரணை செய்ய இந்தக் குழுவுக்கு அதிகாரமோ அருகதையோ இல்லை என்று அவை வெளிப்படையாகவே சாடியிருக்கின்றன. குற்றம் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் தரப்பு விசாரணயில் இறங்கினால் முடிவு எப்படி என்று சொல்லத் தேவையில்லையே. ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் கிடப்பில் போடப்படுவதுதான் வழமை என்பது மற்றோர் உண்மை.

அ.திருநாவுக்கரசு,
நுவரெலியா.

**கேள்வி:** உலகில் கவலை இல்லாத மனிதர்கள் யார்?

**பதில்:** இருவகை மனிதர்கள் கவலையே படுவதில்லை. முதலாமவன் பற்றற்றவன். அடுத்தவன் பருத்த பேர்ஸ் உள்ளவன். முதலாமவனைப் பற்றிச் சொல்வதற்கு எதுவுமே இல்லை. இரண்டாமவனோ பணத்தால் கவலைகளை ஒழித்து விடுவான்.

எஸ்.அருளானந்தம்,
தம்பலுவில்.

**கேள்வி:** சட்டம் எப்போது இருட்டறையாகிறது?

**பதில்:** சட்டத்தரணிகள் எதிர்த் தரப்பிடம் சோரம் போகும் போது... நாட்டுத் தலைவர் நீதிபதிகளின் தீர்ப்பில் மூக்கை நுழைத்து மாற்றும் போது... நீதியரசர்கள் நிதிக்கு மயங்கி பல் இளிக்கும் போது.

பாண்டியூர்ப் பாவலன்,
கல்முனை.

**கேள்வி:** நம் நாட்டில் என்னதான் யுத்தம் நடந்தாலும், உணவுப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாதிருக்கிறதே?

**பதில்:** ஆட்சியாளரின் மயக்கமும், குழப்பமும் சோற்றுப் பீங்கானில் மண்ணைப் போட்டுவிட்டது. பசியைப் போக்கவேண்டிய பணம் காற்றால் அடித்துச் செல்லப்பட்டு எங்கெங்கோ எதற்காகவோ விழுகிறது. பட்டினி வயிற்றால் குற்றுயிராய்த் துடிக்கும் மக்களுக்கு புதிதாகச் சாக்குப் போக்குகள் தேடிக் கூறவேண்டிய சிரமத்துக்கு அரசாங்கம் உள்ளாகியிருக்கிறது.

நிஷா,
மாங்குளம்.

**கேள்வி:** பித்தா, சினிமா நடிகையாவது சிரமமான காரியமா?

**பதில்:** 'வளைந்துகொடுக்க'த் தெரியாதவர்களுக்குச் சிரமம் தான். அந்த நரகக் குழிக்குள் ஏன் போய் விழ வேண்டும்?

எஸ.பி.மஞ்சுளா,
கிண்ணியா.

**கேள்வி:** இன்றைய டியூஷன் வகுப்புகளின் நோக்கங்களில் காதலர்களை உருவாக்குவதும் ஒன்று போல் தோன்றுகிறதே?

**பதில்:** காதல் உருவாகக்கூடிய சூழ்நிலைகள் டியூஷன் வகுப்புகளில் நிறைய உண்டு என்பதில் இரண்டு கருத்துகளுக்கு இடமில்லை. ஆனால், அவை காசே தான் கடவுளப்பா என்ற தாரக மந்திரத்தில் நம்பிக்கை கொண்டவை. காசு வருவதாக இருந்தால் அவற்றின் கடைக்கண் பார்வை காதலிக்க வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் திரும்பக்கூடும்.

தயான்,
யாழ்ப்பாணம்.

**கேள்வி:** காதலர்கள் கடற்கரையோரங்களில் ஒருவரோடொருவர் ஒட்டி நின்று என்ன பார்க்கின்றார்கள்?

**பதில்:** முகத்தில் முகம் பார்க்கலாம் விரல் நகத்தில் பவளத்தின் நிறம் பார்க்கலாம் என்று பாடிய கவிஞரின் கூற்று உண்மையானதா என்ற ஆராய்ச்சியிலும் ஈடுபட்டிருக்கலாமே.

சதீஸ்,
வவுனியா.

**கேள்வி:** இற்றுப்போன சுவாரஸ்யமான கிராமத்துப் பழமொழி ஒன்று சொல்வீர்களா?

**பதில்:** மிகச் சமீப காலத்தில் வாசித்த ஒரு பழமொழியைக் கீழே தருகிறேன் - "அண்ணன் எப்போது சாவான், திண்ணை எப்போது காலியாகும்?"

மாதவி,
கொட்டாஞ்சேனை.

**கேள்வி:** சினிமாப் படத் தயாரிப்பாளர்களுக்கு நீங்கள் கூறும் புத்திமதி என்ன?

**பதில்:** பண ஆசையையும் மக்களின் ஒழுக்க உணர்வையும் தராசில் நிறுத்துப் பார்த்தா படத் தயாரிப்பாளர்கள் நடந்துகொள்கிறார்கள்? பணத்தைச் சம்பாதித்துக் கொள்ளட்டும்! சமூகத்தையும் உருப்பட விடட்டும்!

ஆர்.பாரதி,
கல்மடு.

**கேள்வி:** "ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கலியாணம் செய்" என்று முன்னோர்கள் சொன்னதன் மர்மம் என்ன?

**பதில்:** முன்னோர்கள் அப்படிச் சொல்லவில்லை. உங்கள் காது தவறு செய்திருக்கிறது. "ஆயிரம் முறை பொய்ச் சொல்லியாவது ஒரு கலியாணம் செய்" என்பது தான் சரியானது.

தர்மலிங்கம்,
அச்சுவேலி.

**கேள்வி:** பித்தரே, ஜப்பானியர்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் என்ன?

**பதில்:** அவர்களைப் போன்று வளவள வென்று பேசாமல் இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.


நிர்மலன்,
வெள்ளவத்தை.

**கேள்வி:** பித்தரே, ஒரு கடிஜோக் ப்ளீஸ்.

**பதில்:** இரண்டு நாய்கள் தமது எஜமானைப் பற்றிப் பின்வருமாறு நினைத்துக் கொண்டனவாம்.

முதல் நாய்: என்னுடைய எஜமான் என்னை நன்றாகக் கவனித்துக் கொள்கிறார். நேரத்துக்குச் சாப்பாடு போடுகிறார். என்னைக் கட்டியணைத்துக் கொள்கிறார். அவர் தான் கடவுளாக இருப்பாரோ?

இரண்டாவது நாய்: என்னுடைய எஜமான் என்னை நன்றாகக் கவனித்துக் கொள்கிறார். நேரத்துக்குச் சாப்பாடு போடுகிறார். என்னைக் கட்டியணைத்துக் கொள்கிறார். நான் தான் அவருக்குக் கடவுளோ?



# தலைவர்களே! விழிப்புடன்....

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

அநியாயம் புரிந்துள்ளன என்பதை உணர்ந்துகொள்ளும்.

இறுதிப் போருக்கு முன் வன்னியைச் சுற்றிப் பார்த்தவர்கள் தற்போது வன்னியைப் பார்க்க முடியுமாயின் அழிவின் எண்ணிக்கையை யூகித்துக்கொள்ள முடியும்.

பனையாலே விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல மீள்குடியேற்றப்பட்ட மக்கள் உருப்படியான குடிமனைக்கும் வாழ்வாதாரத்துக்கும் ஏங்கிக்கொண்டிருந்த நிலையில் மாரியும் தனது கோரக் கொடுமையைச் செய்துமுடித்து விட்டது. யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவுகளிலும், இழப்புக்களிலும் இருந்து மீண்டெழும்ப முடியாது தத்தளித்துக்கொண்டிருந்த அப்பாவி மக்கள் மழை வெள்ளத்தினால் எல்லாவற்றையும் பூரணமாக இழந்து செய்வதறியாது கலங்கிக்கொண்டிருக்கின்றனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தென்பகுதி மக்களுக்குச் சகல உதவிகளும், நிவாரணங்களும் தங்குதடையின்றிச் சென்றடைகின்ற வேளையில் எம் மக்களுக்கு எமது நாடாளுமன்ற உறுப்பினர்களால்கூட உதவமுடியாமல் இருப்பது வேதனையளிப்பதாக உள்ளது.

எமது மக்கள் இவ்வளவு சொல்லொணாத் துன்பங்களைச் சுமந்து வேதனைக் கடலில் மூழ்கிக்கொண்டிருக்கும் வேளையில் எமது தலைவர்கள் எனப்படுவோர் சிந்தித்துச் செயற்படுவதாகத் தெரியவில்லை. அறுபது ஆண்டுகால அனுபவங்களைப் படிப்பினை யாகக் கொண்டு ஒரு தீர்க்கமான முடிவெடுத்து மக்களை வழி நடத்தமுடியாது திணறிக்கொண் டிருக்கிறார்கள்.

முப்பத்தையாயிரத்துக்கு மேற்பட்ட போராளிகளையும், ஒன்றரை இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களையும் காவுகொடுத்து, கோடிக்கணக்கான சொத்துக்களையும் இழந்த நிலையில் மக்கள் திண்டாடிக் கொண்டிருக்கும்போது தலைவர்கள் ஓர்மமும் - உறுதியும் அற்றவர்களாகக் காட்சியளிப்பது கவலைக்குரியது.

தமிழ் மக்கள் இன்று தீண்டத்தகாதவர்களாகவும், அடிமைகளாகவும் ஆட்சியாளரால் கணிக்கப்பட்டிருக்கும்போது தமிழ்த் தலைவர்கள் ஒன்றுபட்டு ஒரு பலத்த அமைப்பாக இயங்குவதை விடுத்து அரசுடன் இணைந்துள்ளவர்களுடன் கூட்டுச்சேர்ந்து தம்மைத் தெரிவு செய்த மக்களுக்குத் துரோகம் இழைக்கப் பார்க்கிறார்கள்.

அரசுடன் இரண்டறக் கலந்து செயற்படுபவர்களின் கருத்துக்கள் தமிழ்மக்களின் எதிர்காலத்தை இருட்டுக்குள் தள்ளிவிடும் வகையில் அமைந்துள்ளதை விவேகமும், தன்மானமும், சுயமரியாதையுமுள்ள எந்தத் தமிழனும் இலகுவில் புரிந்துகொள்ள முடியும். அரசுடன் இணையாது வெளியே நிற்கும் அனைத்துத் தலைவர்களும் கட்சி வேறுபா டின்றி, ஒன்றிணைந்து மக்களை வழிநடத்த முயல்வதே விவேகமும் - நன்மையும் பயக்கக்கூடிய செயலாகும்.

அரசும் அரசோடு இணைந்துள்ளவர்களும் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை மையமாக வைத்தே செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் அவர்களின் பேச்சுக்களில் இருந்தும், செயல்களிலிருந்தும் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. வடக்கில் படையினர் மக்களிடையே ஊடுருவிச் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். மக்கள் அச்சத்துடனேயே வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

மலையக, முஸ்லிம் தலைவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கைகோத்து, தமிழ்பேசும் மக்களை வழிநடத்தக்கூடிய நிலை பூரணமாய் அற்றுவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்கள் ஆதரவைப் பெறமுடியாத வகையில், அதிகார வர்க்கம் தனது செயற்பாடுகளை முடுக்கிவிட்டுள்ளது.

வன்னியில் போரினால் வாழ்விழந்து அழிந்துகொண்டிருக்கும் மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்கு அரசு அக்கறை எடுப்பதாகத் தெரியவில்லை. வடக்கு மக்களைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துகொண்டிருக்கிறது.

பிச்சைக்குக் கைநீட்டிக் கொண்டிருக்கும் குடாநாட்டு மக்கள், படையினரின் கட்டுப்பாட்டுக்குள் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கின்றனர். மக்களிடையே படையினர் உறவினரைப்போன்று இரண்டறக் கலந்து தமிழ் மக்களின் இன உணர்வுகளையும், சுதந்திர வேட்கையையும் சின்னாபின்னப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள். கூட்டமைப்பினரின் வெற்றிக்காக நாங்கள் மேற்கொண்ட முயற்சிகள், பிரயத்தனங்கள் கொஞ்சநஞ்சமல்ல. கடந்த நாடாளுமன்ற காலத்தில் புலிகள் இருக்கும்போது ஒன்றாக உண்டு, உறங்கியவர்கள் நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் கூட்டுடைந்து வெடித்துச்சிதறி ஒருவருக்கொருவர் குழிபறிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டபோதும் தமிழ் அபிமானிகளும், புத்திஜீவிகளும், தேசபிதாக்களும் ஒன்றுதிரண்டு மேற்கொண்ட பிரயத்தனங்களினால் பதின்நான்கு உறுப்பினராவது தேறினர்.

அரசு சூழ்ச்சிகரமான திட்டங்களை முன்யோசனையுடன் செயற்படுத்திவரும் இவ்வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மிக விழிப்புடனும், விவேகத்துடனும், சுறுசுறுப்புடனும் செயற்படவேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

கூட்டமைப்பினர் அரசுக்கு வெளியே உள்ள சகல கட்சித் தலைவர்களையும், தேச பிதாக்கள், புத்திஜீவிகளையும் ஒன்றிணைத்து ஒரு பலமுள்ள அமைப்பை உருவாக்கி அதன் மூலம் கட்சி வேறுபாடின்றி இளைஞர்கள், யுவதிகளை உள்வாங்கி உள்ளூராட்சித் தேர்தலுக்கு மக்களைத் தயார்செய்யும் முயற்சியில் உடனடியாக ஈடுபடவேண்டும்.

இதேநேரம் இந்த அமைப்பினர் அரசுடன் இணையாத- இனப்பற்றுள்ள முஸ்லிம், மலையகத் தலைவர்களையும் உள்வாங்கி தமிழ்பேசும் மக்களின் உறுதியான-இறுக்கமான அமைப்பாக உள்ளூராட்சித் தேர்தலில் அரசு சார்பு வேட்பாளர்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையில் அந்தரங்க செயல் திட்டங்களை முன்னெடுக்க வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

அரசுடன் இணைந்து செயற்படும் தமிழர் தலைவர்கள் தமிழ் மக்களின் மீட்சிக்கோ, இன விடுதலைக்கோ எவ்வகையிலும் உதவமாட்டார்கள். குந்தகம் விளைவிப்பவர்களாகவே இருப்பார்கள். ஏனெனில், இணக்க அரசியல் என்பது சரணாகதி அரசியலே அன்றி வேறல்ல.

எமது மக்களின் உயிர்களைப் பறித்தவர்கள், எண்பதாயிரம் பெண்களை விதவைகளாக்கியவர்கள், குடிமக்களை அழித்தவர்கள். தேசிய சொத்துக்களை நிர்மூலமாக்கியவர்கள் இன்று கூடாரங்களிலும் - வீதியோரங்களிலும் வாழ வழியற்றுத் தவித்துக்கொண்டிருக்கும் மக்களுக்கு வாழ்வழிக்க வேண்டியவர்களே. அது இவர்களது கடமையல்லவா? அபிவிருத்தி, அபிவிருத்தி என்று கூறி கோடிக்கணக்கான நிதியைப் பல வழிகளிலும் செலவழித்துக் கொண்டிருப்பவர்கள், எம் மக்களின் மீள்குடியேற்றத் துக்கு நிதி இல்லை என்று கையை விரிக்கிறார்கள்.

இந்த நேரத்தில் மக்களால் தெரிவுசெய்யப்பட்டால் என்ன? தெரிவுசெய்யப்படாவிட்டால் என்ன? எல்லாக் கட்சித் தலைவர்களும் மக்களுடன் இரண்டறக் கலந்து ஒரே சிந்தனையாளர்களாக, தங்களின் நன்மனமான, உறுதியான, அச்சமற்ற, தயக்கமற்ற அர்ப்பணிப்புச் சேவையை மக்களுக்கு வழங்கவேண்டும். இதன் மூலம் பிராந்திய, உலக வல்லரசுகளால் இறைசித்தத்துக்கும், நீதிக்கும் விரோதமாக வடக்கு-கிழக்கில் உள்ள சிறுபான்மைத் தமிழ் -முஸ்லிம்களான அபலைகள் மேல் சுமத்தப்பட்டிருக்கும் பாரச் சிலுவையைச் சுமக்கத் தயாராவதே இந்த இறுதிநேரக் கடமையாகும்.

எங்கள் மக்களை ஏதிலிகளாக்கி பிச்சைக்குக் கைநீட்டும் நிலையைச் சிருட்டித்து வைத்துள்ள பெருமை முக்கியமாக இந்தியாவையே சாரும். ஏழு கோடி மக்களைக் கொண்டுள்ள தமிழ்நாட்டு மக்களின் நலனில் அக்கறை காட்டத் தயங்கும் மத்திய அரசு ஈழத்தமிழருக்கு நல்லது செய்யுமென நம்பித்திரிந்த எமது தலைவர்கள் ஏமாற்றப்பட்டுவிட்டதை இனி யாவது ஏற்றுக்கொள்வார்களா? கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா? கடந்தகால அனுபவங்களில் இருந்து பாடம் கற்றுக்கொள்ளத் தவறியதாலேயே எங்களுக்கு இந்த நிலைமை ஏற்பட்டது.

அச்சம் சூழ்ந்துள்ள நிலையில் பிச்சைக்குக் கைநீட்டிக்கொண்டிருக்கும் எமது மக்களின் உரிமைக் குரலுக்கு ஒத்துழைக்கும் சூழ்நிலை சின்னாபின்னப்படுத்தப்பட்டுக்கொண்டு இருக்கிறது. தலைவர்களே! மக்களே! ஓர் அணியில் திரளுங்கள். இனத்தைக் காப்பாற்ற காலத்தின் தேவை இது. உறுதியான திட்டங்களுடன் களமிறங்குங்கள். ✱

# மானத்தை விலைபேசும் ...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடயம் என்னவெனில் இந்த ஷோவுக்கு ஷபீனாவை அழைத்து வர முதலே அவபற்றிய விவரங்களை திரட்டியிருக்கின்றனர். அதுமட்டுமல்ல ஷபீனாவுக்கும் பாரூக்குக்குமிடையில் செக்ஸ் தொடர்பு இருப்பதனையும் கண்டுபிடித்தது புறோக்கிறாம் குழு.

அதே கையோடு ஷபீனாவின் வீட்டில் அவர்களுக்கு தெரியாமல் இரகசியமாகக் கமெரா ஒன்றையும் பொருத்தி விட்டனர். அந்தக் கமெரா மூலம் பாரூக்கினதும் ஷபீனாவினதும் நடமாட்டத்தை கண்காணிக்க தொடங்கியது புறோக்கிராம் குழு. பின்னர் அவர்கள் இருவரும் கமெராவில் சிக்கிய பிறகுதான் அவர்கள் எல்லோரையும் ஷோவுக்காக ஒழுங்குபடுத்தியிருந்தனர்.

பார்க்கிறவர்களுக்கு குஷியை ஏற்படுத்திவிட்டு ஒரு குடும்பத்தை குலைத்து விட்டனர். பாரூக்-ஷபீனா இருவரும் முத்தமிடும் காட்சியை பார்த்த ஸ்ரூடியோவில் இருந்த பார்வையாளர்கள், ஷபீனாவின் சகோதரிகள் பாய்ந்து வந்து பாரூக்குக்கு அடிக்கிறார்கள்.

தயார் நிலையில் இருந்த செக்கியூரிட்டிகள் ஓடிவந்த அவர்கள் இருவரையும் அடிபடாமல் காப்பாற்றுகிறார்கள்.

இப்பொழுது விடயம் இமாஜின் டிவிக்கு ஒரு ஷோ கிடைத்து விட்ட மகிழ்ச்சி. ஆனால், இப்பொழுது இரண்டு குடும்பங்கள் பிரிந்துவிட்டன.

ஒன்று பாரூக்கின் 4 பிள்ளைகள் கொண்ட குடும்பம். ஷபீனாவின் சகோதரிகள் ஏற்கனவே ஷபீனாவோடு கோபம். இப்பொழுது பரம வைரியாக மாறிவிட்டது.

இதனைத் தான் அத்து மீறல் என்கிறேன். படுக்கை அறைக்குள் கமெராவை பொருத்தும் அதிகாரத்தை யார் இமாஜின் டிவி காரருக்கு கொடுத்தது? எவ்வளவு பெரிய சீரழிவு.

இங்கு பிரிட்டனில் இப்படியான குடும்பம் தொடர்பான பிரச்சினைகள் வருகின்ற றியலிட்டி ஷோக்கள் நடக்கின்றன.

பிறசன்டர் ஒரு அறிவாளியாக நடந்து கொள்வார். எப்படி பிரச்சினைக்குரிய இரண்டு தரப்பாரையும் ஒன்று சேர்ப்பது என்பதுதான் அவரின் நோக்கமாக இருக்கும்.

ஆனால், ராக்கி பிரச்சினைக்குரிய இரண்டு தரப்பில் ஒருவருக்கு பக்கச்சார்பாக நடந்து கொள்கிறார். இது பார்ப்பதற்கு எரிச்சலாக இருக்கிறது.

மனிதரின் பிரச்சினை மற்றும் செக்ஸ் வாழ்க்கையை வைத்து கூவி விற்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தான் டில்லி, மும்பையை ஆக்கிரமித்து நிற்கின்றன.

சமூக அக்கறையுள்ளவர்கள் சேர்ந்து 'பிக் பொஸ்' நிகழ்ச்சியும் 'ராக்கி கா இன்சாப்'' நிகழ்ச்சியும் மாலை வேளைகளில் போடப்படுவதால் சின்ன பிள்ளைகள் டி.வியை பார்த்து உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, இரவு 10 மணிக்கு பிறகு போடவேண்டும் என்று வழக்கு போட்டார்கள்.

ஆனால், டி.வி ஸ்டேசன்களோ ''இல்லை இல்லை இந்த நேரத்தை சொல்லித்தான் மில்லியன் கணக்கில் விளம்பரதாரர்களுக்கு, நேரத்தை விற்று விட்டோம் ஒன்றும் செய்ய முடியாது'' என்று கையை விரித்தன.

நீதிமன்றமும் இந்த ஷோக்களுக்கு தடை விதிக்கவில்லை. ஏனெனில், டிவி நிலையத்தாருக்கு பெரும் நஷ்டமாம்.

எனவே குடும்பங்கள் இன்னும் குலைவது உறுதியாகி விட்டது.

அத்துமீறிய டிவியின் மோகம், பணத்தின் மோகம் என்பவை குடும்பங்களின் பிளவுக்கு பேராபத்தாக இருக்கின்றன. இது பெரும் துரதிஷ்டம்தான். எதிர்காலம் இன்னும் நெருக்கடிக்கு உள்ளாகுமே தவிர, இவை தீரப்போகிற பிரச்சினையே அல்ல என்பது தெளிவாகத் தெரிகிறது.

மனிதர்களின் மானம் தான் விற்பனைப் பொருளாக இருக்கும். இனிமேல் சந்தை வேறென்ன டி.விதான். ★

# கவிதைப் புனல்

## எனக்கு வரவில்லை!

வானமொழி ஈரமொழி பேசுகிற போது
வாசநெடி மண்மடியில் பூசுவது யாரு?
மேனகைபோல் நர்த்தனமும் ஆடுதுபார் நாற்று
வெள்ளிமழை நெல்லினையே விதைக்கிறது காற்று!

சோவென்றே இரைந்துசிறு சாரல்ஜதி போடும்
சூறையது ஆலமர வேரில்கிளைக் கிண்டும்
சதல்நடை போடும்;இடி கட்டியமும் கூறும்
குறண்டுகிறேன் நான்ஒதுங்க இல்லையிடம் யாரும்!

ஐயாயிரம் எனக்கின்னும் வந்துசேர வில்லை
அழிவென்று பதிந்தவர்பின் பார்க்கவர வில்லை
மெய்வதங்கி இருவருஷம் மீட்சியேதும் இல்லை
வெளிநாட்டுத் தறப்பாளும் ஏன்எனக்கு இல்லை?

தீர்வெரும்; கரைவரும்; ஓடுவரும்...நம்பி
தெப்பமெனத் தேய்ந்ததுதான் மிச்சம்அட தம்பி
மாரியிடம் கேட்ட முதே இரங்கென்று வெம்பி
வாய்கிடுக்கப் பாடுகிறேன் வரம்வருமென் றேங்கி!

- அருணன் -

## சொல்லாமற் சென்ற செருப்பு

கண்களால் காட்சியைப் பார்க்க-சிறு
காவலாய்க் காலணி வாசலில் சுற்றி
உண்முகஞ் செல்லுதி என்றான்-தூசு
உண்மையில் கணனிக்கு [illegible]றான்!

காலதன் பாதணி அங்கு-பலர்
காணவே நீக்குதல் கண்டு அன்னார்
போலவே நாங்களும் செய்வோம்-வெளிப்
போகையில் காலிலே மீளவே செய்வோம்.

நன்றது உள்முகக் காட்சி கணனி
நல்லதே செய்யுது கண்களே சாட்சி
கொன்றது ஐஸ்வர்யாக் கண்கள்-திரையில்
கோலமாய் ஆடுதே. தோற்றனர் ஆண்கள்!

விளக்குங்கள் கணனிக்குப் பலதாய்ப் வேலை
வேகமாய்ச் செய்யுதே அழகாக அந்த
முழக்கங்கள் தனியவே வேறு பெரிய
முனைப்புகள் இலையெனும் பிசின்எனக் கூறு!

வாயினைப் பிளந்தோம் பார்த்து-பல
வாழ்வுகள் கூறிடும் கணனியால் ஈர்த்து
ஆய்கையில் திகதியை வைத்து-அங்கு
அத்தனை சொல்லுதே. அதன்கலை மெச்சு!

ஐந்துரை ஆச்சுதே தம்பி-நேரம்
ஆறடா. இலங்கையில் இப்போது தம்பி
அன்புடன் வாரும்நீர் வெளியே-நாளை
ஆருமே பார்க்கலாம். அதுவரை தனியே!

வந்துநாம் வாசலைப் பார்த்தோம்-புதிதாய்
வாங்கிய காலணி; காணலை வேர்த்தோம்
எந்தையே என்ரையைக் காணம்-அப்போ
எங்குதான் தேடுவம். போகுதே மானம்!

மிஞ்சுதே பழசெனும் பட்டா-பாத்தும்
மிதுதான் போடலாம். தேய்ந்த பாட்டா!
அஞ்சினேன். ஐயகோ என்ரை-செழுனி
ஆர்கொண்டு போனாலும் உடையுமே மண்டை!

போனவர் போயினர் தப்பி-நீங்கள்
போடுங்கோ பாட்டாவை மனதுநி றப்பி
காணலே இல்லையென் றில்லை-இந்தக்
களவுதான் நாட்டிலே மாபெரும் தொல்லை!

சொன்னவர் லெக்சரர் அவரை-ஏற்றுச்
சொருகினம். காலில்தேய் ரபரை
சிதைக்குமே விறகினைத் திருடும்-உலகில்
செருப்பினை எடுத்தவன் திருந்துதல் அரிதே!

- சி. குருபரன் -

## நீள் பயணம்!

அவசரமாய் பாரதி இந்த
அவனிக்கு இறங்கி வந்தான்
உபத்திரம் செய்ய வென்று
ஊருக்குள் வந்து சேர்ந்தான்!

வீட்டுக்கு வந்த அவனை
விருந்துடன் காது உடனே
கூட்டியே சென்று முகாமில்-பெயர்
கொடுத்துத்தான் பதிந்து வைத்தேன்!

அடையாள அட்டை இன்றி
அதுபற்றி அறிவும் இன்றி
கடையிலே கிடைக்கும் எனவே
காசுக்கு வாங்கு என்றான்!

சைக்கிளில் பெண்ணைக் கண்டு
சரியான வளர்ச்சி என்றான்
கைக்கிளை உண்டோ என்றான்-சிலர்
காதலைக் கண்டு திகைத்தான்!

தலைமயிர் குறைந்த பெண்ணை
தம்பியென் றழைத்து வைத்தான்
குலைந்திடாக் கொண்டை கண்டு
குறும்புகள் செய்ய நின்றான்!

கவிதைகள் ஏதும் சொல்க-என்று
கழுத்தினை அறுத்துக் கொண்டான்
கவிதைகள் என்று கொடுத்தேன்-அவை
கவிதைகள் இலையோ என்றான்!?

படிப்பினைப் பற்றிச் சொன்னான்
பறவைகள் பற்றிச் சொன்னான்-நீ
துடித்திட வேண்டாம் செய்க
துடிப்புடன் செயல்கள் என்றான்!

ஊரடங்கு நேரம் பார்த்து
உலவவே வெளியில் சென்றான்
தீரனாய் வாழ்வேன் என்றான்-துவக்குச்
சூட்டிலே செத்துப் போனான்!

- கி. வாயுபுத்திரன் -

## குறிஞ்சிக் கோவில்கள்

### மாத்தளை ஸ்ரீ அருள்மாரி

வாழைகள் செழிப்பு; செந்நெல்
வயல்களில் கொழிப்பு; ஓடை
தாமரைகள் சிரிப்பு; தென்னங்
கீற்றுகள் ஒலிப்பு; ஊரில்
ஏழைகள், செல்வர் நாடி
ஏத்திடும் மாரி கோயில்!
கீழைவான் கதிரோன் காலை
சேவிக்கும் சிற்ப வாயில்!

சீர்தமிழ்த் தொண்டு ஊரில்
சிறந்திடும்; பொலியும் எங்கும்
ஊர்சூழும் கராம்பு, ஏலம்
உயர்கொக்கோ, மிளகு, கோப்பி!
பார்புகழ் அம்மை கோயில்
பாதையின் அருகில்! பஞ்ச
தேர்த்திகழ் பவனி கண்டு
தரிசிக்கும் மக்கள் வெள்ளம்!

காசினி காக்கு மம்மை
கருணைத்தாய்; விழாவோ ஆண்டில்
மாசியில்! மக்கள் வெள்ளம்
மாத்தளை நகரை மூடும்
கூசிடும் கண்கள் வீசும்
குமிழ்களின் ஒளியால்; நாடு
பேசிடும் அம்மை கீர்த்தி
பெருவிழா சிறக்கு மென்றும்!

கவர்ச்சிக்குப் பொய்கை; ஓங்கும்
கமுகுகள், பலா,மா எங்கும்!
வளர்ச்சிக்குச் சமூகம் நல்லோர்
மாத்தளை யூரில் பங்கு!
மலர்ச்சிக்கு ஆக்கப் பூக்கள்
கலைஞர்கள், கவிஞர் தொண்டு!
உயர்ச்சிக்குச் சைவம், கோயில்
சபைப்பணி; களிப்பு மக்கள்!

- கவிஞர் ஸி. எஸ். காந்தி -

## தீர்வுரிமை தடுத்தெரியும் தீ

பயங்கரத்தை உச்சரித்துப் பயங்கரத்தால் பாழுறந்தும்
பயங்கரத்தை வவ்விடத்தில் பகிர்ந்துரைப்போம்-பயங்கரமே
ஊர்உலகை நீதிவழி உணர்வுபெறா துறந்திடும்
தீர்வுரிமை தடுத்தெரியும் தீ.

## மாண்டழிய விடுதலென்ன மதி

சுதந்திரத்தைத் தமதாக்கிச் சுகங்கண்ட பேர்களிங்கே
விதந்துரைக்கும் ஒற்றுமைக்கு விளக்குமுண்டோ-இதந்தரவே
ஆண்டமதி மக்களுரித் தழகுநிலத் தடிமைகளாய்
மாண்டழிய விடுதலென்ன மதி.

## களைந்ததெவர் பயங்கரமோ? காண்

அளப்பரிக் குழப்பியவர் ஆள்பலத்தை வெல்வதற்கு
இளப்பங்கண் டேமாற்றி இன்பமுற்றார்-களப்பேரோ
விளைந்ததற்காம் காரணத்தை விரைந்தகற்ற எண்ணாமல்
களைந்ததெவர் பயங்கரமோ? காண்.

## காதையெலாம் யாமறிவோம் காண்

மூடிவைத்த பாதையிதால் மூண்ட துயர்க் கீடேது
ஆடிநின்ற ஆட்டமெல்லாம் ஆர்மறப்பார்-ஓடிவந்து
பாதையதைத் தாம்திறக்கும் பாசாங்குப் பறைசாற்றல்
காதையெலாம் யாமறிவோம் காண்.

- பொய் பொறுக்கான் -

## தாய்மண் மறந்த தகவிலாரே!

ஈழம் திரும்புநா ளேந்நாளோ சோதரரே!
ஆளுக் கொருநாடாய் அள்ளுண்ட-கோழைகளே!
பாழுக்கோ பெற்றெடுத்தாள் பாவிதமி ழீழத்தாய்
நாளை வருவீரோ நைந்து.

பீடுபெற வேண்டிப் பிறநாடு போந்தவரே
நாடு திரும்புநா ளேந்நாளோ!-கூடு
உடைந்த குளவி பறந்ததுபோ லோடிக்
குடைந்தெடுப்பீர் கோர எயிட்ஸ்.

பண்ட மனுப்பும் பலவித கொள்கலனுள்
மண்டை நுழைத்து முண்டம்போல்-அண்டவெளி
ஆகாய மாழிபல தாண்டிப் பறந்தவரே
நோகாப் பணமே நுமக்கு.

முகவர் பலருக்கு முந்தானை தான்விரித்து
அகமகிழ் வித்தவர் ஆசி-முகம்பெற்றுச்
சுகமாய் மறுகரை சேரவரம் பெற்ற
அகலிகை மாருமங் குண்டு.

பாய்க்கடை வைத்தேனும் பையை நிரப்பிடத்
தாய்மண் மறந்த தகவிலரே!-போயங்கு
சாக்கிடங்கு கிண்டுமோர் சங்கதி இங்கெமது
மூக்கை யறுப்பதைப் பார்!

ஆழி கடந்து அடுத்தகரை அண்டியும்
வேலையொரு கூழின்றி வேதனையால்-நாளும்
வெளிநாட்டுக் காசுக்கு வெம்பி வெதும்பிச்
சுழியோடித் தேடுகிறார் துட்டு.

- அங்குசன் -

# அக்பர் - பீர்பல் கதை

சித்திரக் கதைகள் திருத்திய வடிவமைப்பு: ஸியெம்மே அமீன்


01




02




03









# அரபு நாட்டுக் கதைகள்

ஒரு நாள் இரவு காதி ஒருவர் (முஸ்லிம் நீதிபதி) சின்னத்தலையும் நீண்ட தாடியும் உடையவன் மகா முட்டாள் என்று புத்தகம் ஒன்றில் வாசித்தார். காதியின் தலை சிறிதாகவும் தாடி நீண்டதாகவும் இருந்தது.



என்னுடைய தலையை என்றால் பெரிதாக்க முடியாது. ஆனால், தாடியைக் கட்டையாக்கிக் கொள்ள முடியுமே என்று அவர் நினைத்தார். காலையானதும் அம்பட்டையனைத் தேடி ஆளனுப்பினார். ஆனால், அம்பட்டையன் ஒருவனும் அகப்படவில்லை. அப்போது அவருக்கு ஓர் உபாயம் தோன்றியது. விளக்கைப் பற்றவைத்தார். பின்னர் அரைவாசி தாடியை தனது கையால் பிடித்து, அதனை எரிப்பதற்காக விளக்கின் மேல் பிடித்தார். தாடியில் தீப்பற்றிக்கொண்டது. கடுமையான நெருப்பு அவருடைய கையை நெருங்கி, கையைச் சுட்டதும் டக்கெனக் கையை எடுத்துவிட்டார். இதனால் அவருடைய முழுத்தாடியும் எரிந்துவிட்டது அத்தோடு அவருடைய முகமும் தீக்காயங்களுக்கு உள்ளானது.

இவ்வாறு சிறிய தலையும் மிக நீண்ட தாடியும் உடையவன் முட்டாள்தான் என்பதை அவரே நிரூபித்துவிட்டார்.

ஒருத்தி அடுத்த வீட்டுக்காரியோடு கடும் பகையோடு இருந்தாள். ஒரு நாள் இரவு அவள் மதுவெறியால் தன்னை மறந்து இருந்த நிலையில் தான் பெற்ற பிள்ளையையே கொன்றுவிட்டாள். மயக்கம் தெளிந்து அவளுக்குச் சுயநினைவு வந்ததும், அண்டை வீட்டுக்காரியை பழிவாங்க நினைத்து, இறந்த பிள்ளையை அவளுடைய முற்றத்தில் வீசிவிட்டு வந்தாள்.

காலையானதும் அண்டை வீட்டுக்காரி தன்னுடைய பிள்ளையைக் கொன்றுவிட்டதாகக் காதியிடம் புகார் தெரிவித்தாள். அத்தோடு, இறந்த பிள்ளையையும் காதியிடம் எடுத்துச் சென்றாள்.

இதைக் கண்ணுற்றதும் காதியின் உள்ளத்திலே ஓர் உபாயம் தோன்றியது. அவர் பக்கத்து வீட்டுப் பெண்ணை நீதிமன்றத்துக்கு அழைத்துவரச்செய்து அவளைத் தூரத்துக்குக் கூட்டிச் சென்று, ''நீ என் முன்னால் உனது உடை முழுவதையும் களைந்து நிர்வாணமாக நின்றால், நீ குற்றமற்றவள் என்று நான் விளங்கிக்கொள்வேன்'' என்றார். இதனைக் கேட்டு வெட்கத்தால் கூனிக்குறுகிய அவள், தன்னால் அவ்வாறு செய்ய முடியாது என்று பிடிவாதமாக் நின்றாள்.



பின்னர் காதி, குற்றம் சாட்டிய பெண்ணை அழைத்து, அவளிடமும் அவ்வாறே சொன்னார். அவள் உடனே ஆடைகளைக் களையத் தயாரானாள். இதிலிருந்து அவளே தன்னுடைய பிள்ளையைக் கொலை செய்திருக்கிறாள் என்று அவர் விளங்கிக் கொண்டார். அவளுக்குக் கசையடி கொடுக்குமாறு உத்தரவிட்டார் காதி. நான்கைந்து கசையடி விழுந்ததும், அவள் தன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டாள். அதன் பிறகு அவர் அவளுக்குத் தூக்குத் தண்டனை கொடுக்கப்பட வேண்டுமென்று தீர்ப்பளித்தார்.

## மனித உடலைப் பற்றி வியப்பூட்டும் விஷயங்கள்

* இருபத்தியொரு வயது முடிவதோடு உடலின் எல்லா உறுப்புகளின் வளர்ச்சியும் குறைய, கடைசிவரை தொடர்ந்து வளர்வது காது மட்டுந்தான். சின்னதாக, கொஞ்சமாக, உங்களால் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு.
* ஒரு சராசரி மனிதனின் உடலில் இருக்கும் உரோமங்களின் எண்ணிக்கை சுமார் ஐந்து லட்சம். தலைமுடி ஓர் அலுமினியக் கம்பிக்குச் சமம்.
* உடம்பிலேயே மிகவும் வலுவானது பல்லின் மீது இருக்கும் எனாமல் தான். இது யானைத் தந்தத்தைவிடப் பலமானது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.
* கை அசைவுக்கு 30 மூட்டுகளும் 50 தசைகளும் இயங்குகின்றன. நம்மை வாழ்நாள் முழுதும் தாங்கிநிற்கும் பாதம் சிறிதும் தேய்வதில்லை. இதயம் ஒரு நாளைக்குச் சுமார் ஒரு லட்சம் தடலை லப்...டப் செய்கிறது. அதாவது வருடத்துக்கு 4 கோடி தடவை. வாழ்நாள் முழுக்க... எவ்வளவு கோடி... கோடி தடவை!
* உங்கள் உடலிலே 4 அவுன்ஸ் சீனி, இரண்டு நீச்சல் தடாகங்களைச் சுத்தப்படுத்தக் கூடிய அளவு குளோரின், 3 இறாத்தல் கல்சியம், 20ஆயிரம் தீக்குச்சிகள் செய்யக்கூடிய அளவு பொஸ்பரஸ், 10 பார் ஸோப் செய்வதற்கான கொழுப்பு என்பன இருக்கின்றன. இரும்பு கொஞ்சம் குறைவு. இரண்டு அங்குல ஆணி ஒன்று செய்யலாம்.

## தேர்வுக்குறள்

தேர்வுக்குள் தேர்வு டிசம்பர் தேர்வு அத்தேர்வு
தேர்வுக்குள் எல்லாம் தலை.

பொருளும் அழகும் உடைத்தாயின் விடைத்தாள்
புகழும் மார்க்கும் பெறும்.

எழுதின் தெளிவோடு எழுதுக அஃதிலார்
எழுதலின் எழுதாமை நன்று.

படையில்லா மன்னன் போலக் கெடுமே
விடையில்லா மாணவன் தான்.

படித்தார் படியாதார் என்பது அவரவர்தம்
விடையால் காணப்படும்.

மணிக்குள் எழுத முடியாதார் பலகற்றும்
மதிப்பெண் மிக்கப் பெறார்.

பெயிலாவாய் என்றிருப்பினும் செய்யற்க
காப்பியடிக்கும் தொழில்

காப்பியடித்து பயனென்கொல் மாற்றாங்கே
தேர்வாளர் பிடித்து விடில்.

நன்கு எழுதுதல் தேர்ச்சிக்கு வித்தாகும் - பார்த்தெழுதல்
என்றும் துன்பம் தரும்.

தி. பேச்சிமுத்து

# விடுகதைகள்

## வினாக்கள்

01. ஓங்கி வளர்ந்தவள் பெற்றாள் ஓராயிரம் பிள்ளைகள். அவள் யார்?
02. ஓங்கி உதைத்தால் ஓடத்தயாராவான். அவன் யார்?
03. காயில் ஒட்டிக்கொண்டோம், பழத்தில் பிரிந்துபோனோம். நாங்கள் யார்?
04. கைக்கு அலங்காரம் கலகல சங்கீதம். அது என்ன?
05. மலையெல்லாம் தாண்டிப்போய் வானத்து ரோட்டில் ஏறி, இங்கிலீஷ் பள்ளிக்கூடம் படிக்கப்போகும் மனிதன் யார்?
06. சிலுசிலுத்த தண்ணீரில் செம்மறியாடு மேயுது. அது என்ன?
07. கூட்டுக்குள் குடியிருக்கும் குருவியல்ல. கொல்லப் பாயும் வேங்கையும் அல்ல. அது யார்?
08. தலையில் கிரீடம் உண்டு, அரசன் அல்ல; தளதளக்கும் மேனி உண்டு, குருவியல்ல. வீதிக்கு வருவதுண்டு. விரும்புவோர் பலருண்டு. அது யார்?
09. மதில் இல்லாத கோட்டைக்குள்ளே மண்டிக்கிடக்குதாம் செல்வம். உண்மை தெரிந்தவர் உணர்ந்திடுவார். ஒன்றும் தெரியாதவர் மயங்கிடுவார். அது என்ன?
10. அட்டைக்கு ஆயிரம் கண். முட்டைக்கு மூன்று கண். நான் வளர்த்த சிங்கக்குட்டிக்கு ஒரு கண்தான். அவை எவை?

## கடி ஜோக்

* **கணக்கு ஆசிரியர்:** ஆறில் பத்து போகுமா?

**பையன்:** போகும் சார்!

**க.ஆ:** எப்படி?

**பையன்:** எங்க வீடு ஆத்துக்குப் பக்கத்தில தான் சார் இருக்கு. தினம் எங்க அம்மா ஆத்திலதான் பத்து பாத்திரம் தேய்ப்பாங்க.

**க. ஆ:** ??????????

* **ஆசிரியர்:** ஏய் சோமு, ஒரு தடவை மணி அடிச்சா ராமசாமியும் ரெண்டு தடவை அடிச்சா நீயும் வரணும்-என்று சொல்லியிருக்கேன் இல்லையா? ரெண்டு தடவை மணி அடிச்சேன், ஏன் வரலை?

**சோமு:** ராமசாமியைத்தான் ரெண்டு தடவை கூப்பிட்டீங்க-என்று நெனச்சேன் சார்.

* **நேர்ஸ்:** டாக்டர், இரண்டு ஊசிபோட்டும் அவனுக்கு மயக்கம் வரலை.

**டாக்டர்:** ஊசியோட விலையைச் சொல்லு, மயங்கி விழுவார்.

* **ஆசிரியர்:** இரவில் நாய்க்குக் கண் தெரியுமா?

**மாணவன்:** எனக்குத் தெரியாது சார்.

**ஆசிரியர்:** உனக்குக் கண்தெரியுமா என்று கேட்கவில்லை, நாய்க்குத் தெரியுமா என்று தான் கேட்டேன்.

## விடைகள்

1. தென்னை-தேங்காய்கள்
2. மோட்டார் சைக்கிள்
3. புளியங்காய்-புளியம்பழம்
4. வளையல்
5. விமானம்
6. எண்ணெய்ப் பலகாரம்
7. அம்பு
8. கத்திரிக்காய்
9. மனக்கோட்டை
10. மாவரி, தேங்காய், ஊசி.




## முன்னணி நடிகர்களுடனேயே இனிமேல் நடிப்பேன் - அஞ்சலி

இதுவரை புதுமுக நாயகர்களுடன் மட்டுமே தொடர்ந்து நடித்து வந்த அஞ்சலி இனிமேல் பிரபலமான நாயகர்களுடன் மட்டுமே நடிக்க முடிவுசெய்திருக்கிறாராம்.

'கற்றது தமிழ்' என்ற படத்தின் மூலம் தமிழ் சினிமாவுக்கு வந்த தெலுங்குப் பெண் அஞ்சலி. முதல் படம் அவருக்கு நல்ல நடிகையாக அடையாளம் காட்டினாலும் கூட அவரால் முன்னணி நடிகையாக முடியவில்லை. ஆனால் 'அங்காடித் தெரு' படம் அவரை பெரிய அளவில் பெயர் வாங்கிக்கொடுத்தது.

தற்போது 'மகாராஜா' என்ற படத்தில் நடித்து வருகிறார் அஞ்சலி. இதில் 'மொடேன்' பெண்ணாக வருகிறாராம். இவரது வேடம் அனைவரையும் கவரும் என்கிறார் படத்தின் இயக்குநர் மனோகர். படத்தில் அஞ்சலிக்கு ஜோடி புதுமுகம் சத்யா. 'அங்காடித் தெரு' மூலம் கிடைத்த புகழைத் தக்க வைத்துக்கொள்ள கடுமையாக சிரமப்படுகிறாராம் அஞ்சலி. காரணம், அப்படத்திற்கு முன்பு அவர் ஒப்புக் கொண்ட சில சின்னப் படங்கள் என்கிறார்கள். அதில் புதுமுக நடிகர்கள், சில இயக்குநர்களுக்கு ஜோடியாக ஒப்பந்தமாகியிருந்தார் அஞ்சலி. அதிலிருந்து விலக முடியாத நிலையில் இருக்கிறார். அஞ்சலி தெரிவித்ததாவது,

"இனி வேறு புது அஞ்சலியை ரசிகர்கள் பார்க்கலாம். நடிப்புக்கும், கவர்ச்சிக்கும் சரியான முக்கியத்துவம் கொடுத்து நடிக்கப்போகிறேன். நல்ல கதை, முன்னணி நாயகர்களுடன் மட்டுமே ஜோடியாக நடிக்கவிருக்கிறேன் - என்று நம்பிக்கையோடு கூறுகிறார் அஞ்சலி.



## பருத்தி வீரன் போல் படம் வேண்டும் - ப்ரியாமணி

'பருத்தி வீரன்' மாதிரியான படமா... அய்யய்யோ வேண்டவே வேண்டாம். எனக்குக் கிளாமர் வேடங்கள் தான் வேண்டும் - என்று வெளிப்படையாக அறிவித்தவர் ப்ரியாமணி.

ஆனால், அந்தப் படம் ஒன்று மட்டும் தான் இவரது பெயர் சொல்லிக்கொள்ளும் அளவுக்கு, அமைந்த படம். ஏனைய படங்கள் எல்லாமே பெரிய அளவில் ஓடவில்லை.

'ராவணன்', 'ரத்த சரித்திரம்' போன்ற படங்களில் நடித்ததற்காக வருத்தப்படுகிறேன். இந்த மாதிரியான படங்களில் இனி நடிக்கமாட்டேன் 'பருத்திவீரன்' மாதிரியான இன்னொரு வாய்ப்பு வருமா? - என நெருக்கமானவர்களிடம் கூறிவருகிறாராம் ப்ரியா.

இதற்காக இயக்குநர் அமீரிடம் சென்று, இருமுறை பேசிவிட்டு வந்துள்ளார் ப்ரியாமணி.



## தற்போது கல்யாண ஆசை இல்லை - நீத்து சந்திரா

இப்போதைக்கு கல்யாணம் செய்து கொள்ளும் எண்ணம் நீத்து சந்திராவிடம் இல்லையாம். இதை சமீபத்தில் துபாயில் தன்னைச் சூழ்ந்து கொண்ட ரசிகர்களிடமே கூறிவிட்டு வந்துள்ளாராம். ஹிந்திக்கார நீத்து சந்திரா, 'நான் கடவுள்' படத்தின் மூலம் தமிழுக்கு வந்திருக்க வேண்டியவர். ஆனால் அந்தப்படத்தில் அவரால் நடிக்கமுடியாமல் போய்விட்டது. இருப்பினும் 'யாவரும் நலம்' படத்தின் மூலம் தமிழ் சினிமாவுக்கு வந்த அவருக்கு 'தீராத விளையாட்டுப் பிள்ளை' பெரும் அந்தஸ்தைக் கொடுத்தது. தற்போது 'ஆதி பகவன்' படத்தில் ஜெயம் ரவிக்கு ஜோடியாக நடித்துக்கொண்டிருக்கிறார்.

சமீபத்தில் இவர் துபாய்க்கு ஒரு நடன நிகழ்ச்சிக்காகப் போயிருந்தபோது, அங்கு பல ரசிகர்கள் சூழ்ந்து கொண்டு நீத்துவைப் பாராட்டித் தள்ளினாராம். சில ரசிகர்கள் உங்களைக் கல்யாணம் செய்து கொள்ள ஆசையாக இருப்பதாக கூற, எனக்கு இன்னும் கல்யாண ஆசை வரவில்லை. அந்தத் திட்டமும் இல்லை என்று கூறினாராம் நீத்து.



## நல்ல பெயர் எடுக்கவேண்டும் - மீரா

கை நிறையப் படங்கள் வேண்டும், தனி நாயகியாகவே நடிக்கவேண்டும் என்றெல்லாம் எனக்கு எந்த ஆசையும் இல்லை. நான்கு படத்தில் நடித்தாலும் நல்ல நடிகையாகத் திகழ வேண்டும் என்று அடக்கமாகப் பேசுகிறார் மீரா வாசுதேவன்.

விவாகரத்துக்குப் பின்னர் மீண்டும் நடிப்பில் கவனம் செலுத்தி வருகிறார் மீரா வாசுதேவன். மலையாளத்து வில்லன் நடிகருடன் புதுக் காதலில் ஈடுபட்டிருக்கும் மீரா தற்போது ஹிந்திப் படம் ஒன்றில் நடிக்கிறாராம். அதேபோல மலையாளத்திலும் ஒரு படத்தில் நடிக்கிறார்.

'ஆட்டநாயகன்' படத்தில் அவரது வேடத்திற்கு, பாராட்டுக்கள் குவிகின்றனவாம். இதைச் சொல்லி மகிழும் மீரா தெரிவித்ததாவது, புதிய பட வாய்ப்புகள் வருகின்றன. நல்ல கதைகளைத் தேர்வுசெய்து நடிக்கப் போகிறேன்.

தமிழில் நிறையப் படங்களில் நடிக்க ஆசையாக உள்ளேன். நல்ல வேடங்கள் கிடைத்தால் போதும், தாராளமாக நடிக்க நான் தயார் என்கிறார் மீரா வாசுதேவன்.

தனி நாயகியாக மட்டுமே நடிப்பேன் என்றெல்லாம் கூறமாட்டாராம் மீரா. நல்ல நடிகை என்று பெயரெடுக்க ஆசை என்கிறார்.



நீத்து சந்திரா



## தெலுங்குக்குப் போகிறார் தமன்னா

தமன்னாவுக்கு தமிழில் புதிய படம் எதுவும் இல்லையாம். படம் எதும் வராத நிலை இல்லை, அவர்தான் புதிய படங்கள் எதிலும் ஒப்பந்தமாகவில்லையாம். காரணம், தெலுங்கில் 3 புதிய படங்களில் நடிக்கப்போவதால் தமிழ் படங்களில் தற்போது நடிக்கமுடியாதுள்ளதாம்.

'கேடி' என்ற படத்தின் மூலம் தமிழுக்கு வந்த தமன்னா கடும் முயற்சியின் விளைவாக தமிழில் முதல் இடத்தைப் பிடித்தவர். வந்த வேகத்தில் முக்கிய நடிகர்களுடன் ஜோடி சேர்ந்து சிறந்த நடிகையானவர்.

அண்ணன் சூர்யாவுடன் 'அயன்' படத்தில் நடித்தவர் தம்பி கார்த்தியுடன் 'பையா' படத்தில் ஜோடி சேர்ந்தார். அதையடுத்து மீண்டும் கார்த்தியுடன் சேர்ந்து 'சிறுத்தை' படத்திலும் நடித்துள்ளார். அடுத்து தனுஷுடன் 'வேங்கை' படத்தில் நடித்து வருகிறார்.

இந்தப் படத்தைத் தொடர்ந்து அவர் தெலுங்குக்குப் போகிறார். தெலுங்கில் மூன்று படங்களில் நடிக்கவுள்ளார். இதனால் தமிழில் படம் எதையும் ஒப்புக்கொள்ளவில்லையாம். 2011 ஆம் ஆண்டு பிற்பகுதியில்தான் தமிழுக்கு வரத்திட்டமிட்டுள்ளாராம்.



## மீண்டும் ஹிந்திக்கு போகிறார் ஸ்னிக்தா

தமிழில் வாய்ப்புகள் எதும் வராததால் கவலை அடைந்துள்ள நடிகை ஸ்னிக்தா ஹிந்திக்குத் திரும்புகிறாராம்.

'அஞ்சாதே' படத்தில் இடம்பெற்ற கத்தாழைக் கண்ணாலே குத்துப் பாட்டு மூலம் தமிழ் சினிமாவுக்கு வந்தவர் ஸ்னிக்தா. அவரது பளிச் என்ற அழகும், அசத்தல் கவர்ச்சியும் அவரை சிறந்த குத்துப் பாட்டு ராணியாக மாற்றும் எனப் பலரும் நம்பினர்.

ஆனாலும் அவரை நாயகியாக்குவதாக உறுதி அளித்து, அறிமுகப்படுத்தினார் இயக்குநர் மிஷ்கின். இதனால் குஷியான ஸ்னிக்தா முழுநேரக் குத்துப் பாட்டு ராணியாக மாறும் முடிவை தள்ளி வைத்து விட்டு மிஷ்கினின் 'நந்தலாலா' படத்தில் நடிக்கப் போய்விட்டார்.

படம் நீண்ட இடை வெளிக்குப் பின்னர் திரைக்குவந்தது. இதில் ஸ்னிக்தாவின் நடிப்பு பரவலாகப் பேசப்பட்ட போதிலும் அவரைத் தேடிப் பட வாய்ப்புகள் வரவில்லையாம். குத்துப் பாட்டுக்கு ஆடுமாறு கேட்டுத்தான் நிறைய வாய்ப்புகள் வருகின்றனவாம்.

இதனால் குழப்பிப்போன ஸ்னிக்தா இப்போதைக்கு தமிழ் வேண்டாம் என்று முடிவுசெய்துள்ளாராம். மீண்டும் ஹிந்தியில் தீவிர கவனம் செலுத்தப் போவதாகவும் அவர் கூறுகிறாராம்.

## கிரிக்கெட் வர்ணனையாளர் மந்த்ரா பேடியின் கவர்ச்சி போஸ்



'வோக்' பத்திரிகைக்கு 'டொப்லெஸ் போஸ்' கொடுத்து ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்துள்ளார் நடிகை மந்திரா பேடி.

திருமணத்துக்குப் பின்புதான் சில நடிகைகள் கூடுதலாக கவர்ச்சி காட்டி திக்குமுக்காட வைப்பார்கள். இத்தகைய நடிகைகளில் முதலிடம் மந்திரா பேடிக்குதான். முப்பதுகளின் இறுதியில் இருக்கும் அவர், கிரிக்கெட் வர்ணனை என்ற பெயரில் அடித்த கவர்ச்சி லூட்டியில் ரசிகர்கள் ஓட்டங்களை மறந்துவிட்டு அவரது புடைவைக் கட்டும் கவர்ச்சியில் லயித்துப் போயினர். இப்போது சர்வதேச பத்திரிகையான 'வோக்' பத்திரிகையின் இந்த மாத இதழுக்கு மேலாடை இல்லாமல் படு கவர்ச்சியாக போஸ் கொடுத்து கதிகலங்க வைத்துள்ளார் மந்திரா. இடுப்பில் ஒரு மினி ஸ்கேர்ட் மட்டும் பெயருக்கு அணிந்துள்ள மந்திரா, முன்னழகுக்குக் குறுக்கே கைகளை வைத்தபடி போஸ் தந்துள்ளார். கூடவே இந்த 38 வயதிலும் உடலை கின்னென்று கச்சிதமாகவும், பார்ப்போரை கவரும் வகையிலும் வைத்திருப்பது குறித்து பேட்டியும் அளித்துள்ளார்.

## முதலில் ஸ்ருதி பின்னர் த்ரிஷா தற்போது ஹன்சிகா

உதயநிதி நடிக்கும் 'நண்பேன்டா' படத்தின் ஹீரோயினாக த்ரிஷா ஒப்பந்தம் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட நிலையில், இப்போது அவருக்குப் பதில் ஹன்ஸிகா மோத்வானி நடிப்பார் என்று அறிவித்துள்ளனர். தமிழ் சினிமாவின் முதல்நிலை தயாரிப்பாளர் உதயநிதி ஸ்டாலின். இப்போது ஹீரோவாகவும் அவதாரம் எடுத்துள்ளார். இந்தப் படத்தை ராஜேஷ் எம் இயக்குகிறார். 'சிவா மனசுல சக்தி', 'பாஸ் என்கிற பாஸ்கரன்' ஆகிய படங்களை இயக்கியவர் இவர். 'நண்பேன்டா' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த நகைச்சுவைப் படத்தில் உதயநிதிக்கு ஜோடியாக ஸ்ருதிஹாஸன் நடிப்பார் என்றார்கள். பின்னர் த்ரிஷா நடிப்பார் என்று அறிவித்தவர்.


இப்போது த்ரிஷாவுக்கு பதில் ஹன்ஸிகா மோத்வானி நடிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு அதிகபட்ச சம்பளமும் பேசப்பட்டுள்ளதாம். எதிர்வரும் மார்ச் மாதம் படப்பிடிப்பு தொடங்குகின்றது.

இதுகுறித்து ஹன்ஸிகா கூறுகையில், "இந்தக் கதை மிக அருமையாக இருந்தது. அதுமட்டுமல்ல, உதயநிதி ஸ்டாலின் எனக்குப் பிடித்த தயாரிப்பாளர். புதுமுகம் என்றாலும் பெரிய ஹீரோ... சந்தோஷமாக ஒப்புக்கொண்டேன். இந்தப் படம் நிச்சயம் என் வாழ்க்கையில் பெரும் திருப்பு முனையைத் தரும் என நம்புகிறேன்" என்றார்.









அபிநயக் ஷேத்ரா நடனப் பள்ளி இயக்குனர் செல்வி - திவ்யா சிவனேசனும் அவரது மாணவிகளும் இணைந்து வழங்கும் நடன நிகழ்வு 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் இறுதி நாள் விழாவில் இடம் பெறவுள்ளது.

இறுதிநாள் விழா வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் மாலை 5.00 மணிக்கு இடம்பெற விருப்பது குறிப்பிடத்தக்கது.



ராணி முகர்ஜியும் வித்யா பாலனும் உதட்டோடு உதடு வைத்து கொடுத்த முத்தம் பாலிவுட்டில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. திரைக்கு வர உள்ள நோ ஒன் கில்ட் ஜெசிகா படத்தில் நடிக்கும்போது. நடிகை ராணி முகர்ஜிக்கும் வித்யா பாலனுக்கும் பிரச்சினை என சமீபத்தில் வெளியான தகவல் பாலிவுட்டில் சலசலப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில் டிவி நிகழ்ச்சி ஒன்றுக்காக இருவரும் சந்தித்தனர். அருகருகே அமர்ந்து மனம் விட்டு பேசினர்.

நாம் அடிக்கடி மோதிக் கொள்வதாக கிசுகிசு வருகிறது தெரியுமா என முகர்ஜி பேச்சை தொடங்கினார். "ஆமாம். அதைப் பார்த்து அப்செட் ஆகியிருக்கிறேன். என்னைப் பற்றி நீ விமர்சித்ததாக சிலர் கூறினர். அதனால் அன்று முழுக்க மூட் அவுட் ஆகிவிட்டேன். பின் உன்னுடன் நான் போனில் பேசினேன். அப்போதுதான் எல்லாமே பொய் என தெரிந்தது. உண்மையிலேயே நமக்குள் மோதல் இல்லை" என்றார்.




சரியான
அன்பளிப்பு
பளிங்கு
&
கிளாஸ் வகைகள்
பயிடஸ் ஸ்போஸ்
லிபட்டி பிளாசா 2574446
புறக்கோட்டை 2439422





# உங்கள் கனவு இப்போது கைக்கெட்டிய தூரத்தில்...

சர்வதேச தொழிற்சந்தைக்கு உங்களை தகுதியாக்கிக்கொண்டு சுபீட்சத்தை நோக்கி செல்ல இதோ ஒரு அரிய வாய்ப்பு...

## Certificate Course in Aluminium Fabricating Technician

### அலுமினியம் புனைதல் தொழில்நுட்பவியலாளர் சான்றிதழ் பயிற்சி நெறி

அலுமினியம் புனைதல் துறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்பை நோக்காக கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற தொழிற்பயிற்சி நெறி

Certificate Course in Aluminium Fabricating Technician is aimed to cater to the needs of local and International job market.

## Certificate Course in Electrical Technician

### மின்தொழில்நுட்பவியலாளர் சான்றிதழ் பயிற்சி நெறி

மின்சாரவியல் துறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்பு மற்றும் மேற்படிப்பை நோக்காக கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற தொழிற்பயிற்சி நெறி.

Certificate Course in Electrical Technician programme is aimed to cater to the needs of local and International job market.

## Certificate Course in Welding Technology (4G)

### உருக்கி ஒட்டுதல் (4G) தொழில்நுட்ப சான்றிதழ் பயிற்சி நெறி

உருக்கி ஒட்டுதல் துறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டில் தொழில் வாய்ப்பு நோக்காக கொண்டு முன்னெடுக்கப்படும் சர்வதேசத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நெறி.

Certificate Course in Welding Technology (4G) is aimed to cater to the needs of local and International job market.

ADinnovations

**CINEC**
**Jaffna Campus**
BRANCH OF CINEC MARITIME CAMPUS

வகுப்புக்கள் ஆரம்பம் 15-01-2011
பதிவுகள் இப்போது...

KKS Road, Maruthanamadam, Jaffna District.
Tel: 021 4 925 925 Gen. Hotline: 011 4 486 486
E-mail: infojaffna@cinec.edu

World Class Excellence in Education and Training www.cinec.edu



# SONDERVERKAUF

Möbel Ferrari

-70%

Auf alle markierten Artikel

Wässeristrasse 28
HINWIL Tel. 044 931 20 40 Fax 044 931 20 49
www.moebel-ferrari.ch

Direkt-Kedit
– 6 Monate ohne Zins


இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2011, ஜனவரி 09ஆம் திகதி வெளியிடப்பட்டது.